பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
tamilnenjam.com
அக்டோபர் 2025

## வட்டாட்சியார் மரபுக்கவிஞரானார் லோகநாதன் ஜி

நேர்காணல்






கலிவிருத்தம் பெரியார்



காட்டின் மொழி



நேர வங்கி



வேரான விழுதுகள்



## பாவேந்தரும் சுரதாவும்

வாழ்க்கைக் குறிப்புகள்



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – அக்டோபர் 2025

646

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறுாக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

*அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களே வணக்கம்!*

*உங்களோடு இணைந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி!*

*இந்த அக்டோபர் மாதமும் நிறைய விசேட தினங்களை சுமந்தபடி அரும்பியிருக்கிறது.*

*அவற்றுள் உலக தபால் நாள் (அக்டோபர் 9), உலக மனநலம் நாள் (அக்டோபர் 10), உலகத் தர நிர்ணய நாள் (அக்டோபர் 14), உலக உணவு நாள் (அக்டோபர் 16), ஐ.நா. தினம் (அக்டோபர் 24), உலக சிக்கன தினம் (அக்டோபர் 30) போன்ற பல சர்வதேச தினங்கள் அனுசரிக்கப்படுகின்றன.*

*அத்தோடு அகிம்சாவாதியாக உலகம் முழுவதுமாகக் கொண்டாடப் பட்ட மகாத்மா காந்தியின் பிறந்ததினம் இம்மாதம் 2 ஆம் திகதி ஆகும்.*

*கூடவே தீபாவளியும் இந்த மாதம் மலரவுள்ளது. இது கொண்டாடுவதில் இன்றுவரை பல சர்ச்சைகள் நிகழ்வதைப் பரவலாகக் காணலாம். இணையத்தில் அதிகம் தேடப்பட்ட கேள்விகளுள் தீபாவளி ஏன் கொண்டாடப் படுகிறது என்னும் கேள்வியும் ஒன்றாகும்.*

*இது இராம பக்தர்களுக்கு 14 ஆண்டுகளின் வனவாசத்திற்குப் பின் இராமர் வீடு திரும்பியதைக் கொண்டாடி நினைவுகூரும் நாளாகவும், நரகாசுரனை கிருஷ்ணர் வென்று தீமைகளைக் களைந்த ஒரு நாளாக தென்னிந்தியாவிலும் கொண்டாடப் பட்டு வருவதுடன், பல இந்திய மாநிலங்களில் அறுவடைக் காலத்தையொட்டி நிகழும் விழாவாகவும் கொண்டாடப் பட்டு வருகிறது. இருப்பினும், இதன் கொண்டாட்ட முறைகள் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வேறுபட்டும் காணப்படுகிறது. எது எப்படியாயினும் அனைவரின் மனமொத்து ஒற்றுமையாகக் கொண்டாடப்படுதல் சிறப்பு! தீயனவற்றை கொளுத்தி மகிழும் ஒரு திருவிழாவாக இந்நாள் அமையப் பிரார்த்தனைகளோடு, கொண்டாடும் அனைவருக்கும் தீபத்திருநாள் வாழ்த்துகள்!*

*இம்மாத இதழும் பல பயன்தரும் சுவைமிக்க ஆக்கங்களை சுமந்து வந்திருக்கிறது. படித்து ரசித்து விட்டு, உங்கள் பெறுமதியான கருத்துக்களால் எமக்கு ஊக்கமளியுங்கள்!*

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

சம்பாஷனை வெண்பா

# போற்றி வணங்கு

•
அமின் : -
•
என்னடா தம்பீ
எதற்குக் கலங்குகிறாய்
உன்னுடைய துக்க
உணர்வுகளை - என்னிடம்
சொல்ல விரும்பினால்
சொல்லேன் வழிசொல்வேன்
சொல்லாக்கால் ஏதறிவேன்
சொல்.

•
ஏடி : -
•
எல்லார் செயலும்
இழுக்காய் அமைகிறது
எல்லார் குணமும்
இரக்கமில்லைத் - தொல்லுலகில்
போற்றுதற்கோர் ஆளில்லை
போற்றும் செயலில்லை
தூற்றத்தான் ஆகிறது
த்தூ.

•
அமின் : -
•
போற்றும் செயலிலையா
போற்றுதற்கு ஆளிலையா
ஏற்ற இரக்கத்தில்
ஏன்பேசித் - தூற்றுகிறாய்ப்
பாராட்டும் வண்ணம்
பற்பலவும் உள்ளதடா
ஆராய்து பாரேன்
அதை.

•
ஏடி : -
•
பாதிக்கப் பட்டதனால்
பாதையின்றி பேசுகிறேன்
ஆதலினால் தானே
அழுகின்றேன் - மேதினியில்
ஓங்கிப் புகழ்வதறகும்
ஒப்பற்று போற்றுதற்கும்
ஈங்கென்ன உள்ள(து)
இயம்பு?

•
அமின் : -
•
கெட்டதை மட்டும்நீ
கேட்கின்றாய்; உன்னைக்கை
விட்டதை மட்டும்
விளம்புகிறாய் - எட்டிநின்று
காணாமல் மக்கள்
கவின்மனப் போக்குகளைத்
தேனாய்நீ கண்டு
தெளி.

•
ஏடி : -
•
தெளிகின்ற வண்ணம்
தெரிந்ததைச் சொல்லிக்
களிக்கின்ற வண்ணங்
கதைத்தால் - துளியளவு
நெஞ்சம் மகிழ்வேன்
நினைவில் அதைவைப்பேன்
அஞ்சா திருப்பேன்
அகம்.

•
அமின் : -
•
உச்சி வெயிலில்நீ
ஊருக்குப் போகுங்கால்
அச்சச்சோ பாதம்
அனல்பாய - அச்சமயம்
தண்ணீர் கொடுப்பவரை
தான்போற்றி நீவணங்க
எண்ணம் எழிலாகும்
இங்கு.

•
ஏடி : -
•
என்னாய்யா நீங்கள்
இதெல்லாம் உதவியா
எண்ணமெல்லாம் இஃதால்
எழிலாமா? - இன்னுமின்னும்
எத்தனைபேர் உள்ளார்
இடர்பாடு அளிப்பவர்கள்
அத்தனையும் தூற்றுதற்கே
ஆம்.

•
அமின் : -
•
கந்துவட்டிக் காரன்
கடிந்துரைத்துன் வாசல்முன்
வந்துநிற்ன்று பேசியுனை
வையுங்கால் - அந்தநேரம்
பக்கத்து வீட்டார்ப்
பணங்கொடுக்கும் அம்மனத்தை
எக்காலும் போற்றலா
மே.

•
ஏடி : -
•
சாதி ஒழியவில்லை
சத்தியம் தோற்றிங்கே
ஆதிமுதல் வேற்றுமை
அப்படியே - சோதிக்க
போற்றுவதும் எங்கே
புகழ்வதும் தானெங்கே
தூற்றுவது மட்டும்
துயர்.

•
அமின் : -
•
காதல் திருமணங்கள்
காலமெலாம் இம்மண்ணில்
மோதலின்றி எங்கும்
முடிந்துவர - பாதகமே
அன்றிப் புகழ
அழகான ஓர்செயலை
என்றும்நீ போற்றி
இரேன்.

•
ஏடி : -
•
பட்டம் படித்தோர்க்குப்
பாருக்குள் வேலையின்றி
நட்டத்தில் வாழ்வை
நகர்த்துகிறார் - திட்டமிட்ட
இந்த நிலையைநான்
எவ்வாறு போற்றுவது
எந்த வழியும்
இலை.

## ஏ டி. வரதராசன்

.
அமின் : -
.
போட்டிக்குத் தேர்வுகள்
போழ்தெல்லாம் நேர்க்காணல்
நாட்டில் இருப்பதை
நாடறியும் - ஏட்டைப்
படித்த உடனே
பணியமர்த்தும் இந்த
விடியலர சைபோற்றேன்
வேர்த்து .
.
ஏடி : -
.
அன்னைத் தமிழே
அழியும் நிலையிலிங்கு
என்னென்ன வோநடந்து
ஏறுவதைக் - கண்ணுற்று
தூற்றுவதை அன்றி
துயறுற்று வாடலன்றி
வேற்றென்ன செய்வேன்
விளம்பு.

.
அமின் : -
.
முற்றிலும் பார்த்தால்
முகநூல் குழுமங்கள்
பற்றுடன் இங்கே
பயணித்து - நற்றமிழை
வாழ்வாங்கு வாழ
வகைசெய்து உள்ளதனைப்
போழ்தெல்லாம் போற்றலாம்
போ.
.
ஏடி : -
.
எந்தக் குழுமத்தில்
ஏற்றம் இறக்கமற
அந்தமிழின் போட்டி
அரங்கேறும் - வந்துபார்த்தால்
எல்லா அரசியல்
எல்லாம் பணமயம்
எல்லாமே ஏமாற்றம்
இங்கு.



# தமிழ்நெஞ்சம் அமின்

.

அமின் : -

.

தஞ்சைத் தமிழ்மன்றம்
தானியங்கிச் செந்தமிழைக்
கொஞ்சி வளர்த்துக்
குளிர்கிறதே - அஞ்சாமல்
நேர்மையுடன் பாராட்டு
நீயதனை; அக்குழுமம்
சீர்மையுடன் உள்ளதென
செப்பு.

.

ஏடி : -

.

எல்லாம் சரிதான்
இதில்யார் தமிழ்வளர்க்க
நல்ல செயலை
நடத்துகிறார்? - செல்லாச்
செயல்செய்தே சில்லரையைச்
சேர்ப்பதற்குப் பார்க்கின்றார்
சொல்வதற்கு என்னவுண்டு
சொல்?

.

அமின் : -

.

இந்தக் குழுவில்
இராமவேலர் உள்ளாரே
செந்தமிழை மேன்மேலுஞ்
சீரமைத்து - உந்திவரும்
பாவலர்க்கு ஊக்கமும்
பைந்தமிழின் ஆக்கமும்
காவலாக வும்உள்ளார்
காண்.

.

ஏடி : -

.

எந்தவொரு திங்களிதழ்
இங்கே தமிழ்வளர்த்து
எந்தவொரு செய்யுளை
ஏற்றிவைத்து - இந்தநற்
காரியத்தைச் செய்கிறது
கண்டறிந்து என்னிடத்தில்
பேரிட்டுச் சொல்வீர்
பிரித்து.

.

அமின் : -

.

தங்கத் தமிழ்த்தாயைத்
தாங்கி அரவணைத்து
எங்குமுள்ள பாவலரை
ஏற்றிவிட்டு - இங்கே
தமிழுக்காய் வாழுந்
தமிழ்நெஞ்சம் உள்ள(து)
அமின்நான் நடத்துகிறேன்
ஆம்.



# ஒளி பேசும் மொழி




**நெல்லை க. சோமசுந்தரி**

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்
சென்னை, தமிழ்நாடு


## 31

அக்னி ஒளியின் தீபத்தினை ஆதாரமாகக் கொண்டு விளங்கும் அண்ணா மலையாரின் ஆலயமானது, விண்ணை முட்டும் உயர்ந்த கோபுரங்கள் மட்டுமின்றி, உட்பிரகாரத்தில் பல நிலைகளில் மண்டபங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டபமும், ஒவ்வொரு விதத்தில் பயன்படும் விதமாகக் காரண காரியங்களுடன் எழுப்பப்பட்டுள்ளது. அவ்வகை மண்டபங்கள் சிறிய மற்றும் பிரம்மாண்டமாக மிகப்பெரிய அளவிலும் கட்டப்பட்டுள்ளது. அவைகளில் வளை காப்பு மண்டபம், புரவி மண்டபம், காட்சி மண்டபம், அமாவாசை மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்றும் தனித் தனிப் பெயர்களில் இன்றும் சிறப்புடன் இவ்வாலயத்தில் அழைக்கப்படுகிறது.

இதில் வளைகாப்பு மண்டபமானது, கம்பத்து இளையனார் சன்னதிக்குப் பின்புறம்




அதனை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் உள்ள மேடையானது, நான்கு தூண்களைக் கொண்டிருப்பதோடு மட்டுமின்றி, அவற்றில் ஒன்றையொன்று பார்த்தவாறு திசைக்கு இரண்டாக எட்டு தூண் உயரச் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. கிழக்கில் உள்ள இரு தூண்களில் ஒருவரையொருவர் நோக்கியவாறு இரு மன்னர்களின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலைகளானது, உயிருள்ள மானிடர்கள் இருவர் வந்து, நம் முன் நிற்பது போன்று காட்சியளிக்கிறது. மன்னர்கள் அணியும் மகுடம், மணி மாலை ஆபரணங்கள் மற்றும் அவர்கள் அணியும் ராஜ உடைகளின் மடிப்பும், அதன் வளைவும், கை மற்றும் கால்களில் அணிந்துள்ள அலங்கார அணிகலன்களும், அவற்றினுள் துள்ளி ஆடும் சிறு மணிகளும் மிகத் துல்லியமாகவும் நுட்பமாகவும், செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் வெளிப்புறமாகப் பனிரெண்டு தூண்களும், அவை ஒவ்வொன்றும் அழகிய சிற்பங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் வடமேற்கு மூலையில் உள்ள தூணில் செதுக்கப்பட்டுள்ள புலிக்கால் முனிவரின் தூண் உயர அழகிய சிற்பமானது, இடுப்பிற்கு மேல் மனித அங்கங்களுடன், கீழ்ப்பகுதியில் புலியின் கால்களுடன் கைகூப்பி வணங்கி நின்ற நிலையில் தத்ரூபமாகக் காணப்படுகிறது. மனிதன் மற்றும் விலங்கின் அவயங்களை ஒற்றைச் சிற்பத்தில் ஒருங்கிணைத்திருப்பதுடன் அச்சிற்பமானது தோற்றத்தில் எவ்விதச் சிறு மாறுபாடும் காண முடியாத அளவில் மிக நேர்த்தியுடன் அக்கால சிற்பக் கலைஞரின் கைவண்ணத்தை நம் கண் முன்னே இன்றும் காட்சியாக எடுத்துரைக்கிறது. மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ள மேடை மீதுள்ள கூரைப்பகுதியானது, அம்மண்டபத்தினைச் சுற்றியுள்ள கூரைப்பகுதியினை விடச் சற்று உயர்வாகக் கட்டப்பட்டுள்ளது. அதன் நடுவில் பூவினால், அலங்கரிக்கப்பட்ட

சிற்பமும் அதனைச் சுற்றி இரும்பு வளையங்களும், அம்மண்டபத்தின் அழகுக்கு மேலும் அணி சேர்க்கிறது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த மண்டபத்தில், ஆடிப்பூரப் பிரம்மோற்சவத்தின் முக்கிய விழாவாகக் கருதப்படும் உண்ணாமுலை பராசக்தி அம்மன் வளைகாப்பு விழாவானது ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கிளி கோபுரத்தின் முன்புறம் அமைந்துள்ள மண்டபமானது, புரவி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு செவ்வக மண்டபம் எனவும் வழங்கப் படுகிறது. இங்கு நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மேலும், தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடையும் காட்சியானது பகுதி பகுதியாகத் தீட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தினை அடுத்து மூன்றாம் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்டபமானது, காட்சி மண்டபம் என வழங்கப்படுகிறது. இம்மண்டபமானது, பதினாறு தூண்களைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. திருக்கார்த்திகைத் தினத்தன்று அர்த்தநாரீஸ்வரர் என்னும் உமையொரு பாகன் எழுந்தருளிக் காட்சி தரும் மண்டபம் ஆதலால் இதனைக் காட்சி மண்டபம் என்று அழைக்கின்றார்கள். மேலும், இம்மண்டபத்தில் பஞ்ச மூர்த்திகளான விநாயகர், முருகன், சிவன், பார்வதி மற்றும் சண்டிகேசுவரர் ஆகிய தெய்வங்கள் எழுந்தருளித் தீப வழிபாடு நடைபெறுகிறது. அதன் வழியே, நான்காம் பிரகாரத்தின் தென்மேற்கில் அமாவாசை மண்டபம் அமைந்துள்ளது. மாதந்தோறும் அமாவாசைத் தினத்தன்று சந்திரசேகருக்கு இங்கு வழிபாடு மற்றும் பூஜைகள் நடத்தப்படுவதால் அப்பெயரிலேயே இம்மண்டபமும் வழங்கப்படுகிறது. இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பல மண்டபங்களும் சிற்பக்கலையின் நுட்பத்தினை வெளிப்படுத்தும் விதத்தில் பல வகையான சிறப்புப் பெற்ற தெய்வங்கள் மட்டுமின்றி, பிரசித்தி பெற்ற அக்காலகட்டங்களில் வாழ்ந்த மானிடர்களின் சிற்பங்களும் செதுக்கப்பட்டு மண்டபத்தின் அழகுக்கு மேலும் எழில் கூட்டுகிறது.

இம்மண்டபங்கள் அனைத்திற்கும்








சிகரம் வைத்தாற் போல ஆயிரம் கல் தூண்களை நிறுத்தி மிகப்பெரிய பிரமாண்டமான மண்டபமானது இவ்வாலயத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இது ஆயிரம் கல் தூண்களைக் கொண்டுள்ளதால்"ஆயிரங்கால் மண்டபம்" என்று அழைக்கப்படுகிறது. இம்மண்டபமானது விஜயநகரப் பேரரசர்களில் பிரசித்தி பெற்ற அரசர் கிருஷ்ணதேவராயால் கட்டப்பட்டுள்ளது. இங்கு நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு தூண்களும் அழகிய கலை நயத்துடன் கூடிய சிற்பங்களைச் செதுக்கி அழகு மிளிரக் காட்சியளிக்கிறது. சிற்பங்களைப் பார்க்கும் பொழுதுத் தெய்வங்கள் மற்றும் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது. மகளிர் கோலாட்டம் மற்றும் வீரர்களின் விளையாட்டுகள் இந்தத் தூண்களில் கலைநயத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. அனைத்துத் தூண்களும் ஒரே அளவினை ஒத்து சற்றும் பிறழாமல் ஒரே நேர்க்கோட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் சிவபெருமானின் திரு நடனக்காட்சியின் வெவ்வேறு நிலைகளையும் ஓவியங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இங்குள்ள கல் தூண்களில் சிற்பங்களைக் காணும்பொழுது, ஒரு சவுக்கு தோப்பின் உள்ளே நாம் செல்லும்பொழுது அந்தத் தோப்பின் உடைய வடிவமானது அங்கு எவ்வாறு மரங்கள் எத்திசைப் பார்த்தாலும் ஒன்றுபோல் அதே வடிவத்தில் இருக்குமோ, அதே மாதிரி இங்கு நிறுத்தப்பட்டுள்ள அந்தத் தூண்களினுடைய சிற்ப அழகானது நம் கண்களுக்குப் பிரித்துப் பார்க்க முடியாமல், கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. சிற்பங்களும் ஓவியங்களும் ஒன்றிணைந்து நிறைந்து காணப்படும் இம்மண்டபமானது கலையின் சிகரத்தினை நம் முன்னே மிக அழகாக நிலை நிறுத்துகிறது. இவ்வளவு சிறப்புப் பெற்ற மண்டபத்தில் ஆனித் திருமஞ்சனம், திருவாதிரை ஆகிய நாட்களில் நடராஜ பெருமான் எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

ஆயிரங்கால் மண்டபத்தின் மேற்குப் புறம் பாதாள அறையில் அமைந்துள்ளது "பாதாள லிங்கம்" சன்னதி ஆகும். இங்குப் பாதாளலிங்கமும், சிற்பமும், நந்தியும் எழுந்தருளியுள்ளனர். இங்கு அமைந்துள்ள தூண்களில் போதிகைகள் (போதிகை என்பது, கட்டிடங்களில் தூண்களின் மேற்பகுதியாக அமைந்து மேலுள்ள வளையைத் தாங்கும் வகையில் அமைந்த, தூணின் ஒரு கூறு ஆகும்) காணப்படுகின்றது. இந்தப் பாதாள லிங்கத்தின் அறையில் தான் இரமண மகரிஷி அவர்கள் பல நாட்கள் ஆகாரமின்றித் தவமிருந்து இறைவனின் அருளைப் பெற்றார். கலை எழில் கொண்ட மண்டபங்களைப் போலவே கலையினையும், சிற்பத்தின் நுட்பத்தினையும் வெளிப்படுத்தும் அண்ணாமலையார் ஆலயத்தின் மற்ற சிறப்பினை மேலும் அறிந்து கொள்ள உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்.

(உளியின் மொழி தொடரும்)



# இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு

பதினாறாம் நூற்றாண்டின் காலந் தொட்டுப்
பிறமதத்தார் சிலகாலம் படைப்பின் தேக்கக்
கதிகொண்டார் தொய்வுதனை நிமிர்த்த முஸ்லிம்
கவிப்புலமைச் சான்றோர்கள் தோள்தந் தார்கள்
மதியுடையோர் ஒப்புவரே காழ்ப்பைக் கொன்றால்
முஸ்லிம்கள் காலமது வென்ப தாக
அதிகமவை இஸ்லாத்தின் வழியுண் டான
ஆக்கப்பெரு இலக்கியங்கள் அறியா ருண்டோ

தனிமனித புகழ்பாடும் இலக்கி யங்கள்
சிற்றின்பச் சுவைகூட்டும் விழல்கள் தோன்றி
மனுக்குலத்தை அழிவின்பால் ஈர்க்கக் கண்டு
மாற்றுவழி கண்டார்கள் புலவோர் அந்நாள்
நனியேற்கக் காப்பியங்கள் ஞான நூற்கள்
நற்றமிழ்ச்சிற் றிலக்கியங்கள் படைத்த ளித்தார்
கனஞ்சேர்த்த தவையனைத்தும் தமிழுக்கான
கருவூல மாம்முஸ்லிம் பேர்பங் காகும்

பற்பலவாய் இலக்கியங்கள் செய்தார் எம்மோர்
பழந்தமிழின் மரபுகளைப் போற்றி மேலும்
நற்றமிழின் கோன்மைக்கு முஸ்லீ மல்லார்
நல்கியதற் கீடாக அதற்கும் மேலாய்
முற்றுந்தமிழ் இலக்கியத்தின் வடிவம் சேரா
"முனாஜாத்து""கிஸ்ஸா""மசாலா""நாமா"
அற்புமே அவையோடு"படைப்போர்" என்ற
அத்தனையும் நம்மவர்பால் கிடைத்த தாகும்.
"அம்மானை""அந்தாதி""பிள்ளைத் தமிழ்"
"ஆற்றுப்படை""புராணங்கள்""பாவை""கோவை"

செம்மையுற"மாலை"யொடு"கலம்ப கம்"மும்
செய்தார்கள் முஸ்லிம்கள் தமிழுக் கீந்தார்
தம்மொழியின் மரபொடியா வாறு மாற்றுச்
சொந்தமெனக் கொண்டவழி பற்றி மார்க்க
உண்மைகளை புனிதர்தம் வாழ்வு தம்மை
ஒன்றுறவே செய்தார்கள் ஒப்பச் சாலும்.

கதைசொல்லும் பாங்குடைய "கிஸ்ஸா""நாமா"
கூறுவதோ வரலாற்றைச் சரித்தி ரத்தை
பொதுவாக முஸ்லிம்கள் செய்த யுத்தம்
பற்பலவும்"படைப்போருள்" அடங்க லாகும்
புதிர்விடுத்தல் வினாவிடைகள்"மசாலா" வாகும்
படைத்தவனின் அருன்வேட்டல்"முனாஜாத்" ஆகும்
புதிதுவிவை தமிழுக்குப் பார சீக
பாலைவன மொழியறபு வழித்தோன் றல்கள்

எண்ணிக்கைப் பெருக்கத்தில் மட்டு மன்றி
ஏற்றகரு உருவினிலும் உயர்ந்த தாகும்
மனிதவாழ்வு சிறப்பதற்கு இஸ்லாம் கூறும்
முறையான வழிமுறையை எடுத்துக் கூறும்
தொனிப்பொருளே விஞ்சிநிற்கும் இலக்கி யங்கள்
தாமவைகள் மார்க்கஞானம் மிகுந்த பேர்தம்
புனைவற்ற  சத்தியத்தின் வெளிப்பா டாகும்
பண்ணவன்றம் அருட்கொடையின் பொருட்டின் பேறே.

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
**(இலங்கை)**







# சிறகுகள் சிறைபடுவதில்லை

எழுத்தாக்கம்:

**குயில்.மு.இரசியா பேகம்** தஞ்சை

## 15. புவனா

அன்று மாலை மயங்கும் நேரம்..

அந்த ஊர் பெயர் பொன் மான் மேய்ந்த நல்லூர்..

அந்த ஊருக்கு ஏன் இந்த பெயர் வந்தது என்ற சரித்திரம் தெரியவில்லை...

இராஜ கேசரி சதுர்வேதி மங்கலமாகிய இராஜேந்திர கிராமத்திலிருந்து தோராயமாக 6 அல்லது 7 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும்.

அந்த ஊரில் மெய்யப்பனின் மனைவி மாதவிக்கு இடுப்புவலி இது 5 ஆவது பிரசவம். முதலில் 4 பெண் குழந்தைகள் உண்டு. 5 ஆவது ஆண் குழந்தை எதிர்பார்த்து உறவும், அக்கம்பக்கம் பெண்டுகள் கூடியிருந்தனர்.

மருத்துவம் பார்க்க அனுபசாலியான நடுவயது பெண் வந்தார்... எல்லோரும் வழி விட  உள்ளே நுழைந்த பெண் சுடு தண்ணி, சுத்தமான துணி கொண்டுவாங்க என்றாள். வெத்தலை பாக்கை மென்று கொண்டே  தன் கடமையில் கண்ணானாள்.

இரண்டு மணி நேர போராட்டத்துக்குப் பிறகு ...

மெய்ப்பா உனக்கு மீண்டும் மகாலட்சுமி என்ற சத்தம் குழந்தையின் அழுகுரல்...

மருத்துவச்சி குழந்தையை துணியில் சுற்றி கொண்டு வர... மெய்யப்பன் முகத்தில் சந்தோசத்தைக் காணவில்லை...

குழந்தையோ கொள்ளை அழகாக சிரித்தது..

புவனா விற்கு ஒருவயதாகும் போது மெய்யப்பன் பாம்பு கடித்து மாண்டுப் போனான்..

ஐந்தாவது பெண் அரசனும் ஆண்டியாவான் என்பார்கள் இந்த ஐந்தாவது பெண் அப்பனையே முழுங்கிவிட்டது என்றார்கள்...

அடி வசவு ஏச்சுகளுடன் வளர்ந்தாள் புவனா

மாதவி எப்படியோ தனியாக உழைத்து 4 பெண்களை திருமண முடித்து அனுப்பி வைத்தாள்.புவனா வயதுக்கு வந்து 16 வயதில் காமாட்சி தன் ஒரே மகனுக்கு பெண் கேட்டு வந்தாள். மாதவியும் உடனே தலையாட்டி விட்டாள். மாதவிக்கு சில நாட்களாக உடம்பு சரியாக இல்லை..

புவனாவை எப்படி நிறைவேற்றுவேன் என்ற கவலையில் இருந்தாள்.அப்போது பெண் மிக அழகாக இருக்கிறாள் நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம் நாங்களே எல்லாம் செய்துக் கொள்கிறோம் என்றது மிகுந்த சந்தோசத்தை அவளுக்கு தந்தது.மாப்பிள்ளைக்கு வெளி நாட்டில் வேலை என்ற உடன் புவனாவின் அதிருஷ்டம் என்று அகமகிழ்ந்தாள்...

திருமணம் முடித்து புவனா மாமியார்

துயில்.மு.இரசியா பேகம்



வீட்டுக்கு வந்து விட்டாள். அவளுக்கு சொர்க்கத்துக்கு வந்ததுப் போல் இருந்தது. காமாட்சி இளம் விதவை தன் மருமகளை மகளாக பார்த்தாள் தங்கமாய்த் தாங்கினாள்.கணவன் தங்கராசுவும் புவனாவை மிகவும் அன்பாக நடத்தினான். புவனாவுக்கு வேறென்ன வேண்டும்.இரண்டு மாதம் ஓடியது...

தங்கராசு மலேசியாவுக்கு புறப்பட்டு போய்விட்டான்.புவனாவை பிரிவுத்துன்பம் தாக்கியது.நாட்கள் மட்டுமல்ல வருடங்கள் 4 கடந்துப் போனது,தங்கராசுவிடமிருந்து கடிதமும் இல்லை பணமுமில்லை.

புவனாவின் அம்மாவும் இறந்துப் போனார்கள். தங்கராசுவிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை... என்னவானான் என்றே தெரியவில்லை.. யாரை விட்டு வெளிநாட்டில் தேடுவதென்றே அவர்களுக்கு புரியவில்லை..ஊமை வலியில் உயிர்சுமந்த புவனா தன் கணவன் முகத்தைக் கூட மறக்கலானாள்...

அப்போது அவளுக்கு உடம்பு முடியவில்லை என்று காமாட்சி டாக்டரிடம் அழைத்துப் போக..

அந்த இளம் டாக்டரின் இன்முகம், கனிவு புவனாவை கவர்ந்தது..

அடிக்கடி உடம்புக்கு முடியவில்லை என்று டாக்டரிடம் போக ஆரம்பித்தாள்.. நாளடைவில் ஒரு மாதிரி குற்ற உணர்ச்சியில் மன அழுத்தத்திற்கு ஆளானாள்.. தனிமையை நாடினாள்.. யாரிடமும் பேசுவதில்லை..

இது இந்தக் கிராமத்துச் சாபக்கேடு...

16 (அ)17 வயதில் திருமணம் ஓரிருமாதத்தில் வருடக் கணக்கில் பிரிவு..



பாவம் படிப்பறிவும் கிடையாது.. வீட்டு வேலைப் போக ஓய்வு..

நரம்பு தளர்ச்சி என்று சொல்லி தன்னையே ஏமாற்றி வடிகால் தேடுபவர்கள் இங்கே நிறையபேர்கள் உண்டு...

இரண்டு நாட்களுக்குமுன் மலேசியாவி லிருந்து தாயகம் வந்த சுரேஷ் காமாட்சியின் தூரத்து சொந்தம் .

வீட்டுக்கு வந்தவர் சுகம் விசாரித்தார்.. தங்க ராசு நலமா? என்றார்.

எங்கே அப்பா அவன் கடிதாசுப் போடுவ தில்லை, பணம் அனுப்புவதில்லை, ஏதோ நிலம் புலம் இருப்பதால் என் குடும்பம் ஓடுகிறது..

பொண்டாட்டி நினைவாவது அவனுக்கு இருக்கா தெரியலை..

வருசம் நாளாச்சு என்று காமாட்சி அழ ஆரம்பித்தாள் ..

அம்மா அழாதீங்க என்ற சுரேஷ் அப்போது அவனுக்கு மோர் கொண்டு வந்த புவனாவை பார்த்தார்..

பார்க்க மகாலட்சுமி மாதிரி மனைவி ,இந்த தங்கராசு ஏனிப்படி என்று தன்னையேக் கேட்டார்..

புவனா உள்ளே போனதும் ..

நான் சில மாதங்களுக்கு முன் தங்கராசுவைப் பார்த்தேன். மனைவி குழந்தையுடன் சந்தோசமாக இருக்கிறான். அந்த மார்க்கெட் ஏரியாவில் அவன் என்னை பார்த்தவுடன் பாம்பை பார்த்ததுப் போல் பதுங்கி ஓடிவிட்டான். அவனுடன் இருந்தது அவன் மனைவியும் குழந்தையும் என்று விசாரித்து தெரிந்துக் கொண்டேன்.
பின்னர் அவன் என் கண்ணில் தட்டுப் படவில்லை...

அவர் சொன்னதைக் காதில் வாட்டிய புவனா நொறுங்கிப் போனாள்...

இந்து சொன்ன இந்தக் கதைக் கேட்டு கயல் கதற முடியாது இந்து மடியில் முகம் புதைத்து விம்மி அழுதாள்...

ஏய் கயல் என்னாச்சு என்று பல முறைக் கேட்டப்பின் மெதுவாக முகம் துடைத்து ஆசுவாசப் படுத்திக் கொண்டு சொன்னாள்..

புவனா தன்னையே வெறுக்க ஆரம்பித்து இருக்கிறாள் .நானும் அதே நிலைமைத்தான்.

அவளுக்கு இரண்டு மாதக் கணவன்

தொலைந்து போனான்.. எனக்கு 16 வருடங்களாக கணவனாக அறியப்பட்டவர் எதிரே இருக்கிறார் ஆனால் என்வீட்டார் மனங்களிலெல்லாம் தொலைந்துப் போனார்..என்ற போது அவள் கண்களில் கண்ணீர் உருண்டன.. முதன் முதலில் மனந்திறந்த கயல்..பின் அமைதியானாள்...

இது ஒரு வகை மனோ அழுத்தம். நான் நிறைய புத்தகம் இது குறித்து படித்து விட்டேன்... மனோதத்துவ டாக்டரிடம் போயிருந்தால் புவனாவை காப்பாற்றி இருக்கலாம்..

அப்போது கதறி அழுதபடி காமாட்சி வீட்டில் நுழைந்தாள்...

தொடரும்



# அணைப்பாள் ஏழைத் தாயானவள்

ஆரத்தழுவிய மனமும்

அமைதியாகும் பிள்ளைகுணமும்

காசினியாய்க் கிடைக்கும் அன்னதானம்

அடிமனதில் பெருக்கெடுக்கும்

மகிழ்வின் உயிரோட்டம்...!

எதற்கும் முடிவுண்டு

ஏழ்மை வருத்தி வடிகால் காணும்வரை

கலங்கும் மனமே

இருக்கும்வரை வாழ்ந்துவிடு.


உண்டவர் கொடுத்தவர் உமிழாது

உயிர்க்காக்கும் உறவே ஊமையாயிரு

அண்டம் அழகானது அதிலே

பிண்டமாகும்வரை எதற்கும் முடிவுண்டு...!

**சக்தி.க.மகராசி**



# வேரான விழுதுகள்

தங்க.ஆரோக்கியதாசன்

"என்னங்க, நான் ஒன்னு சொன்னா நீங்க கோவிச்சிக்கக் கூடாது," "என்ன பத்மா இது புதுசா கேக்குற, கல்யாணம் ஆன இத்தன வருஷத்துல, நீ எத சொன்னாலும் நான் கேட்டுனு தானே இருக்கேன்? இப்போ என்னவோ புதுசா சொல்ற, பீடிக போடாம சட்டு புட்டுனு விஷியத்தச் சொல்லு, தூக்கம் கண்ண சொக்குது, இன்னிக்கு ஆபிசுல ரொம்ப வேல" என்று அயர்ச்சியுடன் கட்டிலில் படுத்திருந்தவனின் பக்கத்தில் வந்து அமர்ந்த அவள்,

"ஒன்னும் இல்லிங்க, இன்னிக்கு காலையிலே மேஸ்த்திரிய வரச்சொல்லி எதோ பேசினு இருந்தீங்களே, எதாவது வீடு கீடு கட்டப் போறீங்களா? என்ன? இந்த வீட்ட கட்டி முடிச்சி இப்போதானே ஆறு மாசமாவுது, அதுக்குள்ள எப்படினு கேட்டேன்."

"அது ஒன்னுமில்ல பத்மா, பே கமிசன் அரியர்ஸ் பணம் கொஞ்சம் வந்திருக்கு, கட்ன இந்த வீடும் சிக்கனமா ரெண்டு பெட்ரூம் தான் இருக்கு, நமக்கு ஒன்னும் ரெண்டு பசங்களுக்கு ஒன்னும் சரியா இருக்கு, பாவம் அப்பாவும் அம்மாவும் வயசான காலத்துல வாரன்டால படுத்துனு ரொம்ப அசௌகரியப் படுறாங்க, பக்கத்துலேயே அட்டாச் பாத்ரூமோட ஒரு ரூம் போட்டு குடுத்தா அவங்க பாட்டுக்கு நிம்மதியா இருந்திடுவாங்க"

ஏன் இப்ப மட்டும் அவங்க நிம்மதிக்கு என்ன குறைச்சல் வந்தது, ரெண்டு பேரும் நல்லாத்தானே இருக்காங்க, வேளா வேளைக்கு கொட்டிக்கிறாங்க, நிம்மதியா டி.வியில வர எல்லா சீரியலையும் ஒன்னு விடாம பார்த்துனு ரிமோட்டும் கையுமாத்தானே இருக்காங்க,

"அதுக்கு இல்ல பத்மா, வயசானவங்க, கொஞ்சம் அசதி வந்தா நிம்மதியா கால நீட்டிப் படுத்துக்குவாங்க, இங்க பாரு நாம எல்லாம் படுக்கைக்குப் போனப் பிறகு பாயப் போட்டு படுக்கறாங்க, விடியரத்துக்கு முன்னாலேயே எழுந்து சோபாவுல ஒரு ஓரமா உக்காந்துனே தூங்குறாங்க, அத பாக்கறத்துக்கு ரொம்ப பரிதாபமா இருக்குது அதுக்குத்தான்."

ஏங்க வயசாச்சினா தூக்கம் வராதுங்க, கொஞ்சநேரம் தூங்குவாங்க கொஞ்ச நேரம் தூக்கம் வராம முழிச்சினு இருப்பாங்க, இதெல்லாம் வயசானவங்களுக்கு சகஜங்க, இதுக்குப் போயி ஏன் நீங்க இவ்வளவு வருத்தப் படுரங்க?"

"இல்லே பத்மா, அவங்களும் கொஞ்சம் தனியா இருக்கட்டுமே? அதனால நமக்கு என்ன?"



"அப்போ இந்த வயசுல அவங்களுக்குக் கட்டில் சுகம் கேட்குதோ?"

"பத்மா, இத சொல்றத்துக்கு உனக்கு நாக்கு கூசல, சீச்சி.. ஏதோ வயசானவங்க, கொஞ்சம் நிம்மதியா இருக்கட்டுமேன்னு பார்த்தா இப்படி கேவலமா பேசுறியே, இது நல்லாவா இருக்கு"

"இதோ பாருங்க, இங்க இருக்கிறது அவங்களுக்கு வசதிப் படலேன்னா, உங்க அண்ணன் விட்டுலே போய் தங்கிக்க சொல்லுங்க, நம்மை விட அவங்க நல்லா வசதியாத்தானே இருக்குறாங்க,"

"பத்மா... பெத்தவங்கல போய், நீங்க அங்க தங்குங்க, இங்க தங்கிக்கங்கன்னு சொல்றது நல்லாவா இருக்கு, அது என்னவோ எனக்கு கொஞ்சங் கூட பிடிக்கல,"

"அப்போ பிடிக்கலன்னா நீங்க சும்மா இருங்க, இந்த வசதிக்கு அவங்க இங்க தங்குனா தங்கட்டும், அப்படி இல்லேன்னா எங்க வசதி கிடைக்குதோ அங்க போய் தங்கிக்கட்டும்."

"ஏன் பத்மா நீ இவ்வளவு பிடிவாதமா இருக்கிற?"

"இதோ பாருங்க, ஏதோ கடன ஒடன வாங்கி இந்த வீட கட்டியிருக்கோம். வாங்குன கடன ஒழுங்கா கட்டி முடிக்கனும், வளர்ந்து வரும் பசங்களுக்கு படிப்பு செலவு கவனிக்கனும், அதோடு ஒரு பொண்ண பெத்து வச்சிருக்கோம் என்ற நெனப்பிருக்கா உங்களுக்கு.. அது வளர்ந்து பெரியவளா நிக்கும் போது கட்டிக் குடுக்க நக நட்டுன்னு சேத்து வச்சாத்தானே நாளைக்குக் கௌரவமா இருக்கும். அதோட இப்ப தங்கம் வெல ஒரு வாரமா கொரஞ்சிக்கின்னே வருது. அரியரஸ்; பணத்துலே அது இதுன்னு செலவு செய்யாம நம்ப பொண்ணுக்கு நகய வாங்கி வெச்சிடலாம். இன்னிக்கு நாளும் கெழமையும் நல்லா இருக்கு ஆபிச விட்டு சாய்ந்திரம் சீக்கிரமா வந்துடுங்க,

லலிதாவுக்கோ, கல்யாணிக்கோ போய் நகய வாங்கிடலாம். உங்க அப்பாவும், அம்மாவும், எங்காவாது ஒருமூலையிலே முடங்கிக் கிடக்கட்டும். ஆமா சொல்லிட்டேன் என்று ஆவேசமாக பேசி அங்கிருந்து போக முயற்சிக்கும்போது,

"இதோ பார் பத்மா, இந்த வீட்ட கட்ட நாம் கஷ்டப்படும் போது ரிட்டையர் ஆன பணத்துல கொஞ்சம் கொடுத்து உதவி பன்னினது எங்க அப்பா தான் இது உனக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன், அவருடைய பங்கும் இதுல இருக்கு."

"இருக்கட்டும் அதனால இப்ப என்ன? யாருக்குக் குடுத்தாரு பெத்த புள்ளைக்குத் தானே கொடுத்தாரு, அது அவருடைய கடமை இல்லையா?"

"எது கடமை பத்மா, புள்ளைகளை வளர்த்துப் படிக்கவச்சி ஒரு வேலைய வாங்கிக் கொடுப்பது தான் பெத்தவங்க கடமை, கல்யாணத்தையும் பன்னி வெச்சி காலமெல்லாம் சோறு போடுவது பெத்தவங்க கடமை இல்லே. பெத்தவங்கள அவங்க வயசான காலத்துல கவனிக்கிறது தான் பிள்ளைகளோட கடமை, இது எல்லாம் உனக்கு எங்கே தெரியப்போவுது"

"நீங்க என்ன சொன்னாலும் சரி, உங்க அப்பா அம்மாவுக்கு பக்கத்துல ரூம்போட நான் சம்மதிக்க மாட்டேன், நமக்கு சேமிப்புன்னு இருப்பது இது ஒன்னுதான் இதையும் நான் விட்டுக் கொடுத்தா நாளைக்கு எம் பொண்ண வச்சிக்கினு நான் நடுத்தெருவுல தான் நிக்கனும்".என்று சொல்லிக்கொண்டே சமையல் அறைக்குப் போய்விட்டாள்.

மனைவியின் பிடிவாதத்தையும், பெற்றோரையும் நினைத்து, வரமறுக்கும் தூக்கத்தை வலுகட்டாயமாக வரவழைத்துத் தூங்க முயற்சித்தான் மோகன்.

"என்ன கல்யாணி, இப்படி சோர்ந்து உக்காந்துட்ட வீட்ல மருமக இல்லையா? எங்க போய் இருக்கா?"

நீங்க இவ்வளவு நேரமா எங்கே போயிருந்தீங்க.

குழந்தைகளை ஸகூல்ல விட்டுட்டு அப்படியே காலார நடந்து லைப்ரரிக்குப்

போய் பேப்பர பார்த்துட்டு வந்தேன், பத்மா இப்பத்தான் மார்கெட்டுக்கு போய்ட்டு வரேன்னு சொல்லிட்டுப் போனா.

"ஏன் கல்யாணி, இப்படி படுத்துன்னு இருக்கே, உடம்புக்கு என்ன பண்ணுது?"

"உடம்பெல்லாம் ஒரே வலியா வலிக்குது, கைகால் எல்லாம் கொடையுது, யாராவது கொஞ்சம் புடிச்சி விட்டா தேவலாம் போல இருக்குது,"

அதுக்கென்ன, இப்படி கால நீட்டு நான் புடிச்சி விடுறேன். கொஞ்சம் கையையும் உடம்பையும் காட்டு நான் தைலத்த தேச்சி விடுறேன்.

நல்லா இருக்குதுங்க நீங்க பேசறது, இப்படி பட்டப்பகல்ல என் கையையும் காலையும் நீங்க இப்படி புடிச்சி விடுறத மருமக பார்த்தா நல்லாவா இருக்கும். அசிங்கம் இல்ல.

"கதவ சாத்திடுவோம், யாருக்கும் தெரியவாப் போகுது."

"ஐயோ வேறு வெணையே வேணாம். வயசான காலத்துல கிழங்க பாரு பட்டப் பகல்ல இப்படி கொட்டம் அடிக்குதுங்கன்னு நம்பல அசிங்கமா பேசுவா.

"பாவம் கல்யாணி நீ. என்ன கட்டிக்கின்னு அந்தக் காலத்துல இருந்து இப்ப வரை ரொம்பத்தான் கஷ்டப்படுர. கொஞ்ச காலம் தான் நான் உன் கூட இருந்து குடும்பம் நடத்தினே. பெரும்பாலான நாள்; எல்லாம் டிரானஸ்பர், டிரான்ஸ்பர்ன்னு ஊர சுத்தினு இருந்தேன். மாசத்துக்கு ஒரு நாளோ, இரண்டு நாளோ அல்லது பண்டிகையும் கிழமைக்கும் தான் வீட்டுல இருப்பேன். பிள்ளைகளை படிக்கவைத்து நல்லது கெட்டதைப் பார்த்து வளர்த்தது எல்லாம் நீ தானே. நாம ஒன்னா இருந்த காலங்களைத் தவிர நீ தனிமையில் இருந்த காலங்கள் தானே கல்யாணி அதிகம்."

"அதுக்கு என்னங்க பன்ன முடியும்..உங்க வேல அப்படி. அப்போ வயசு இருந்தது. இருக்க முடிந்தது. இப்போ தளர்ந்து போச்சி இல்லே, உடம்பும் தடுமாறுது. இப்பத்தான் யாரையாவது புடிச்சிக்கனும்ன்னு தோனுது. எனக்கு உங்கள விட்டா யாருங்க இருக்கா, உங்க பக்கத்துலேயே இருக்கனும்ன்னு மனசு கெடந்து துடிக்குதுங்க. என்ன பண்றது நமக்குன்னு தனியா ஒரு ரூம் இருந்தா உங்களுக்குன்னு நானும் எனக்குன்னு நீங்களும் இருக்கலாம். பரவாயில்ல, நம்ப பசங்க, உங்கள ஒரு வீட்டுலேயும், என்ன ஒரு வீட்டுலேயும் இருக்க வைக்காம, சின்னவன் நம்ப ரெண்டு பேரையும் ஒன்னா இருக்க வச்சானே சின்னவன் அதுவே போதுங்க, "உங்களப் பாரத்துனே என் காலத்தை நான் கழிச்சிடுவேன்" என்று, உருண்டு விழும் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.

ஆபிசில் இருந்து வந்த மோகன்,"பத்மா சீக்கிரம் ரெடியாவு, நகைக் கடைக்குப் போய்ட்டு வரலாம்" என்று சொன்னவுடன், "வேண்டாங்க போனப் போட்டு மேஸ்த்திரிய உடனே வரச் சொல்லுங்க"

"எதுக்கு பத்மா, இப்பப் போய் மேஸ்த்திரிய வரச்சொல்ற"

"அத்தைக்கும் மாமாவுக்கும் பக்கத்துல பாத்ரூம் அட்டாச்சுடன் ஒரு ரூம் கட்டிக் குடுக்கத்தான்" என்று சொன்னவுடன், மோகன் அதிர்ச்சியுடன்,"என்ன பத்மா நீ நெசமாத்தான் சொல்றியா" என்று ஆச்சர்யத்துடன் கேட்டான்.

"ஆமாங்க" என்று சொன்னவுடன். எப்படி இப்படி ஒரே நாள்ள மாறிட்ட என்று கேட்ட போது ஒரு புன்னகையை மட்டும் பத்மா பதிலாகத் தந்தாள். ஆம் அதில் தான் எத்தனை நிதர்சனங்கள், உண்மைகள், அர்த்தங்கள். மோகனுக்குத் தெரியுமா? அது...

அவன் தாயும் தந்தையும் பேசிக் கொண்டிருந்ததை மார்க்கெட்டுக்குப் போய் திரும்பி வந்த பத்மா கேட்டு தானும் கண்ணீர் விட்டு அழுததை.

இரண்டு வயதான ஆன்மாக்களின் காதல் உணர்வைப் பூர்த்தி செய்வதை விட தன் பெண்ணுக்கு நகை சேர்த்து வைப்பது எந்த விதத்திலும் ஞாயம் இல்லை என்ற உணர்வையும் உண்மையையும் பத்மா நன்றாகப் புரிந்துக் கொண்டாள் என்பதை.

டாக்டர் ந. சந்திர மோகன்
MBBS, MD, DPH



# நலம் தரும் மருத்துவம்

- அதிக எடை உள்ளவர்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டிப்பாக நல்ல உணவுமுறையை பின்பற்ற வேண்டும்.
- ஏழைகளின் ஆப்பிள் சித்தர்களின் காயகல்பம். நெல்லிக்காயை தினமும் காலையில் உண்ண வேண்டும். வைட்டமின் சி நிறைந்த இது கெட்ட கொழுப்பை குறைக்கிறது. நல்ல கொழுப்பை கூடுதலாக்குகிறது. இரத்தக்குழாய்களை வலுப்படுத்துகிறது. இளமையை பாதுகாக்கும். இழந்ததை மீட்டெடுக்கும்.
- சாப்பாட்டோடு கொத்தமல்லி, இஞ்சி, கறிவேப்பிலை, புதினா போட்டு தாளித்த மோரை நிறைய குடிக்க வேண்டும்
- இது கெட்ட கொழுப்பு உறிஞ்சப்படுவதை தடுக்கிறது . கொழுப்பை குறைக்கிறது. குடல் ஆரோக்கியம் , செரிமானசக்தி இரண்டையும் கொடுக்கிறது.
- உணவில் பூண்டு அதிகமாக சேர்க்க வேண்டும். குறைந்த பட்சம் மூன்று பச்சை பற்களையாவது உண்ண வேண்டும். இது கெட்ட கொழுப்பை குறைத்து, கொழுப்பு படிவதைத் தடுக்கிறது. இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது.
- எப்போதும் உணவில் சின்ன வெங்காயம், இஞ்சி, மிளகு, ஓட்ஸ் , பார்லி, தேன் இவற்றை எப்படியாவது கலக்க வேண்டும்.
- பொதுவாக பச்சை காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், முழு தானியங்கள், விதைகள், கொட்டைகள் இவற்றையே தேடித்தேடி உண்ண வேண்டும்.

*இத்துடன் தினமும் தவறாமல் உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.*

# இளைய சமுதாயம்

தலையிலே கோடு!
காதுகளில் தோடு
கழுத்திலே பிளேடு!
காலத்தின் சீர்கேடு!!

பெற்றோரை புறந்தள்ளி!
மற்றவரை குறைசொல்லி!
உறவுக்கு பெருங்கொள்ளி!
வைக்கின்றார் கரும்புள்ளி!!

பெண்பித்துப் பிடித்து!
நல்லவன்போல் நடித்து!
மதுவினைக் குடித்து!
மறைகின்றார் துடித்து!!

முன்னேறத் தடையும்!
கேள்விக்கு விடையும்!
இல்லாமல் அழியும்!
இளமையின் தடயம்!!

அலைபேசி மோகம்!
உறக்கமின்றி போகும்!
உருக்குலையும் தேகம்!
உருவாகும் சோகம்//

காதலெனும் போதை!
சீரழியும் பாதை!
உள்ளத்தில் தீதை!
விதைக்கின்றார் சூதை!!

முளைவிடும் முன்னே!
பழுதாகும் தென்னை!
சீக்கிரம் உன்னை!
மறந்திடும் இம்மண்ணே!!

**லீ. லியாகத்அலி**



# அமைதி பாடும் உலகம் வேண்டும்



எழில் கொஞ்சும் பசுமை நிறைந்த பூமித்தாயின் அழகினை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. நீரும் நிலமும் இரண்டறக் கலந்து இகத்துக்கு இனிமை சேர்த்து வனப்பை அதிகப்படுத்துகிறது. கடலும் வானும் சங்கமித்துக் கதிரவனைப் பிரசவிக்கும் இனிய வைகறைப் பொழுதும், அந்திச் செவ்வானம் அடிவானில் கொணரும் மாலைச் சூரியனும், இருள் கிழித்து மெதுவாய் வெளியேறும் பால் நிலவும், அசையாத அமாவாசையில் அலைந்து திரியும் மின்மினிகளும் இறை அத்தாட்சிகளை பறைசாற்றி நிற்கின்றன.

பருவம் பார்த்துத் தன் குணாதிசயங்களைப் பகிர்ந்து கொள்ளும், வசந்த காலமும், கிளைகளைச் சுமக்க வைத்த இலைகளை உதிர்க்கும் இலையுதிர் காலமும், வெப்பம் தணிக்க சொல்லாமல் கருக்கட்டும் கருமேகத்தின் பாரத்தில் புவி மீது பொழியும் திடீர் மழையும், அண்ணாந்து அழகை ரசிக்க விடாத அடைமழையும்,விடியலை விழிக்க விடாது மறைக்கும் பனிமூட்டமும் காலங்கள் தரும் கண்கவர் நினைவுகள் இந்தப் பூமியிலன்றி எங்குதான் பார்க்க முடியும்.

சுழலும் பூமியில் இரவும் பகலும் மாறி மாறி வருகை தந்து உயிர்களின் உணராவுகளைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறது. எந்த வித பிரதிபலனை யும் எதிர்பார்க்காத சேவை பிரமிக்க வைக்கிறது. செவ்வானத்தில் கோடு வரையும் பறவைகளின் அணிவகுப்போடு அமைதியாய் மேற்கில் ஒளிந்து கொள்ளும் தங்கச் சூரியனும், விடியலில் விடிவெள்ளியோடு விழிகளை மெதுவாகத் திறக்கும் அதிகாலையும் ஆனந்தக் கதிரொளியால் அகிலத்தை ஆட்சி செய்கிறது.

இத்தனை இரகசியங்களின் சொந்தங்களைத் தன்னகத்தே மடித்து வைத்துக் கொண்டுதான் இந்தப் பூமி தினம் தினம் இரத்தக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு விடியலிலும் கிழக்கின் ஓலங்களும், அவலங்களும், அல்லல்களும் அலைமோதிக் கொண்டிருக்கிறது. அஸ்தமிக்கும் மேற்கின் கீழ்க்கரையில் ஏதோ ஒன்றை விழுங்கிப் பசிதீர்த்திட்ட நிம்மதியில் ஏப்பமிடும் சப்தங்கள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இத்தனையும் ஆகாயம் தாண்டி பார்வையிட்டுக் கொண்டிருக்கும் உள்ளங்களின் வெடிப்புச் சப்தம் இப்பூமியின் இருப்பை அசைத்துப் பார்க்கிறது.அமைதி பாடும் நல்லுலகம் வேண்டுமென மீளாத் தவம் செய்கிறது ஆழ வேண்டும் அழகிய அமைதி இவ்வையகத்தில் என்று தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறது.

**சேஹு மொஹம்மது பெனாஸிரா,**
**முஸ்லிம் ஹல்மில்லாவ, இலங்கை.**

# அனுபவச்சொற்கள்

ரோகிணி, சுந்தரின் திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் ஆகியிருந்தும் உறவுக் காரர்கள் வீட்டிற்கு விருந்துக்குச் செல்வதும், உறவுக்காரர்கள் இவர்கள் வீட்டிற்குக் கல்யாணம் விசாரிக்க வருவதுமாக வீடு எப்போதும் திருவிழாக்காலமென அமர்க்களப் பட்டுக்கொண்டேயிருந்தது.

அன்று காலை தூக்கத்திலிருந்து பிரிய மனமில்லாமல் வேறு வழியின்றி எழுந்த ரோகிணி பல் துலக்கி, மாடியிலிருந்த தன் அறையிலிருந்து கீழேயிருந்த சமையலறைக்கு வந்தாள். ஏற்கனவே அங்கு ஆஜராகிக் காபி குடித்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டவள், "எப்படித்தான் இவரால் மட்டும் தூக்க சுதந்திரத்தைக் கூட விட்டுக்கொடுத்து இப்படியொரு ராணுவக் கட்டுத்திட்டத்தில் வாழ முடிகிறதோ!" என்று நினைத்தபடி நின்றவளின் கைகளில் காப்பி டம்ளரைக் கொடுத்த அவளுடைய மாமியார் கமலா,

'வாம்மா ரோகிணி, இந்தா காபி குடி; காலையில் எல்லோரும் சீக்கிரமே எழுந்து மடமடவென்று சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்ய ஆரம்பிச்சுடணும்! உங்க கல்யாணம் ஆனதிலிருந்து உறவுக் காரர்கள் வருகை அதிகமானதால் சமையல் வேலையும் அதிகமாயிடுச்சு இல்லையா? வேலைக்கெல்லாம் உதவிக்கு ஆளுங்க இருக்காங்க; ஆனாலும் நாமதான் பொறுப் புடன் ஆளுங்களுக்கு வேலை சொல்லி சரியா நடக்குதா என்று பார்க்கணும்? நீயும் கொஞ்சம் கொஞ்சமா எல்லாம் பழகிக்கோ!" என்றாள்.

ரோகிணிக்குக் காலை எழுந்ததுமே என்னடா இது , மாமியார் அறிவுரை கூற ஆரம்பிச்சுட்டாங்க என்று அலுப்பாக இருந்தது. "ம்....ம் ..." என்று தலையசைத்த வண்ணம் காப்பியை அருந்தத் துவங்கினாள்.

"காபி குடிச்சிட்டு நீ போய் குளித்து ரெடியாயிட்டு வாம்மா; ஊரிலிருந்து உறவுக்காரங்க வராங்க! உங்க கல்யாணத்திற்கு அவங்களால வர முடியலைன்னு இப்போ வராங்க"

தன் அறைக்குத் திரும்பிய ரோகிணி தன் கணவன் தன்னுடன் வராது சமையலறையிலேயே அவர்களுடன் ஏதோ சிரித்துப் பேசியபடியிருப்பதைக் கண்டு மிகவும் எரிச்சலானாள். அவளுடைய கைபேசி தொடர்ந்து அழைத்துக் கொண்டேயிருக்க, மெதுவாக அதனை எடுத்து யாரெனக் கேட்டாள்.

"ரோகிணி, நான் ஷோபா பேசறேன்! எப்படி இருக்க? கல்யாண வாழ்க்கை எப்படி இருக்கு? உன் கணவர் உன்னிடம் எப்படி நடந்துக்கிறார்? உன் 'இன் லாஸ்' எல்லாம் உன்னை நல்லபடியா நடத்தறாங்களா? அடுக்கடுக்கான கேள்விகளுடன் பேசத் துவங்கிய தன் கல்லூரி தோழி ஷோபாவின் குரலைக் கைபேசியில் கேட்டதும் குரலில் ஒரு அலுப்புடன்

"ம்..... இருக்கேன்பா!" என்று ஒற்றை வரியில் பதிலளித்தாள்.

திருமணமாகி புகுந்த வீட்டிலிருந்த ரோகிணிக்குப் புதுமண வாழ்க்கை என்ற போதும் ஏதோ ஒருவித சலிப்பு அவள் பேச்சில் தெரிந்தது.



“ஹேய்........ என்னப்பா ஆச்சு? உன் பேச்சில் சந்தோஷமே தெரியலையே! ஏதேனும் ப்ராப்ளமா? குரலில் ஆர்வம் காட்டினாள் ஷோபா.

‘‘என்னவென்று சொல்ல? வீட்டில் மாமனார், மாமியார், அண்ணன், அண்ணி, அவங்க குழந்தைகள் என்று எத்தனை பேர் தெரியுமா? இது தவிர வேலைக்கு வர ஆளுங்க! நான், என் கணவர் என்று பிரைவசியே இல்லை’

“உன் கல்யாணத்தின்போது உன்னுடைய புகுந்த வீடு ரொம்பப் பெரிய வீடு; எங்களுக்கென்று மாடியில் தனி படுக்கை அறை, ஹால் என்று வசதியா செய்து வைத்திருக்கிறார்கள் என்றாயே! இப்ப அதெல்லாம் என்னாச்சு?”

கைபேசியின் மறுபக்கத்திலிருந்து கேலியுடன் கேள்வி பிறந்தது.

“ஆமாம், அதெல்லாம் வசதி தான்; ஆனாலும் ஒரு நாளில் பெரும்பாலும் கீழே அவர்களுடன்தான் இருக்க வேண்டியதாக இருக்கு. கல்யாணத்திற்கு முன் இருந்த என் அத்தனை சுதந்திரமும் பறி போயிடுச்சு! இஷ்டப்பட்ட நேரத்திற்குத் தூங்கி எழுந்து, எனக்குப் பிடித்ததைச் சாப்பிட முடியல;இதைச்செய், அதை செய், அவங்க வந்திருக்காங்க, இவங்க வந்திருக்காங்க, என்று எப்போது பார்த்தாலும் வீட்டில் ஒரே பரபரப்பு! நிம்மதியா ஒரு பீச், சினிமாவுக்கு என் வீட்டுக்காரருடன் போகலாம் என்றால் அவரே எனக்கு எதிரியாக இருக்கார்! வீட்டிலுள்ள எல்லோருக்கும் அவரே சினிமாவுக்கு டிக்கெட் வாங்கிட்டு வந்து கூப்பிடறார். என்ன பண்றதுன்னு ஒண்ணுமே புரியல!”

‘‘என்ன ரோகிணி இது? நீ எப்படி செல்லமா வளர்ந்த பொண்ணு! இப்போ

என்னைப் பாரு, எனக்குத் திருமணமாகி ஒரு வருடம் ஆகிறதென்று உனக்கே தெரியும். என் வீட்டுக்காரரிடம் எங்க கல்யாணத்தின் போதே ,'' கல்யாணம் ஆனவுடன் நாம் தனிக்குடித்தனம் போயிடணும். 'நாம்,' 'நம் குடும்பம்' என்று இருக்கணுமே தவிர, வேறு யாரையும் நான் ஒத்துக்க மாட்டேன்''னு சொல்லிட்டேன். இப்பவும் நான் ஒன் ,டூ,த்ரீ என்றால் என் வீட்டுக்காரர் தண்டால், பஸ்கி எடுப்பார் தெரியுமா? உனக்கு ஏண்டி இந்த நிலைமை?''

அவள் சொன்னதைக்கேட்டதும் வந்த கோபத்தை தனக்குள் அடக்கிக் கொண்ட ரோகிணி,'' சரி ஷோபா, இன்னொரு நாள் பேசலாம்'' என்றபடியே இணைப்பைத் துண்டித்தாள்.

மனதில் தோன்றிய உணர்வுகளை மனதிற்குள்ளேயே புதைத்து அதனால் தோன்றிய எரிச்சலை மற்றவர்களிடம் காட்டியதில் ரோகிணிக்கும், குடும்பத்திலுள்ள மற்ற அனைவருக்கும் நடுவில் மெல்லிய திரை விழுந்தது என்னவோ உண்மைதான்!

இயந்திரகதியில் இதேபோல் நாட்கள் நகர, சுந்தருக்கு ஒரு வேலைக்காக இரண்டு வருடங்கள் ஆஸ்திரேலியா செல்ல அழைப்பு வந்தது. அவன் இதைப் பற்றி தன் பெற்றோரிடம் பேசியபோது அவர்கள், "ஏன்பா, இந்த வேலைய ஒத்துக்கத்தான் வேணுமா? உன் முன்னேற்றத்திற்கு நாங்க தடை சொல்லலை; பாவம் ரோகிணி, அவ பிறந்த வீட்டைப் பிரிந்து இங்கு வந்ததிலிருந்து பிறந்தவீட்டு நினைப்பில் தவிக்கிறாள்! இப்போ இங்கிருந்தும் யாருமே இல்லாமல் உன்னுடன் அவள் ஆஸ்திரேலியா வந்தால் அங்கே தனியா என்னப்பா செய்வாள்? நீயும் வேலைக்கு போயிட்டா வீட்டில் அவள் மட்டும் தனியாக இருப்பது அவளுக்குக் கஷ்டம் இல்லையா? இரண்டே வருடம் தானே!நீ திரும்பிவரும் வரை இங்கு அவள் தற்காலிகமாக ஏதாவது ஒருவேலைக்குப் போனாள் என்றால் அவளுக்கும் பொழுது போய்விடும். பேசாம நீ மட்டும் போயிட்டு வந்துடுன்னு சொல்லவும் மனசு வரலை; அவளையே கேளு; அவளுக்கு என்ன இஷ்டமோ அதன்படியே செய்யட்டும்'' என்றனர்.

"ஐயோ ... எத்தனை பெரிய விடுதலை நமக்கு கிடைச்சிருக்கு! இவர் பாட்டுக்கு எதையாவது சொல்லிக் கெடுத்திடப் போறார்.'' என்று யோசித்த ரோகிணி அவசர அவசரமாக தானும் சுந்தருடன் ஆஸ்திரேலியா செல்ல சர்வசம்மதம் என்று அறிக்கை விட்டாள்.

சுந்தரும், ரோகிணியும் மகிழ்ச்சியுடன் ஆஸ்திரேலியா கிளம்பி வந்தனர். தனி அப்பார்ட்மெண்ட், தனி கார், வீட்டிற்குத் தேவையான சாமான்கள் என்று வசதியான வாழ்வு! ரோகிணியின் மனம் இறக்கை கட்டிப்பறந்தது. வாரம் முழுவதும் சுந்தர் வேலைக்குச் சென்றாலும் வார இறுதியில் இரு நாட்களும் அவள் ஆசைப்பட்டபடி அவளுடனேயே நேரத்தைச் செலவிட்டான். ஒரு சில மாதங்களில் ரோகிணி கர்ப்பமா கியிருப்பது தெரிந்ததும் இருவரும் மிகவும் சந்தோஷமடைந்தனர். இந்த இனிய செய்தியைக் கேட்ட இருவருடைய பெற்றோரும் மனம் மகிழ்ந்து வாழ்த்தினர். அவர்களில் யாரையேனும் தனது உதவிக்கு அழைக்கலாம் என்றால் சுந்தரின் பெற்றோரை அழைத்துக் கொள்வதை விட தனது பெற்றோரை அழைத்துக் கொள்வதையே ரோகிணி விரும்பினாள். ஆனால் ரோகிணியின் தந்தைக்கு உடல் நலம் சரியில்லாதிருந்ததால் அவர்களால் வர முடியவில்லை. நண்பர்கள் உதவியுடன் தாங்களே பார்த்துக் கொள்வதாகச் சுந்தரின் பெற்றோரிடம் கூறி உதவிக்கு அவர்கள் வருவதையும் தவிர்த்தாள். கர்ப்ப காலத்திற்கே உண்டான வாந்தி, மயக்கம், அசதி என்று

தவிர்க்க முடியாத உடல்நிலை மாற்றங்கள் அவளைச் சோர்வடையச் செய்தது. எப்படியோ மாதங்கள் நகர்ந்து குழந்தையும் நல்லபடியாகப் பிறந்தது தெரிந்து இரு வீட்டாரும் மிகுந்த ஆனந்தம் அடைந்தனர்.

இந்தியாவைப் போல் இல்லாமல் அங்கு வீட்டு வேலைக்கும், மற்ற வெளி வேலைகளுக்கும் உதவிக்கு ஆள் வைத்துக் கொள்வது மிகவும் கடினம் என்பதால், அனைத்து வேலைகளையும் செய்து, குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் சேர்ந்து கொண்டு ரோகிணியை மிகவும் சோர்வடையச் செய்தது. அசதியுடன் புலம்பியவளிடம் , "ரொம்பக்கஷ்டம்தான் ! இன்னும் சில மாதங்களில் என் வேலைக்கான ஒப்பந்தம் முடிந்ததும் இந்தியாவுக்குத் திரும்பிப் போயிடலாம்"என்றான் சுந்தர்.

இந்தியாவிலிருந்த போது வீட்டு வேலையை வீட்டிலிருந்த அனைவரும் பகிர்ந்து செய்ய, ஜாலியாகத் தான் புதுப் பெண்ணாக வீட்டில் வளைய வந்தது அப்போது அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. இருந்தாலும் தன் இஷ்டப்படி கணவன், குழந்தையுடன் அங்கு தனித்து வாழும் சந்தோஷம், வேலைஒப்பந்தம் முடிந்து இந்தியா திரும்பி வீட்டிற்குச் சென்றால் கிடைக்காது என்று எண்ணியவள் அவனிடம், "அதெல்லாம் வேண்டாங்க; இதுபோல வாழ்வு அங்கு போனால் கிடைக்காது. ஏதாவது செய்து இங்கேயே வேலையைத் தொடரப் பாருங்க'' என்று கூறி அவன் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

ஒரு நாள் இரவு கைக்குழந்தை அகிலேஷ் கைவிடாமல் அழுது கொண்டிருந்தது. அன்று ஆபீஸில் ஏதோ மீட்டிங் என்றும், வீட்டிற்கு வர மிகவும் தாமதமாகும் என்றும் காலையில் கிளம்பும் போதே சுந்தர் சொல்லிவிட்டுச் சென்றிருந்தான். குழந்தை அழுவதன் காரணம் புரியாமல் குழந்தையை சமாதானப்படுத்த ரோகிணி என்னென்னவோ செய்து பார்த்தும் குழந்தை அழுகையை நிறுத்தவே இல்லை. கணவனையும் தொடர்பு கொள்ள முடியாமல் திணறிப் போனாள். அதேசமயம் சுந்தரின் அம்மா தற்செயலாக ரோகிணிக்குப் போன் செய்து பேச, மிகுந்த படபடப்புடன் மாமியாரிடம் குழந்தையின் நிலை பற்றிக் கூறினாள்.

எதிர்முனையில் அனுபவம் பேசியது!

''ரோகிணி... குழந்தை உடம்பு சுடவில்லையே? வேறு குறிப்பிட்டுச் சொல்லும் படி பிரச்சனை ஏதும் இல்லையே?''

''சாயங்காலம் கூட நல்லா சிரிச்சு விளையாடிட்டு இருந்தான்; திடீர்னு ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியிலிருந்துதான் இப்படி காரணமில்லாமல் அழுது கொண்டிருக்கிறான்'' விம்மினாள் ரோகிணி!

"ஐயோ... இதெல்லாம் ரொம்ப சாதாரணம்! குழந்தை வளர்ப்பது ஒரு கலை! ஆங்கில மருந்துகள் ஒரு பக்கம் கொடுத்தாலும், கை வைத்தியம் தான் இது போன்ற நேரங்களில் உடனடி நிவாரணத்திற்கு கை கொடுக்கும்! இப்போது உடனே 'வீடியோ அழைப்பில்' வந்து குழந்தையைக் காட்டு! நான் சொல்வது போல் செய் மா!'' என்று கூறியபடி பர பரவென குழந்தைக்கு அப்போது செய்ய வேண்டிய சில முதலுதவிகளை மாமியார் அவளிடம் அறிவுறுத்திட, அதன்படி செய்ததும் சிறிது நேரத்தில் குழந்தை அழுகையை நிறுத்தி உறங்கத் துவங்கியது. ரோகிணிக்கு அச்சமயம் மாமியாரின் சமயசஞ்சீவியான வார்த்தைகள் இதமாகவும், ஆறுதலாகவும் இருந்தது.

மறுநாள் குழந்தை கை கால்களை உதறி சாதாரணமாக சிரித்தபடி இருக்க ரோகிணிக்கு நிம்மதி பெருமூச்சு வந்தது. சுந்தருடன் வேலை பார்க்கும் குமாரின் மனைவி சங்கீதா கைபேசி அழைப்பு விடுத்து

ரோகிணியுடன் பேசி குழந்தையின் நலம் விசாரித்தாள்.

” ரோகிணி..., நேற்று இரவு குழந்தைக்கு உடம்பு முடியாமல் இருந்ததாமே! குழந்தை இப்போ சாதாரணமாக இருக்கானா? நேற்று ஆபீஸில் மீட்டிங் முடிந்து குமாரும் ரொம்ப தாமதமாகத்தான் வீட்டிற்கு வந்தார். பாவம்; நீங்க தனியாகக் குழந்தையை வைத்துக்கொண்டு ரொம்பக் கஷ்டப் பட்டுட்டீங்க என்றும், உங்க மாமியார் இந்தியாவில் இருந்தபடியே வீடியோ அழைப்பில் வந்து கைவைத்தியம் சொல்லி குழந்தைக்குத் தேவலையாச்சு என்றும் உங்க வீட்டுக்காரர் குமாரிடம் சொன்னாராம். உண்மையாகவே கைக்குழந்தையை வளர்ப்பது என்பது மிகப்பெரிய சவால்! நீங்க ரொம்ப அதிர்ஷ்டசாலி! நானும் , குமாரும் ‘லவ் மேரேஜ்’ பண்ணிக்கிட்டோம். இரு வீட்டாருக்கும் எங்க கல்யாணத்தில் இஷ்டமில்லை என்று எங்களுடன் தொடர்பு இல்லாமல் எங்களைத் தனிமைப் படுத்திட்டாங்க! நாங்களும் ஆஸ்திரேலியா வந்துட்டோம்.! என் பிள்ளையை வயிற்றில் சுமந்த போதும், கைக்குழந்தையாக இருந்த அவனை வளர்த்த போதும் நாங்க ரெண்டு பேரும் ரொம்பக் கஷ்டப்பட்டுட்டோம். போன வருடம் குழந்தையுடன் இந்தியா போனபோது தங்களது குழந்தைகளுக்காக இளகாத எங்கள் பெற்றோர் மனம் தங்கள் பேரக் குழந்தையைப் பார்த்ததும் உருகி விட்டது! இப்போது ரொம்ப சந்தோஷமாக இரு பெற்றோர்களுடனும் பேசி, சிரித்து வாழ்வது மனசுக்கு எத்தனை தெம்பாக இருக்கு தெரியுமா?

குழந்தை வளர்ப்பில் வீட்டுப் பெரியவர்களின் பங்கு நமக்கு அசாத்திய துணையாகவும், ஆதரவாகவும் இருக்கும் என்பதை பல சமயம் நினைத்து நன்கு உணர்ந்து விட்டேன். உங்க மாமியார் தன் அனுபவத்தில் எத்தனை அருமையாகக் கை வைத்தியம் சொல்லி குழந்தையின் சின்ன உபாதையைச் சரி செய்துட்டாங்க! குழந்தைகளை வளர்க்கும் போது நம்முடன் அனுபவம் உள்ள பெரியவர்கள் நமக்குத் துணையாக இருப்பது வரப்பிரசாதம்! குமாருக்கும் இந்த வருட முடிவில் இங்கு வேலை முடிந்து விடும்! நாங்க இந்தியாவுக்கே திரும்பப் போயிடலாம்னு இருக்கோம்.

சரி ரோகிணி, குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கோங்க!”

சங்கீதாவின் பேச்சு ரோகிணியின் காதில் ரீங்காரமிட்டபடியே இருந்தது. வயதில் மூத்தவர்களின் அனுபவச் சொற்களின் அவசியமும், அவர்களின் மதிப்பும் நன்கு புரிந்தது. என்னதான் ’நான்’, ’எனது’ என்று தான் நினைத்த வாழ்க்கையை வாழ்ந்தாலும் , எத்தனை சௌகரியங்கள் கிடைத்த போதிலும், மிகுந்த அக்கறையும், உண்மையான அன்பும் காட்டும் இது போன்ற பெரியவர்களுடன் அவருடைய அறிவுரைகளைக் கேட்டு அவர்களோடு சேர்ந்து வாழ்வதிலுள்ள மிகப்பெரிய பலன்கள் இப்போது விஸ்வரூபமாய் அவள் மனதிற்குள் வந்து நிறைந்தது.

இரவு அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய கணவனிடம் ,” சுந்தர், உங்க வேலை ஒப்பந்த காலம் முடிந்ததும் மறுபடியும் நாம் பேசிக் கொண்டபடி இந்த நாட்டிலேயே வேலையை நீட்டிக்க வேண்டாம்! இந்தியாவிற்குப் போய் நம் வீட்டில் எல்லோருடனும் சந்தோஷமாக நம் குழந்தையை வளர்க்கலாம்!”என்றவள் உறுதியாகக் கூறியதைக் கேட்ட சுந்தர் மகிழ்வுடன் குழந்தையைக் கொஞ்சியபடியே தலையாட்டி சம்மதம் தெரிவித்தான்.

**ஜெயந்திபத்ரி**

# துணிவாக நடைபோடு

.......

துணிவாக நடைபோட துடிப்பைக் காட்டு
தொடரட்டும் நம் பயணம் தோல்வி இன்றி
பணிவான செயல்களிலே பாதை தோன்றும்
பலருடைய நன்மதிப்பும் பாதுகாப்பு
கனிவாகப் பேசினாலே கர்வம் நீங்கும்
கலக்கங்கள் விட்டகன்று கவலை தீரும்
இனிதாக வலம்வரவே இதயம் வைப்போம்
எந்நாளும் நன்னாளாய்  யென்றும் துய்ப்போம்

பயத்தினையே அகற்றிடலாம் பழுது நீங்கும்
பழிகளில் லா வாழ்வதுவே பயனும் ஆகும்
சுயமாக நாமிருக்கச் சுவைக்கும் வாழ்வு
சுமையாக நீயிருக்க தொடரும் வீழ்வு
அயர்வில்லா மனத்தோடு அமைதி காத்தே
அழகாகத் தோட்டமிடு அனைத்தும் பூக்கும்
பயிற்சிகளில் முழுதாக உன்னை மாற்று
பக்கமாகும் வசமாகும்  பழக்கம் ஆகும்

துயரங்கள் தொடர்ந்தாலும் துணிவாய் நோக்கு
தொல்லைகளும் நகராது துளைத்த போதும்
உயர்வாக உனை நிறுத்தி உச்சம் காட்டி
ஓர்மையுடன் ஒத்திசைந்தே உலகை நோக்கு
முயற்சியென்றும் முன்னேற்றும் முழுதாய் உன்னை
முடியாது என்பதனை முடித்துக் காட்டு
தயக்கத்தைத் துரத்திவிட தணியா வேகம்
தாமாக உனைச் சேரும் தவிப்பைப் போக்கு




## தென்றல் கவி தமிழ்ச்சிட்டு

பட்டுக்கோட்டை




பிரியா வீடு

திருமண நிகழ்விற்கு செல்வதற்காக சாலினி, பிரியா, அருணா மூவரும் அழகாக உடைகளணிந்து ரெடியாகி கார் வரும் வரை காத்திருந்தனர். மாலை 7.30 ஆகியிருக்கும் வெகு நேரமாகியும் பிக்கேப் பன்னுவதற்கு யாரும் வராததால் சாலினியின் மனதில் லேசான பதட்டம் எழுந்தது. தாம் தயாராக இருப்பினும் தங்களை அழைத்துச் செல்ல வருவதாக கூறிய தன் அண்ணாவின் வருகையையே எதிர் பார்த்தது அவள் மனம். அஷ்வினுக்கு கோல் பண்ண முற்பட அவனிடமிருந்து கோல் வந்தது

பதட்டமாக இருந்த அவள் சற்று புன்னகையோடு அதை அட்டென் செய்து போனை காதில் வைக்கிறாள்

"அஷ்வின்" சாலுமா எங்க மா இருக்கீங்க கிளம்பிட்டிங்களா ?

"சாலினி" அண்ணா நானே உனக்கு கோல் பண்ணனும்னு இருந்தன் நாங்க ரெடி யா தான் இருக்கோம் நீ எங்க வந்துட்டயா ?

"அஷ்வின்" இல்லமா இங்க கொஞ்சம் வேலகள் இருக்கு

மனதிற்குள் (சிறு சங்கடத்துடன்)

சாலினி" அப்டியா அப்போ நாங்க கேப் புடிச்சி வாரோம்

அஷ்வின்" இல்லமா நா என்னோட

ப்ரண்ட் ஒருத்தர அனுப்பி இருக்கன். அவன் கிளம்பியிருப்பான்

சாலினி "யாரு ணா"

அஷ்வின் "அவினாஷ் என சொல்ல வாயெடுத்தவன் சுதாரித்து ஆதி என பெயரை மாற்றி கூறினான்

சாலினி" அப்டி ஒரு ப்ரண்ட் உனக்கு இருக்குறது எனக்கு இன்டக்கி தான் தெரியும்

அஷ்வின்" அவன் தூரத்துல இருந்தான்மா இன்னக்கி பார்ட்டிக்கி இன்வைட் பன்னேன் என்னால பிக்கப்

பன்ன வர முடியாத சிட்டிவேசன் அதான் அவன் வாரேனு சொன்னான்.

சாலினி" சரி ணா

அஷ்வின் " சரி மா கவனம் பத்துரமா வாங்க வெக்கிறேன்

சாலினி" சரி ணா

அவளுக்கு அவன் கூறியதில் முழுதாக நம்பிக்கையில்லை தன் அண்ணண் குரல் இயல்பை விட தடுமாற்றமாக இருந்ததை அவள் உணர்ந்தாள். தன் அண்ணணின் நண்பர்கள் அனைவரையும் அவளுக்கு நன்றாக தெரியும்.

சாலினி கோலை கட் செய்யவும் பிரியா வீட்டருகில் ஒரு கார் வந்து நின்றிருப்பதைக் கண்டவள் தன் அண்ணா தங்கள பிக்கப் பண்ண அனுப்பி வைத்த கார் இதுவாகத் தானிருக்குமென ஊகித்தவள். பிரியா மற்றும் அருணாவை அழைத்துக் கொண்டு கீழே வருகிறாள்.

அவினாஷ் அஷ்வின் அனுப்பிய லோகஷனிற்கு வந்து நெடு நேரம் இருக்கும் ஆனால் ஏதோ இதயம் படபடக்க இவ்வளவு நேரமும் தன்னை இயல்பாக்க முயன்று கொண்டிருந்தான்.

அப்போது சாலினி,அருணா,பிரியா மூன்று பேரும் காரை நோக்கி வருவதை

கண்டு கொண்டவன் அதில் சாலினி யார் என்பதையும் அறிந்து கொண்டவன் கார் கண்ணாடியினூடாக ஊதாலும் வெள்ளையும் கலந்த நீண்ட டாப்பில் வரும் அவளைக் கண்டதும் அவனது விழிகள் ஒரு நொடி நிலைத்து நின்றன. மனம் ஏதோ ஒரு தாளத்தில் அவளது அழகை ரசித்துக்கொண்டிருந்தது. அவள் ஒவ்வொரு அடியாக அவனது காரை நோக்கி எடுத்து வைக்கும் போதும் அவனது இதயத்தின் படபடப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது. அவள் அருகில் வந்ததும், தன் மனதை இயல்பாக்கி, தன்னைச் சரிசெய்துகொண்டு காரிலிருந்து இறங்கினான். அவளைப் பார்த்த அந்த சில நொடிகளில் அவள் அவனது மனதில் நன்கு நிலைத்து விட்டாள் என்பதே உண்மை

சாலினி" நீங்க அண்ணாவோட ப்ரண்டா எங்கள பிக்கப் பண்ண வந்தவரா நீங்க

அவினாஷ்" ம்ம்

சாலினி" உங்க பெயர்

"அவினாஷ்" அவினாஷ்

அந்தப் பெயரைக் கேட்ட சாலினி அப்படியே அதிர்ந்து அண்ணா உங்க பெயர் ஆதினு தானே சொன்னாரு என கேட்க

அவள் பார்ப்பதை உணர்ந்த அவினாஷ்

"அவினாஷ்" யெஸ் ஐயம் ஆதி அவினாஷ் என்னோட ப்ரண்ட் தங்க் ஸ்லிப் ஆகி அவன்ட பெயர் வந்துட்டு

சாலினி" ஹம் அவினாஷ் னு சொன்னீங்க அவர் இப்போ என்ன பன்றாரு (அவன் கூறியது தான் பார்க்கமலே காதலிக்கும் அவினாஷாக இருக்குமோ என்ற சந்தேகம் அவளுள் எழுந்தது)

அவினாஷ்" அவனுக்கு பொலிஸ் ஆகனும் னு ஆசை இப்போ போஸ்ட்டிங் கெடச்சி இருக்கும் அவினாஷ ஒங்களுக்கு தெரியாதா அஷ்வினோட ப்ரண்ட் தானே என்ட் அவினாஷ் ஒங்க பேமிலியாகுறனு அஷ்வின் ஒரு தடவ சொன்னான்

(அவன் கண்களில் அவளுக்கு தன்னை நினைவிருக்கா என்ற ஆவல் எழுகிறது)

சாலினி" ம்ம் சரி கிளம்பலாமா என்னோட இன்னும் இரண்டு ப்ரண்ட்ஸ்ஸயும் பிக்கப் பண்ண போகனும்

அவினாஷ்க்கு சாலனி தன்னைப் பற்றி எதுவும் சொல்லாதது பல கேள்விகளை எழ வைத்தது.

அவினாஷ்" ஆஹா சரிங்க ஏறுங்க போலாம் என அவன் கூற சாலினி, அருணா, பிரியா மூன்று பேரும் காரில் ஏற அவினாஷும் ஏறி காரை ஓட்ட ஆரம்பித்தான்.

ஐஸ்வர்யாவின் வீடு

ஐஸ்வர்யா ராகினியை தேடி மொட்டை மாடிக்கு வரவும் ராகினி போட்டோ எடுத்துக்கொண்டிருந்தவள் ஐஸ்வர்யாவையும் அழைத்து போட்டோ எடுத்தாள். அப்போது ஐஸ்வர்யாவின் போனில் அழைப்பு வர மகிழ்ந்தவள் எடுத்துப் பேசியவள் ஓகே யென கட் பண்ணியவள் மிக மகிழ்ச்சியில் ராகினியை கட்டியனைத்தாள்.

ராகினி" என்னாச்சிக்கா போன் வந்ததும் நீ இவ்ளோ ஹேப்பியாகிட்ட யாரு போன்ல என்ன சொன்னாங்க

ஐஸ்வர்யா" மஹிரா அக்கா கோல் பன்னாங்க அவங்க வீட்டுக்கு நா ஒரு நேரம் போன போது ஒரு டிஷ் செய்து கொடுத்தேன் இன்டக்கி மோர்னீங் கோல் பன்னி அதே டிஷ் செய்ய சொன்னாங்க எதுக்குனு சொல்ல இல்ல ஏர்லியாவே திங்ஸ் அனுப்பியிருந்தாங்க

நானும் செய்து வச்சேன் அது இந்த வெடிங் பார்ட்டிக்குனு இப்ப தான் சொன்னாங்க ப்ரிட்ஜ்ல வெக்கிற டிஷ்ங்குறதால பழுதாகாம இருக்கு

ராகினி" அக்கா நானும் ஒங்க கூட தானே இருந்தேன் நீங்க ஏதும் சொல்ல இல்லையே நானும் ஹேல்ப் பன்னி இருப்பன் தானே

ஐஸ்வர்யா" இல்லமா நீ தூங்கி இருந்த ஒன்ன எதுக்கு டிஸ்ரப் பண்ணனும் னு தான் எழுப்பல அதோட பிரியா வீட்டுக்கு போனதால ஒன்ட்ட சொல்ல மறந்துட்டன்

ராகினி" ம்ம் சரிக்கா எல்லாம் ரெடியா கொண்டு போக எடுத்து வச்சீங்களா ?

ஐஸ்வர்யா" ம்ம் எல்லாம் ரெடி தான் அவங்க வந்ததும் கிளம்ப வேண்டிய தான்

அப்படி ஐஸ்வர்யா கூறிக்கொண்டிருக்கும் போது அவர்கள் தங்கியிருக்கும் வீட்டருகில் கார் ஒன்று வந்து நின்றது.

காலையில் கோவத்துடன் வெளியே சென்றிருந்த அஷ்வின் திரும்ப ஹோட்டலுக்கு வரும் போது அவன் கோவம் மறைந்து இயல்பாயிருந்தான்

அப்போ அவனது அலுவலக அறைக்கு கவின் நுழைந்தான்

கவின்" எஸ்கியுஸ்மி மே ஐய் கமிங்

அஷ்வின்" யெஸ் கமிங்

கவின்" டெகரேட் வேர்க் , குகிங் எல்லாம் ரெடி கெஸ்ட் வரவும் ஸ்டார்ட் பன்டாங்க பட் ஒங்க ப்ரண்டோட ஹோட்டல் மேனேஜர் மஹிரா ஏற்பாடு பன்னின டிஷ் மட்டும் மிஸ்ஸிங்

அஷ்வின் " நோ ஐ கோலேட் ஹேர்

அந்த டிஷ் குயிக்கா வந்துடும் போய் வந்தவங்கள கவனிங்க என்டி வெடிங் தம்பதிகள வர வேற்க எல்லாம் ரெடியா

கவின்" யெஸ் ஆல் ஆர் ரெடி

என கூறி கவின் செல்ல

அனைத்தும் சரியாக நடந்தாலும் அஷ்வினின் மனது மட்டும் கடலலை போல எங்கெங்கோ சிந்தனை சிதற தன் கணிணியை ஆன் செய்து அதில் மூழ்கிப் போனான்

(நேசம் தொடரும்)

# உணர்வுகள் இன்னும்
## உயிரோடு தான்...



என்றோ நான்
எழுத நினைத்தவை
இன்று யார் மூலமோ
எழுதப்பட்டுள்ளன

என்றோ நான்
உண்ண விரும்பியவை
இன்று யாரோ
உண்டு விட்டு
பகிர்ந்து இருப்பார்

என்றோ நான்
வாசிக்க நினைத்தவை
இன்று
யாரோ வாசித்து
மகிழ்ந்திருப்பார்

என்றோ
நான் வாங்கிட எண்ணியவை
இன்று எவர் கையிலோ
காட்சிப் பொருளாய்

என்றோ நான்
கண்டு களித்திட நினைத்தவை
இன்று
எவரோ பார்வையிடச் சென்றிருப்பார்

என்றோ
நான் முன்மொழிய நினைத்தவை
இன்று
யார் மூலமாகவோ
முன்மொழியப்பட்டிருக்கும்

என்றோ நான்
முந்திக் கொள்ள
நினைத்தவையெல்லாம்
இன்று
எவராலோ
முந்திக் கொள்ளப்படுவதை
பார்க்கையில்
பிரமித்துப் போகிறேன்
என் உணர்வுகள் இன்னும்
உயிரோடு தான் என

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
புல்மோட்டை



# எண்திசைப் பொன்சோதி....

மக்கத்துப் பேரொளியே மஹ்மூது மாநபியே
மன்னர்க்கெலாம் மன்னராய் மண்ணிலுதித்த மணிமுடியே
திக்கெங்கும் உம்புகழே தெருவெங்கும் உம்ஸலவாத்
திருநபி நினைவினிலே தேனாறு உள்ளத்திலே

மக்களுடன் மண்சுமந்த மனிதநேய மாணிக்கமே
மதிபிளந்த நாயகரே மாண்புமிகு போதகரே
தக்க தருணத்தில் தோன்றிட்ட தண்ணிலவே
தாராள குணத்தில் விரிகதிரான நிறையருளே

திங்கள்நபி தீங்ககற்றத் திலகமாய் உதித்தார்
தீன்மார்க்கம் உலகிலே தீர்க்கமாய்ப் பதித்தார்
சங்கைமிகு நற்குணங்கள் சாத்வீகமாய்ப் போதித்தார்
சாதிபேதம் களைந்திடவே சமநீதி சமைத்தார்

கங்கையாய்க் கருணைச்சுனை கனிவுடனே சுரந்தார்
காலங்கள் கடந்துமவர் கவின்விளக்காய் ஒளிர்ந்தார்
ஓங்கிடும் எழுச்சிதனை உண்மையாய்ப் புரிந்தார்
உலகமே போற்றுகின்ற நன்னம்பிக்கையை வென்றார்

அறியாமையிருள் நீக்கிய அன்பான போதனைகள்
அழகான வாழ்க்கைமுறை அண்ணலரின் முன்மாதிரிகள்
திருமறையும் முழங்கிடுமே தீன்சுடரின் சாதனைகள்
திகட்டாத வேதமதை அறிவித்த சாகசங்கள்

இறைபக்தி உய்த்திட்டால் சுவனத்தின் சோபனங்கள்
இலகுவழி பெற்றிடலாம் என்றியம்பிய சூசகங்கள்
கறைபடியா எண்ணங்களால் கடைந்தெடுத்த அமுதமவர்
கண்ணியத்தின் காவலராய் கண்மலர்ந்த செழுஞ்சோதிநபி
உளத்தூய்மை உண்மைவழி உவகையுடன் பயணித்தனர்
உம்பரின் ஓதல்தனை ஓர்கணத்தில் ஏற்றனர்
தெளிவான கொள்கைகள் தேட்டமுடன் வகுத்தனர்
தைரியமாய் அதன்வழியில் வாழ்ந்தெமக்குக் காட்டினர்

ஒழுக்கத்தின் இலக்கணங்கள் உறைந்திட்ட தூயநபி
உண்மை மட்டுமே பேசிவாழ்ந்த உம்மிநபி
தொழுமிறை ஒன்றெனவே முழங்கிட்ட முத்துநபி
தூதராய் அவனியில் துலங்கிட்ட தாஹாநபி

விழுமியம் பலவும் விதந்துரைத்த காத்தமுன்னபி
வல்லோனின் சொல்லெடுத்து விதியுடைத்த பூமான்நபி
பழுதிலா முழுமதி பாராண்ட பிறைக்கொடி
பாதகங்கள் துடைக்கவந்த எண்டிசைப் பொன்சோதி

பூநபி பூத்தார் பிரபஞ்சம் நிறைத்தார்
புத்தொளிக் கதிராய் பிழையெலாம் அறுத்தார்
மாநபி உதயம் மக்களுக்கோர் அருளாய்
மேதினியில் பதியம் பெருவிருட்சத் திரளாய்



**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# என் அகராதியில் நீ!



அவள் வயதில் மலர்ந்த பருவம்
ஈர்த்திழுக்கும் அழகின் பவனம்
வார்த்தைகள் கோர்த்திடும் மொழிகள்
அதை வகுத்தது அவளிரு விழிகள்

அவளின் ஆடை மடிப்பில் பிறந்தது
நவீனத்திலும் மரபு வழி கலையிது
அவள் அணிந்த சலங்கையின் பக்கம்
புதிதாய் பிறந்தது ஒரு கீதம்

அவள் காலடி சுவற்றின் வருகையால்
பூத்தது பல கோடி புஷ்பங்கள்
அவள் கூந்தலை தழுவிய தென்றலில்
வாழ்கின்றன பல கோடி உயிர்கள்

மௌனத்தில் ஒளிந்திடும் குறுநகையை
கற்றது என் மனம் அவளிடம்
அவள் பார்வையில் எழுந்த கிறுக்கல்கள்
என் காகிதத்தில் தவழ்கின்ற கவிகள்


அவள் சிணுங்களில்
கேட்டிடும் கோரிக்கையை
நான் புரிந்தது கொஞ்சம் தாமதம்
என் தேடலில் கிடைத்த பத்திரம்
அவளே என் உலகின் சுதந்திரம்



**அகீலா ஜவுபர்**

ஏத்தாளை புத்தளம், இலங்கை

# காலச் சுழற்சி


புல்லாங்குழலன்

சின்ன வழுதூரில் அந்த இளங் காலைப் பொழுதில் இரண்டு மூன்று வீடுகளில் சிலர் கூக்குரலிடுவதும், அரற்றுவதுமாக ஒரே களேபரமாக இருந்தது. சற்று நேரத்தில் அந்த வீதியில் இன்னும் சில வீடுகளும் இந்த களேபரத்தில் பங்கெடுத்தன.

என்னவென்று அருகில் சென்று விசாரித்த ஒரு நபர் மற்றொரு நபரிடம் இளங்கோ இந்த வீடுகளில் திருட்டு போயிருக்கிறதாம் என்றார்.

எப்படி எல்லா வீடுகளிலுமா? செல்லப்பன். என்றார் அவர்.

ஆமாம். இதில் ஒரு ஆச்சர்யம் இருக்கிறது. எல்லா வீடுகளிலும் கதவுகள் உள்ளே தாளிடப் பட்டிருக்கின்றன ஆனால் வீட்டின் உள்ளே பொருட்கள் வாரியிறைக்கப் பட்டிருக்கின்றனவாம்.

வீட்டிலுள்ளவர்களின் சிலரின் கோபத்தின் விளைவாகவும் இருக்கலாம்.

அப்படித்தான் முதலில் பேசினர் சிலர். ஆனால் ஒவ்வொரு வீடாக இதே போல் இருப்பதால் தான் திருட்டு எப்படி இதுபோல் நடந்திருக்கும் என திருடு போகாதவர்கள் வியப்பாகின்றனர்.

வீட்டிலுள்ளவர்களுக்கு இந்தச் சத்தம் கேட்காமலா போயிருக்கும்.

இந்த சந்தேகமும் எல்லோருக்கும் வந்ததாம். ஆனால் யாருக்கும் சத்தம் தெரியவில்லை என்பது தான் உண்மை.

ஒருவர் என் சுவாசத்தில் ஒரு மணம் வருகிறது. நான் எப்போதும் இரவு 2 மணிக்கு விழித்துக் கொள்வேன். ஆனால் நேற்று நான் அப்படி விழிக்கவில்லை.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது யாரோ ஒரு குடியிருப்பு வாசி காவல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு இந்தத் திருட்டு பற்றி சொல்லியிருக்கிறார்.

சற்று நேரத்தில் காவல்துறையின் ஜீப்கள் அங்கே வந்து சேர்ந்தன.

அதில் ஒரு இன்ஸ்பெக்டர் இருந்தார். அவர் இறங்கிய பின்னர் உடன் வந்த காவலர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தினர்.

இன்ஸ்பெக்டர் ரங்கசாமி திருட்டு பற்றி அங்கிருந்தவர்களிடம் விசாரித்தார். அவர்கள் கோரசாகக் குரல் எழுப்பியதும். அவர் அவர்களிடம் நான் விசாரிக்க நினைக்கிறவர்களை மட்டும் நான் அழைக்கிறேன். அவர்கள் பதில் சொன்னால் போதும் என்றார்.

கூட்டம் அமைதி காத்தது. முதல் வீட்டுக்காரரை அழைத்த இன்ஸ்பெக்டர் எப்போது திருட்டு நடந்தது என்று உங்களால் சொல்ல முடியுமா? என்றார்.

நான் எழுந்த போது மணி பார்த்தேன். விடியற்காலை 6 மணியிருக்கும். எப்போது திருட்டு நடந்திருக்கலாம் என்றுகூட என்னால் சொல்ல முடியவில்லை.

உங்கள் வீட்டில் என்னென்ன திருடப் பட்டிருக்கிறது.

ரூபாய் நோட்டுகளும் சில நகைகளும் தான். வேறு பொருட்கள் எல்லாம் திருடப் படவில்லை.

இதைத் தவிர மற்றவர்கள் வீட்டில் வேறு ஏதாவது பொருட்கள் திருடு போயிருக்கிறதா?

இல்லை சார். எங்கள் வீடுகளிலும் பணமும் நகைகளும் தான் களவாடப் பட்டிருக்கின்றன என எல்லோருமே சொன்னார்கள்.

திருட்டு சமயத்தில் ஒருவர்கூடவா விழிக்கவில்லை.

ஆமாம் சார் யாரும் விழிக்கவில்லை. அதோ அந்த சங்கரன் மட்டும் அவர் எப்போதும் விழிக்கும் 2 மணிக்குக் கூட விழிக்காமல் தூங்கினாராம். முகத்தில் ஏதோ மணம் வருகிறது என்றும் சொல்கிறார்.

80 வயது நிரம்பிய ஒரு பெரியவர் முன்னால் வந்து நான் கழிப்பறை போயிருந்து வெளியில் வந்தேன். அந்த இருட்டில் நிழலுருவமாக சில என் கண்ணுக்குக் கிடைத்தது. சற்று நேரத்தில் அவைகளைக் காண முடியவில்லை. சரி ஏதோ பிரமை என நான் போய்ப் படுத்துவிட்டேன்.

நீங்கள் லைட் போட்டுப் பார்க்கவில்லையா?

நான் கழிப்பறையில் இருந்தபோதே கரண்டு போய் விட்டது. எப்போதும் இப்படிப் போனதில்லையே என நினைத்தவன் சுவிட்ச் எல்லாவற்றையும் போட்டுப் பார்த்தேன். விளக்கெரியவில்லை. என்பதால் போய் மீண்டும் படுத்து விட்டேன்.

உருவங்கள் என்றீர்களே எத்தனை என சொல்லமுடியுமா?

இரண்டு பேர் போலத்தான் தெரிந்தது.

இந்த விசாரணை நடந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டியன் முன்னால் வந்து சார் இதலொரு வியப்பும் இருக்கிறது என்றார்

என்ன வியப்பு

இவர்கள் வீடுகளில் தாளிட்ட வீடுகள் அப்படியே இருந்தன. சன்னல்களும் எதுவும் திறக்கப்படவில்லை. திருட்டு நடந்திருக்கிறது.

எல்லார் வீடுகளிலுமா?

ஆமாம் சார் என்றனர் வீட்டு வாசிகள் அனைவரும்.

இன்ஸ்பெக்டர் அந்த முதல் வீட்டுக் காரரின் முன் கதவை ஆராய்ந்தார். உள் கதவையும் பார்த்தார். ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை. கூடவே அழைத்து வந்திருந்த பாரன்சிக் ஆட்களை விளித்து முன் கதவின் சாவி போடும் இடத்திலும் உள் கதவின் தாழ்ப்பாளிலும் கைரேகைகள் எடுக்கச் சொன்னார். அவர்கள் தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இந்தத் திருட்டுக்களை யார் செய்திருப்பார்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள் என்றார் பொதுவாக.

எங்கள் சின்ன வழுதூரில் இதுவரை இதுபோன்ற திருட்டு நடந்ததே இல்லை சார். ரொம்ப அமைதியான ஊர் சார் இது.

இந்த ஊரில் புதிதாக நபர்கள் யாராவது வந்திருக்கிறார்களா?

இல்லை சார். அப்படி யாருமே வரவில்லை என்றார் ஊராட்சித் தலைவர்.

சரி தச்சு வேலை செய்பவர்கள் இந்த ஊரில் இருக்கிறார்களா?

ஆமாம் சார் இரண்டு பேர் இருக்கிறார்கள்.

அவர்கள் இந்தக் கூட்டத்தில் இருக்கிறார்களா?

இல்லை சார். ஒருத்தர் ஊரின் வடக்குக் கோடியிலும், மற்றொருவர் ஊரின் தெற்குக் கோடியிலும் இருக்கிறார்கள். இது எங்கள் ஏற்பாடு.

ஏன் அப்படி?

அவர்கள் தங்களின் தொழிலை ஊரின் இரு பாதியாகப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெளியே எங்கும் போவதில்லை. வேலை இல்லாத போது எங்களின் வயல்களில் சில நேரங்களில் வேலை செய்வார்கள்.

சரி அவர்களை அழைத்து வாருங்கள் என தன் காவலர்களிடம் கட்டளை இட்டார். அவர்களும் ஊராரின் துணையோடு சென்று அந்த இருவரையும் அழைத்து வந்தனர். இந்தத் திருட்டு நடந்திருப்பது உங்களுக்குத் தெரியுமா?

சார் காவலர்கள் எங்களை அழைத்தபோது தான் சொன்னார்கள். அப்போது தான் தெரியும்.

உள் தாழ்ப்பாள் நீக்காமல் கதவைத் திறக்க முடியுமா?

முடியும் சார். ஆனால் அது உங்களைப் போன்ற காவல்துறை சொன்னாலோ அல்லது அப்படி ஒரு சூழல் வந்தாலோ தான் சார் என்றனர் இருவரும் கோரசாக.

இந்தச் சூழல் அப்படிப் பட்டதா?

சார் என்ன சொல்கிறீர்கள்? நாங்கள் தொழில் தர்மம் புரிந்தவர்கள். வீட்டுக் காரர்களே சொன்னால்கூட அதை நாங்கள் செய்யமாட்டோம். ஒரு இக்கட்டான நிலை வந்தாலொழிய.

சார் இவர்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லை சார் என்றனர் கூட்டத்தினர்.

வெளியில் இருந்து யாரும் ஊருக்குள் வரவில்லை என்கிறீர்கள்.

ஊரில் யார் மீதும் சந்தேகம் இல்லை என்கிறீர்கள். இந்த இரண்டு தச்சர்களையும் கூட நல்லவர்கள் என்கிறீர்கள். பிறகு நாங்கள் என்ன செய்வதாம்.? கோபத்துடன் கத்தியவர் தன் காவலர்களை அழைத்து இந்த இருவரையும் கைது செய்யுங்கள். காவல் நிலையத்திற்கு அழைத்து வாருங்கள். அங்கே விசாரிக்கலாம் என்றவர் விடுவிடென ஜீப்பில் சென்று ஏறினார். காவலர்களும் ஏறிக் கொள்ள ஜீப்புகள் இரண்டும் அங்கிருந்து மறைந்தன.

காவல் நிலையத்தில் மாறப்பனும் வேலப்பனும் பயந்து போய் கீழே அமர்ந்திருந்தனர்.

இன்ஸ்பெக்டர் உள்ளே வந்ததும் காவலர்கள் இருவரையும் அவருக்கு முன்னே நிற்க வைத்தனர்.

நடந்த உண்மையை மறைக்காமல் சொன்னால் உங்களுக்கு தண்டனைக்

குறைப்பிற்கு நான் வழி செய்வேன். இல்லை யென்றால் மூன்றாம் டிகிரி என்பார்களே அதற்கு நீங்கள் ஆட் படுவீர்கள் என்றார் சற்று கடுப்புடன்.

சார் உண்மையாகவே எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என்று மாறப்பனும் வேலப்பனும் நடுங்கிக் கொண்டே சொன்னார்கள்.

அப்போ உங்களுக்கு எங்கள் வழி தான் சிறப்பு. காவலர்களை கூப்பிட்டார் ரங்கசாமி.

அதே நேரத்தில் அங்கே வந்த வேலாயுதம், அந்த ஊர் வழக்கறிஞர் இன்ஸ்பெக்டர் அருகில் வந்து நான் சொல்வதையும் கொஞ்சம் கேட்ட பிறகு அவர்களைப் விசாரியுங்கள் என்றார்.

சரி என்ன சொல்லுங்கள்

இந்த இருவரைப் பற்றியும் நன்கு தெரிந்தவன் நான்.

எப்படிச் சொல்கிறீர்கள்?

நான் ஒரு வழக்கில் ஒரு சிறு பொய் சொல்லச் சொன்னேன். அது யாரையும் பாதிக்காத ஒன்று. அதையே இந்த இருவரும் நாங்கள் சொல்ல மாட்டோம் என்று மறுத்து விட்டனர். வறுமையோடு உண்மையோடும் வாழ்பவர்கள்.

என்ன சொல்ல வருகிறீர்கள். இவர்கள் திருடியிருக்க மாட்டார்கள் என்றா? அப்படி என்றால் யார் திருடியிருப்பார்கள்.

எனக்கு ஒரு சிறு சந்தேகம் இருக்கிறது. அதுபற்றி இவர்களை நான் சில கேள்விகள் கேட்ட பின்னர் சொல்கிறேன். அதுவரை சற்று பொறுமையாய் இருங்கள்.

வேலாயுதத்தைப் பற்றியும் அவருடைய நல்ல குணங்களைப் பற்றியும் ரங்கசாமியும் கேள்விப்பட்டிருந்தார் என்பதால் சரி கேளுங்கள் என்றார்

மாறப்பா, வேலப்பா உங்கள் இருவருக்கும் அரசப்பனைப் பற்றித் தெரியுமா?

தெரியும் சார் என்றான் வேலப்பன்.

எப்படித் தெரியும்

கொஞ்ச நாள் என்னிடம் வேலை கற்றுக் கொண்டான் சார். ஆனால் நின்று விட்டான்.

எதுவரை கற்றுக் கொண்டான்.

பால பாடம் தான் சார். சில சங்கட வழிகள் பற்றியும் கற்றுக் கொண்டான் சார்.

அங்கப்பனைப் பற்றித் தெரியுமா?

சார் அவன் என்னிடம் கொஞ்ச நாள் வேலை கற்றுக் கொண்டான் சார் என்றான் மாறப்பன். சார் அவனும் வேலப்பன் சொன்னது போலவே தான் என்னிடமும் கற்றுக் கொண்டான்

கதவு திறப்பது பற்றி அவர்களுக்குத் தெரியுமா?

தெரியும் சார்.

இன்ஸ்பெக்டர் சார் அந்த இருவரையும் கூட நீங்கள் விசாரித்த பிறகு நீங்கள் முடிவெடுங்கள். இரண்டு நல்லவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதால் தான் நான் உங்களிடம் வேண்டுகோள் வைக்கிறேன்.

நின்றிருந்த இரண்டு காவலர்களும் அந்த இரண்டு பேர்மீதும் வழக்குகள் இருக்கின்றன சார். சார் சொல்வது சரிதான் என்றனர்.

அரசப்பனும் அங்கப்பனும் வரவழைக்கப் பட்டனர்.

நகைகளையும் பணத்தையும் எங்கே வைத்திருக்கிறீர்கள்? என்றார் எடுத்த எடுப்பிலேயே இன்ஸ்பெக்டர்.

சார் என்ன சொல்கிறீர்கள் என்று புரியவில்லை என்றனர்.

சொர்ணப்பா அந்த நகம் பிடுங்கியை எடுத்து வா? இவர்கள் நல்ல விதமாகக்

கேட்டால் சொல்ல மாட்டார்கள். போ கொண்டுவா என்று சத்தமாக உத்திரவிட்டார்.

இது முதல்படி தான் தம்பிகளா? இன்னும் பலபடிகள் இருக்கின்றன. எல்லாம் முடிந்து நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் போகிறீர்கள். இவ்வளவு வலி தின்ன வேண்டுமா என்று யோசியுங்கள்.

சொர்ணப்பா கட்டிங் பிளேயரோடு அங்கு வந்தார். அது மின்னிக் கொண்டிருந்தது. புதிது.

சார் வேண்டாம் சார். நாங்கள் சொல்லி விடுகிறோம். அதோ அங்கே நிற்கிறாரே ஏட்டு அவரிடம் தான் இருக்கின்றன அவை இரண்டும்.

எல்லோரும் மலைத்து நிற்க, ஏட்டு அங்கிருந்து நழுவ முயன்றார். ஒரு காவலர் அவரை விரைந்து பிடித்து நிறுத்தினார்.

சார் இவன்கள் பொய் சொல்கிறான்கள்.

இரண்டு காவலர்கள் அவர் வீட்டுக்குப் போய் அதையெல்லாம் எடுத்து வாருங்கள் எனச் சொல்ல விரைந்த அவர்கள் நகைகளோடும் பணத்தோடும் அங்கே வந்தனர்.

ஏட்டு விலங்கிடப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார். பாரன்சிக் ரிப்போர்ட்டும் அரசப்பன் அங்கப்பனின் ரேகைகளை ஒப்பிட்டது

வேலியே பயிரை மேய்ந்ததை ஊரார் பார்த்தனர். அவரை அடிக்கப் பாய்ந்தனர். அவர்களைத் தடுத்தார் வேலாயுதம். சட்டம் தன் கடமையைச் செய்யும். நாம் அதைக் கையிலெடுக்க வேண்டாம்.

எல்லோரும் வேலாயுதத்தைப் பாராட்டினர். மாறப்பனும் வேலப்பனும் அவருடைய கால்களில் விழுந்து வணங்கினர்.

இன்ஸ்பெக்டர் ரங்கசாமி வேலாயுதத்துக்கு நன்றி சொன்னார்

காலச் சுழற்சி அங்கே நிலைக்கு வந்தது.



# அப்பாவின் எழுதுகோல்

*மழைவெள்ளத்தில் ஊறிய*
*காகிதப்பொட்டலமாய்*
*தெருவழியே கடக்கிறது*
*அப்பாவின் சடலம்.*

*வேரறுக்கப்பட்ட தாமரைப்போல்*
*எங்கேங்கோ இடம் மாறுகிறேன் நான்.*

*மூக்குப்பொடி வாசனையும்*
*அப்பாவின் கம்பீரக் குரலும்*
*கலந்திருக்கும் வீட்டுத் திண்ணை*
*இனி எப்படி இளைப்பாறும்!*

*அப்பாவின் நினைவாய்*
*விட்டுச் சென்ற நாய்*
*அதன் குரைத்தலை*
*நிறுத்திய பாட்டில்லை.*

*கரையான் அரிக்காத*
*மீதிப் புத்தகங்களை*
*பரணின் கோணிப் பையில்*
*எனக்காக பதியம் போட்டிருந்தார் அப்பா.*

*வீட்டுமுக்கில் லாந்தர் விளக்கொளியில்*
*அப்பா புத்தகம் வாசிக்கிறார்*
*என அம்மா நம்பி*
*வாழ்ந்து கொண்டிருந்த பொழுது*
*அப்பாவிற்கே தெரியாமல்*
*நான் அவருடைய பேனாவில்*
*இலக்கியம் எழுதிக் கொண்டிருக்கிறேன்.*

**- மனோஜ் டேவிட்நாதன்**, பஞ்சாப்.

# இளையவன் சிவா கவிதைகள்

**1.**
என்ன எதிர்பார்க்கப்போகிறது
இந்த வாழ்க்கை
விழும்போது தாங்கிட கரங்களையும்
அழும்போது துடைத்திட
அன்பையும் தவிர.

**2.**
கணக்கற்று நீள்கின்றன
காணும் திசையெங்கும்
கைப்பேசிகளின் புத்துலகம்.
காணவே முடிவதில்லை
பொதுக்கழிப்பிடங்களின் கம்பீரம்.

**3.**
கொஞ்சம் அன்பு
கொஞ்சம் கெஞ்சல்
கொஞ்சம் கோபம்
கொஞ்சம் எதிர்பார்ப்பு
கொஞ்சம் ஊடல்
ஒட்டிக் கொண்டிருந்தாலே
எட்டிப் பார்ப்பதில்லை
எல்லையற்ற
பழியும் பாவமும்.

**4.**
எல்லோருக்கும் தெரிகிறது
எதிர்பார்ப்புகளின் அழுத்தம்
விடமுடியா ஆசையில்
தள்ளாட்ட நடை போடுகிறது
வாழ்வின் யதார்த்தம்

**5.**
கால்நடை போலே கவனத்தில்
பதிக்காது
கல்லையும் மண்ணையும்
கலந்தது போலே சிந்தனையற்று
வெந்ததைத் தின்று விதியைப்
பின்பற்றி வேடிக்கை பார்த்தபடி
அறிவின் வளர்ச்சியில்
அடியெடுத்து வைக்காது
அடிமையாய் புழுவாய்
கைநாட்டாய் கடைச்சரக்காய்
தெருவில் திரிந்த
விலங்கின வரிசையில்
தன்னையும் இணைத்தபடி
வாழ்வை நகர்த்தியவனுக்கு
விரிந்தே கிடந்த
கல்வியின் பாதையில்
வரலாறுகள் திரும்பின.
சுருங்கிக் கிடந்த
மனதின் இருட்டுக்குள்
சொர்க்க வாசலென
ஒளியூட்டிய எழுத்தின் பின்னே
இளைப்பாறுதல் தொடங்கிய
எண்ணங்களுக்குள்
உணர்வென வளர்ந்தது
அவனவன் ஆற்றலின் எல்லை.
கல்வியின் கரங்களைப்
பிடித்தபின்
கற்பனை விரிய
காட்சிகள் பிறக்க
தன்னை அறிந்தே
தரணியைப் பார்க்கிறான்.
எழுச்சியின் ஏற்றத்தில்
எங்கும் பிறக்கலாம்
விரிவானத்தின் வெளிச்சப்பாதை.

6.
பகுத்தறியும் பாதையிலே
பண்போடு நடைபோட
மனத்தோடு காண்பதெல்லாம்
மற்றவர் நிலை நின்று
உணரத் தலைப்பட்டால்
ஆறறிவின் பயனறியும்
ஆனந்தமெனும் குணம் பெறலாம்.
கேட்பதெல்லாம் சிறந்ததென்றே
கண்மூடி நம்பியிராமல்
அறிவின் உரைகல்லில்
அலசிப்பார்த்திடலே அவசியமாகிறது.
காண்பதெல்லாம் கவருகின்ற
காட்சியென்றே கணக்கீட்டில்
விழுந்திடாமல்
கவனத்தை அதில் செலுத்தி
ஆராய்தல் தலைப்படலே
அடுத்தடுத்த நகர்விற்கு
அவசியமாகிறது.
எண்ணத்தில் கசடுகளை
ஏற்றிக்கொண்டாலோ
மயக்கத்தில் நம்மைப் புகுத்தி
மரணத்தைத் திறந்து விடும்
மதிகெட்ட மனம்.
காணும் உயிரெல்லாம்
தனதென்றே பேணும் முறையென்னும்
கருணைக்குள் புகுந்த பின்னே
பிரித்தாளும் நிலை தாண்டி
பேதமை புதைத்துவிட்டு
அன்பாலே இணைந்திடும் கரங்கள்.
காண்பதும் கேட்பதும்
கவனத்தில் செய்யும் செயலும்
அறிவின் ஆழத்தில்
மெய்ப்பொருள் கண்டுவிட்டால்
அகிலமெங்கும் ஆனந்தம்
விளைந்திடுமே உமது திறத்தாலே.

**இளையவன் சிவா**

# கண்ணுக்குள் காதல்

கவியாலே கவியானேன்
நானாடி உன் நினைவாலே
அலையாய் ஆனேன் பாரடி
கரை தேடி வந்து
உனைத் தேடி அலைகிறேன்
புரியாத வயதினில்
எனைக் காதல் கொண்ட நீ
புதிராக ஏன் எனை
விட்டுச் சென்றாய்

இடியாக நீ போக
விடியாமல் நான் அழுத்தவன்
மழையாக வந்து
முகம் துடைத்தாய் நீ

காதலுக்குக் கண்கள் இல்லை
என்று சொன்னவர் ஏன்
கண்ணுக்குள்ளே காதல் உண்டு
எனச் சொல்ல மறந்தனர்



**ச.மேகவர்னன் (மார்க்கோணி)**
கனடா

# குடும்பமும் வேலைகளும்

## (நேரம் பேணுதல்)

**குடும்பம் என்பது யாது?**

குடும்பம் என்பது மனிதனின் அடிப்படை உறவுகளின் பெருக்கம் தான்.

தாய், தந்தை, சகோதரர்கள், கோதரிகள், தாத்தா பாட்டி, மாமா மாமி போன்ற விருத்தியடைந்த உறவுகளும் குடும்பத்தின் பகுதியாகும்.

அவை ஒருவரின் வாழ்வில் அன்பையும், பாதுகாப்பையும், வழிகாட்டுதலையும் தரும் முதன்மை ஆதாரமாக இருக்கின்றன.

ஆரம்ப காலத்தில் கூட்டுக் குடும்பங்கள் அழகிய முறையில் ஒன்றாக வாழ்ந்தனர். சந்தோஷமற்ற நிலைகள் இருந்தாலும், உறவுகளின் மதிப்பும் பொறுமையும் அதிகம் இருந்ததால், பாசம் பெரிதாக மதிக்கப்பட்டது.



இப்போதைய காலத்தில், தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு பயணங்கள் காரணமாக, குடும்ப உறவுகள் முறிந்து விட்டன. பாசங்கள் மறைந்து, தொலைபேசி அல்லது வீடியோ அழைப்புகளாலும் உணர்ச்சி வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை.

**2. வேலை என்பது யாது?**

நம் வாழ்வில் தேவைகளை நிறைவேற்ற பணம் அவசியம். பணம் சம்பாதிப்பதற்காகவே வேலை வேண்டும்.

ஆனால், வேலை வேலை என ஓடிக் கொண்டால், மனிதன் குடும்ப நேரத்தையும் பாச உறவுகளையும் இழந்து விடுகிறார்.

தன் இயல்பை அடக்கி, மேலதிகாரியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழும் மனிதன், மனம் திறக்க இயலாது.

அதனால் உள்ளுக்குள் அழுத்தம், மனஅசௌகரியம், அனர்த்தம் உருவாகிறது.

தனிமையில் சாதித்த வெற்றியும், சம்பாத்தியமும் பாசமற்ற வெற்றியாய் மாறும்.

**தொழில்நுட்பமும் வேலை நிர்வாகமும்**

தொலைவேலை மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக, வீட்டிலிருந்தும் வேலை செய்யும் வசதி, உண்மையில் குடும்ப நேரத்தை ஊதுகிறது.

அந்த நேரம், பிள்ளைகளோடு விளையாடுவதற்கு, மனைவியோடு உரையாடுவதற்கு பயன்படுத்தப்படாமல், வேலை வழக்கமாகவே தொடர்கிறது.

அதனால்:

பிள்ளைகள் தாயையும் தந்தையையும் தேடுகின்றனர், ஆனால் பெற்றோர் நேரம் ஒதுக்கவில்லை.

குடும்ப பாசம் குறைவாக, உரையாடல் இல்லாமல், உறவுகள் வார்த்தை அற்ற நிழல்களாக மாறுகின்றன.

விடுமுறையிலும் தொழில்நுட்பத்தில் மூழ்கியவர்கள் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்க முடியவில்லை.

## வெளிநாடு போகும் தொழிலாளர்கள் மற்றும் குடும்பம்

சுற்றுச்சூழல் காரணமாக, வெளிநாட்டில் பணிபுரிவது ஒன்றின் தீர்வாக தோன்றினாலும், அது பிள்ளைகளின் பாதுகாப்பை அல்லது பாசத்தை உறுதி செய்யாது.

திருமணத்திற்குப் பிறகு சிலர் வெளிநாடு செல்லும் போது, பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் குடும்ப உறவுகள் பாதிக்கப் படுகின்றன.

## மதங்கள் கூறும் குடும்ப பாசம்

இந்து மதம் – குடும்பம் தர்மத்தின் அடிப்படை.

கிறிஸ்தவம் – பெற்றோரை மதித்தால் நீண்ட வாழ்வு கிடைக்கும்.

இஸ்லாம் – தாய் தந்தையை வணங்கி நன்றி கூற வேண்டும்.

புத்த மதம் – பெற்றோரை போற்றுவது உயர்ந்த தர்மம்.

## அறிஞர்கள் கருத்து:

மகாத்மா காந்தி – குடும்பம் மனிதனின் முதல் பாடசாலை.

அப்துல் கலாம் – உறவுகளை மதிக்காமல் வளர்ந்த அறிவு மனிதனை முழுமைப் படுத்தாது.

திருவள்ளுவர் – அன்பின்மை ஆன்ற குடும்பம் மருந்தற்றது.

சுவாமி விவேகானந்தர் – உறவுகளை விட்டு சாதனை செய்தாலும் மனநிறைவு இல்லை.

## தீர்வு — வேலை, நேரம், பாசம் இடையே சமநிலை

### 1. நேரத்தை நிர்ணயமாக ஒதுக்கல்:

பிள்ளைகளோடு விளையாடும், மனைவியோடு உரையாடும் நேரம் கட்டாயம்.

### 2. தொழில்நுட்பம் கட்டுப்படுத்தல்:

விடுமுறை மற்றும் குடும்ப நேரத்தில் தொலைபேசி, கணினியை கைவிட்டு உண்மையான தொடர்பை முன்னிலை வைக்க வேண்டும்.

### 3. வெளிநாட்டு வேலை திட்டமிடல்:

வேலை வெளிநாடுகளில் இருந்தாலும், பிள்ளைகளுக்கும் குடும்பத்திற்கும் வருகை தரும் முறைகளை திட்டமிடல்.



**4. பாச உரையாடல் மற்றும் அன்பு செயல்கள்:**

ஒவ்வொரு நாளும் சிறு நேரம் இருந்தால், அன்பான வார்த்தைகள், நட்பான உட்கார்வுகள், சிறு குண்டுகள் குடும்ப உறவுகளை வலுப்படுத்தும்.

**5. மனநிலை கவனிப்பு:**

வேலை அழுத்தத்தையும் மன அழுத்தத்தையும் பகிர்ந்து கொள்ளும் உரையாடல்கள் குடும்பத்தில் நடக்கும் போது, நிம்மதி மற்றும் சந்தோஷம் கிடைக்கும்.

**7. முடிவு**

பணம், வேலை, தொழில்நுட்ப வசதி அனைத்தும் அவசியம் தான்.

ஆனால், அவை குடும்ப பாசம், நேரம், உறவின் முக்கியத்துவத்திற்கு பிறகே வரக் கூடாது.

குடும்பம் தான் மனிதனின் முதல் பள்ளி, முதல் மருத்துவம், முதன்மை நிம்மதி.

ஒருவரின் கனவுகள் நிஜமாக்கப் பெரும் முயற்சி, சம்பாத்தியம், சாதனை –

அவை பாசத்துடன் சேரும் போது மட்டுமே மெய்ப்பொருளான சந்தோஷத்தை தரும்.

வெற்றியின் விளிம்பில் யாரும் கையில் கைத்தட்டு சொல்லாவிட்டால், அந்த வெற்றி வெறுமையாக இருக்கும்.

நேரத்தை ஒதுக்கி, பாச உரையாடலையும், பிள்ளைகளோடு நேரத்தையும் பேணுதல் தான் உறவுகளின் உண்மையான வெற்றி.

**சஹ்னாஸ் பேகம்**

*முதலைப்பாளி, புத்தளம்*

# தமிழ் அடி பற்றியவன்

ஈரடியால் உலகளந்தான்
இமையமடித் தேரளந்தான்

நீரடியின்
வழி நடந்தான்
நிலம் அளக்கக்
கடல் கடந்தான்,

நாலடியின்
நெறி நடந்தான்
நாடெல்லாம்
நலம்படைத்தான்

பாவடியோ
பல படைத்தான்
பார் மொழியை முதல்படைத்தான்,
காவடியைத்
தோள் கொண்டான்,
காதலிலும் நேர்கொண்டான்

நாவடியில்
தமிழ் கொண்டான்,
நாகரீகம் முதல் கொண்டான்/

கீழடியில் கலம் கொண்டான்,
கீழ்மையிலா செயல் கொண்டான்

பூவடியில் புதைகொண்டான்,
புகழ் கண்டே
நிலை கொண்டான்

**திருமதி. இரா.இராஜாமணி**

ஈரோடு

# நேர வங்கி



**சுவிட்சர்லாந்தில் படிக்கும் ஒரு மாணவன் எழுதுகிறார்:**

சுவிட்சர்லாந்தில் படிக்கும் காலத்தில், பள்ளிக்கு அருகே ஒரு வீடு வாடகைக்கு எடுத்தேன்.

வீட்டு உரிமையாளர் கிரிஸ்டினா, 67 வயதான, திருமணம் செய்யாத மூதாட்டி. ஓய்வு பெறுவதற்கு முன்பு ஒரு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றியவர்.

சுவிட்சர்லாந்தின் ஓய்வூதியம் மிகவும் நன்றாக இருப்பதால், வயதான பிறகு உணவு, இருப்பிடம் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

ஆனால், அவர் உண்மையில் ஒரு "வேலை" பார்த்து வந்தார். அதாவது, 87 வயது ஆன, திருமணமாகாத ஒரு மூதவரைப் பார்த்துக்கொள்வது.

நான் கேட்டேன்: "நீங்கள் பணத்திற்காகவே வேலை செய்கிறீர்களா?"

அவரது பதில் என்னை ஆச்சரியப் படுத்தியது: "நான் பணத்திற்காக வேலை செய்யவில்லை. டைம் வங்கியில் என் நேரத்தை சேமிக்கிறேன். நான் வயதான பிறகு என்னால் இயங்க முடியாத நிலை வந்தால், அப்போதுதான் அதை எடுத்துக்கொள்வேன்."

முதல்முறையாக "டைம் வங்கி" என்ற கருத்தை கேட்டதால் நான் ஆர்வமாகக் கேட்டேன்.

அசல் "டைம் வங்கி" என்பது சுவிட் சர்லாந்து சமூகப் பாதுகாப்புத் துறை உருவாக்கிய ஒரு மூதாட்டி/மூதவர் நலத் திட்டம். இளைஞர்கள் வயதானவர்களை பார்த்துக்கொள்வதில் செலவிட்ட நேரத்தை சேமித்து வைப்பார்கள். பிறகு, அவர்கள் வயதானதும், உடல் நலமில்லாததும் அல்லது பராமரிப்பு தேவைப்படும் நிலையிலும் அந்த சேமித்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விண்ணப்பிப்பவர்கள் ஆரோக்கியமாகவும், அன்பான மனதுடனும், தொடர்பு கொள்ளும் திறமையுடனும் இருக்க வேண்டும்.

அவர்கள் உதவி தேவைப்படும் மூதவர்களை தினமும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அந்த சேவை நேரங்கள், சமூகப் பாதுகாப்பு அமைப்பின் தனிப்பட்ட நேரக் கணக்கில் சேமிக்கப்படும்.

கிரிஸ்டினா வாரத்திற்கு இரண்டு முறை சென்று, இரண்டு மணி நேரம் செலவிட்டு மூதவர்களுக்கு உதவினார். கடைகளுக்குச் செல்வது, அறைகளை சுத்தம் செய்தல், சூரிய ஒளியில் அமரச்செய்தல், பேசிக் கொண்டிருத்தல் போன்றவற்றைச் செய்தார்.

ஒரு ஆண்டுக்குப் பிறகு, "டைம் வங்கி" அவர் சேமித்த மொத்த நேரத்தை கணக்கிட்டு, அவருக்கு ஒரு டைம் வங்கி கார்டு வழங்கும்.

பின்னர், அவருக்கே யாராவது பராமரிப்பு தேவைப்பட்டால், அந்த கார்டைப் பயன்படுத்தி சேமித்த நேரத்தையும், வட்டி நேரத்தையும் எடுத்துக்கொள்ள முடியும். சரியான சரிபார்ப்புக்குப் பிறகு, "டைம் வங்கி" மற்ற தன்னார்வலர்களை அவரை வீட்டிலோ, மருத்துவமனையிலோ பார்த்துக்கொள்ள அனுப்பும்.

ஒரு நாள், நான் பள்ளியில் இருந்தபோது, வீட்டு உரிமையாளர் அழைத்து, ஜன்னலை சுத்தம் செய்யும்போது நாற்காலியிலிருந்து

விழுந்துவிட்டதாகச் சொன்னார்.

நான் உடனே விடுப்பு எடுத்து அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன்.

அவரது காலில் எலும்பு முறிவு ஏற் பட்டது, சில நாட்கள் படுக்கையில் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது.

நான் வீட்டில் யாராவது பார்த்துக்கொள்ள விண்ணப்பிக்க முயன்றபோது, அவர் கவலைப் பட வேண்டாம் என்றார். ஏனெனில் அவர் ஏற்கனவே "டைம் வங்கி"யில் இருந்து நேரம் பெற விண்ணப்பித்திருந்தார்.

உண்மையாகவே, இரண்டு மணி நேரத்துக்குள் "டைம் வங்கி"யிலிருந்து ஒரு நர்ச் வந்து அவரைக் கவனித்தார்.

அந்த நர்ச் தினமும் வந்து பேசிக் கொண்டும், சுவையான உணவு செய்து கொடுத்தும், அக்கறையுடன் பராமரித்தார்.

அந்த அக்கறையினால், அவர் விரைவில் குணமடைந்தார்.

குணமடைந்த பிறகு, அவர் மீண்டும் வேலைக்கு சென்றார். "நான் இன்னும் ஆரோக்கியமாக இருக்கும் வரை, டைம் வங்கியில் அதிக நேரம் சேமிக்க விரும்புகிறேன்" என்றார்.

இன்று, சுவிட்சர்லாந்தில், மூத்த குடிமக்கள் நலனுக்காக "டைம் வங்கி" பயன்பாடு சாதாரணமாகி விட்டது.

சுவிஸ் அரசு கூட இந்த திட்டத்தை சட்டரீதியாக ஆதரிக்கிறது.

"எவ்வளவு அழகான யோசனை! உல கெங்கும் இது நடைமுறைக்கு வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

இந்த மாதிரியான புதுமைகள் சமூகத்தில், குறிப்பாக மூத்த குடிமக்களின் வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். நாம் சிந்திக்க வேண்டியது தான்!

*Jerome (Valluvan)*




கூட்டில் அடைத்து
சிறப்பான பராமரிப்பு
பறவைகளைப் பார்த்து
ஏங்கும் கிளி

யாசகம் எடுக்கும்
மாற்றுத் திறனாளிகள்
பூசைக்குப் பணம் கொடுத்து
புண்ணியம் தேடுவர்

வீட்டைப் பார்த்து
மனைவியைப் பாராட்டுவர்
சுத்தம் செய்தவர்
மௌனமாய் மூலையில்

பொது இடங்களில்
தஞ்சம் அடைந்தனர்
சில நாட்கள்
சமத்துவம் பேணப்படும்

உழைப்பவர் யாவரும்
உயர்ந்தவர் என்பர்
ஊழல் செய்தால்
சிறையிலும் மரியாதை

கூடுகளை பிடுங்கி
குருவிகளை விரட்டுவர்
சிற்றுயிர்கள் மீதும்
கருணை வேண்டும்

**அப்புத்துரை ஜெகன்** - சுவிஸ்

# தாயிற்கு தாலாட்டு

பொ.. முருகன்

பச்சை பசேலென்று பசுமையான வயல்வெளிகள், ஒருபுறம் கரும்பும், மறுபுறம் வாழையும் இடைஇடையே நெற்கதிர்களும் நிறைந்த அழகிய சிற்றூர் கரிக் கலாம்பாக்கம்.

மக்கள் வாழும் இடம் நகரம் போல் காட்சியளிக்கும் அக்கம் பக்கத்து கிராம மக்களுக்கு தேவையான பொருட்கள் கிடைக்கும் இடம்.

30 படுக்கை வசதிகளைக் கொண்ட அரசு பொது மருத்துவமனை அமைந்த ஊர்.

ஊர் மக்கள் அனைவரும் விட்டுக் கொடுத்த வாழ்பவர்கள் பிறர்மீது அன்புடன் பழகுபவர்கள், இத்தகைய சிறப்புகள் நிறைந்த ஊரில் அருணாசலம், வசந்தி வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு இசைவேந்தன் என்ற மகன் பள்ளியில் படித்து கொண்டு இருந்தான்.

சில காலங்களுக்கு பின் வசந்தியின், கணவர் இறந்துவிட்டார். குடும்பம் நிலைக்கு லைந்தது. குடும்ப சுமை அவள் தலையில் விழுந்தது, என்ன செய் வது என்று தெரியாது நின்றான்.

வசந்தியின் தோழி சிந்து வீட்டிற்கு வந்தால், ஆறுதல் கூறினாள்.


சிறிது நேரம் கழித்து தோழி வசந்தியிடம் நீ தான் அருமையாக சமையல் செய்வாயே நீ ஏன் நம் ஊரில் உள்ள மருத்துவமனைக்கு அருகில் காலை உணவகம் நடத்தக்கூடாது என்று யோசனை கூறினான்.

நல்ல யோசனை தான் என்றாள் வசந்தி, எனினும் அதற்கெல்லாம் முதலீடாக பணம் வேண்டுமே என்று சுனங்கினால். கவலை வேண்டாம் பணத்தை நான் ஏற்பாடு செய்கிறேன் என்று சிந்து கூறவே, இடம் பார்த்து உணவகம் திறந்தாள் வசந்தி, வசந்தியின் கை பக்கவத்தில் சுவையான உணவை உண்டவர்கள் மீண்டும் மீண்டும் வரத்தொடங்கினார்கள்.

இப்படியாக ஊரில் பலர் வசந்தியின் உணவகத்திற்கு வாடிக்கையாளரானார்கள்.

காலை மட்டும் டிபன் கடை நடத்திவந்த வசந்தி வாடிக்கையாளர்களின் வசதிக்காக இரவு கடையும் தொடர்ந்து நடத்தினாள் உணவகத்தில் இலாபம் கிடைத்ததால் மகனை தனியார் பள்ளியில் படிக்க வைத்தாள்.

பள்ளி முடிந்தவுடன் அம்மாவின் உணவகத்திற்கு வந்து உதவிகள் செய்வான் இசைவேந்தன். நன்றாகவும் படித்து வந்தான்.



கடின உழைப்பிற்கு ஈடாக இசை வேந்தனுக்கு கல்லூரி படிப்பு சிறப்பாக முடிவடைந்தது, பலனாக வெளியூரில் பெரிய நிறுவனத்தில் கைநிறைய சம்பளமும், தங்குவதற்கு வீடுடன் வேலையும் கிடைத்தது.

தன் அம்மாவையும் வேலை செய்யும் ஊருக்கே தன்னுடன் அழைத்துச் சென்றான் இசைவேந்தன்.

வேலை செய்யும் நிறுவனத்தில் பிரியா என்ற பெண்ணும் வேலை செய்தாள், இருவரும் நட்புடன் பழகி வந்தனர் நாளடைவில் நட்பு காதலாக மாறியது.

பிரியா திருமணம் செய்துகொள்ளலாம் என்று கேட்டாள், அதற்கு இசைவேந்தன் தன்னை அரும்பாடு பட்டு வளர்த்த தாயிடம் அனுமதி பெற்றபின் பதிலளிப்பதாக கூறினான்.

மறுநாளே இசைவேந்தன் பிரியாவை குறித்து தன் தாயிடம் கலந்து ஆலோசித்து, தானும் அந்த பெண்ணை திருமணம் செய்ய விரும்புவதாகவும் தாயிடம் கூறி அனுமதி வேண்டினான், வசந்தியோ, மகனே உன் விருப்பமே என் விருப்பம், நீ மகிழ்ச்சியாக வாழ்ந்தால் எனக்கு நிம்மதி உங்கள் மகிழ்ச்சியே எனக்கு முக்கியம் என்று தனது சம்மதத்தை தெரிவித்தாள்.

இரு குடும்பமும் இணைந்து கோவிலில் திருமணத்தை நடத்தி வைத்தனர். அன்று மதியம் வீட்டின் அருகில் உள்ள குழந்தைகள் காப்பத்திற்கு சென்று குந்தைகளுக்கு மதிய உணவு வழங்கி, குழந்தைகளோடு மண மக்களும் உணவு உண்டு மகிழ்ந்து வீடு திரும்பினர்.

பிரியா திருமணத்திற்கு பிறகு சுய நல வாதியாக மாரி வசந்தியை மதிக்காமல் அனைத்து வேலைகளையும் கொடுத்து செய்யச் சொன்னால்.

கணவன் முன் வசந்தி அம்மாவை மதிப்பது போல நடிப்பாள், வசந்தியின் சமையலை குறைக் கூறிக்கொண்டும், அவமதித்து பேசிக்கொண்டும் இருந்தாள். மேலும் இசைவேந்தனிடம் பேசவும் அவள் அனுமதிப்பதில்லை.

இந்த சூழல் வசந்திக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. தனிமை வசந்திக்கு மன அழுத்தத்தையும், உடல் நலக் குறைப் பாட்டையும் ஏற்படுத்தியது. இதை சாதகமாக பயன்படுத்திய பிரியா சமையலுக்கு வேலையாள் அமர்த்தினாள்.

அம்மாவின் உடல்நலன் கருதி இசைவேந்தனும் சம்மதித்தேன்.

மல்லிகா என்பவளை வேலைக்கு சேர்த்தாள் பிரியா, மல்லிகா நன்றாகவே சமைத்தாள். மற்ற வேலைகளையும் சுறுசுறுப்பாக செய்தாள். இசைவேந்தன் ஒரு மாதம் வெளியூரில் உள்ள தலைமை நிறுவனத்திற்கு சென்றான். இந்த வேலையில் வசந்தியின் உடல்நலம் மேலும் மோசமானது, இதை கண்டும் காணாமல் இருந்தாள், பிரியா தன் கணவனிடமும் வசந்தியின் நிலையை பகிராமல் மறைத்தாள்.

இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மல்லிகா, வசந்தியிடம், அம்மா தங்களின் நிலைக்குறித்தும், தங்களிடம் பிரியா அம்மா நடந்து கொள்ளும் முறைக் குறித்தும் ஐயாவிடம் நீங்கள் தெரிவிக்கலாமே, அதை விடுத்து ஏன்னம்மா உங்களையே நீங்கள் வருத்திக்கொள்கிறீர்கள் என்றாள்.

அதற்கு வசந்தியோ என் மகனின் மகிழ்ச்சியே எனக்கு முக்கியம், இவற்றை யெல்லாம் கூறி அவனை காயப்படுத்த நான் விரும்பவில்லையம்மா. நீயும் இது குறித்து அவனிடம் எதும் கூறாதே என்று கேட்டுக்கொண்டாள் வசந்தியம்மா.

ஊரில் இருந்து இசைவேந்தனும் வந்தான்.

தாயின் நிலைக்கண்டு தளர்ந்து போனான். இதை கண்ட மல்லிகா, ஐயா தங்களின் மனைவி அம்மாவை கண்டும் காணாமல் இருந்தார், உடல் நலம் குன்றிய நிலையிலும் மருத்துவமனைக்கு கூட அழைத்துச் செல்லவில்லை.

இது குறித்து அம்மாவிடம் கேட்டபோது என் மகனின் நிம்மதி முக்கியம், என் நிலைக்குறித்து யாரிடமும் பகிரக்கூடாது என்று கூறினார்கள். என்னால் இதற்குமேல் அவர்களின் நிலையைப் பற்றி கூறாமல் இருக்க முடியாது எனவே கூறினேன் என்றாள்.

பிரியாவை அழைத்து, மிகவும் வன்மையாக கண்டித்தான் இசைவேந்தன். தன் தாய்மீது தான் கொண்ட அன்பையும், தன் தாய் செய்த தியாகங்களையும் பிரியாவிற்கு விளக்கினான்.

பிரியாவிற்கு அன்பாகவும் எடுத்துக் கூறினான். தாயை காப்பது நம் கடமை என்பதை அறிவுறுத்தினான்.

பிரியாவும் மனம்மாறினாள். பின் இருவரும் வசந்தியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

வசந்தியின் உடல்நிலையும் தேரியது. இசைவேந்தன் தாயிடம் அவ்வப்போது பேசி மகிழ்ந்தான். வசந்தி தன் மகன் குறித்து பெருமிதம் கொண்டால். உன்னைப் போன்ற பிள்ளை எல்லோருக்கும் கிடைத்தால் முதியோர் இல்லங்களே இருக்காது என்ற கூறி வாழ்த்தினாள்.

கவிஞரேறு வாணிதாசனாரின் கொன்றைவேய்ந்தோன்

தௌவையை முதுமையில் செவ்வையாய்ப் பேணு

தன்னை கருவில் தாங்கி பெற்று வளர்க்கும் தாயை முதுமைக் காலத்தில் சிறப்பாகக் கவனித்துப் பேணிக் காக்க வேண்டும்.

---



# திறமைகளின் புதையல் நீ



அறவழியில் சிந்தனை அகிலத்திற்கும் நல்வினை
பறவையாக இலகுவாக்கி பண்படுத்தும் மனத்தினை!
ஆற்றிடும் செயல்வழி அளித்திடும் மாண்பினை!
உறவாக்கி உள்ளங்களை உயர்த்துவாய் பாரினை!

தவறாத முயற்சியும் தளராத முன்னெடுப்பும்
எவருக்கும் முன்னோடி எழுதிடுவாய் புதுவிதி!
திறமைகளின் புதையலே நீயேதான் அன்றோ?
திறவுகோலாம் நம்பிக்கை நின்னிடமே அன்றோ?

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

# துரைராஜன்.. கவிதைகள்...

**ஒற்றுமை**

கூட்டுக் குடும்பத்தில் நாம்
ஒற்றுமையாய் வாழ்ந்தோம்
தனிக்குடும்பத்தில் நம்மிடம்
வேற்றுமை குடிகொண்டது.

**கனவு**

கனாக் கண்டு ஏங்குவதால்
பயன் ஏதும் இல்லை
கறையின்றி உழைப்பதுவே
பிறந்த பயனாகும்.

**தாயின் அன்பு**

தாயின் அன்புக்கு ஈடாக
எதுவுமே இல்லை
அதனை மறுப்பவர் எவரும்
உலகினில் இல்லை.

**அமைதி**

எல்லோர் மனமும் வேண்டுவது
அமைதியான வாழ்க்கை
ஆழ்மனதில் அலைகடல்போல்
ஆயிரம் ஆசைகளுடன்.

**காலநிலை**

கோடை வெப்பம் மறைந்து
மழை மேகம் வந்தது
காலநிலை மாற்றத்தால்
மண்ணும் மனமும் நனைகிறது.

**கூட்டுக் குடும்பம்**

கூட்டும் பொரியலும்
உணவுக்கு சுவை கூட்டும்
கூட்டுக் குடும்பமோ
மகிழ்ச்சியை கூட்டும்.



**விழிப்புணர்வு**

மணல் கொள்ளையை தடுத்து
மண் வளம் காப்போம்
விழிப்புணர்வுடன் செயல்பட்டால்
விடியல் கிடைக்கும்.

**தியாகம்**

மெழுகுவர்த்தியின் தியாகத்தால்
ஒளி வந்தது
சொற்களின் கோர்வையால்
கவிதை பிறந்தது.

**போர்**

போரில் உயிரைக் கொடுக்கலாம்
உயிரையும் எடுக்கலாம்
போர்க்களம் உறுதிகொண்ட
ஒரு விளையாட்டு மைதானம்.

**உயிர் வனம்**

காடுகள் இல்லையேல் நாடுகள் ஏது
காடுகள் தானே உயிர்களின் கூடு
மான்களும் புலிகளும்
உலவும் காடு மனிதன் நுழைந்தால்
அலறும் காடு அவனால் நாசம்
தடுப்பது யாரு.

# தூதுபோ செல்லக் கிளியே....

*தூதுபோ செல்லக்கிளியே மாமனும் காத்திருக்கான்*
*தன்னந்தனிமையில் அவனுமே தவித்தபடி இருக்கான்*
*நானுமிங்கு உறக்கம் களைந்து எதிர்பாத்திருக்கேன்*
*மாமன் மொகறையப் பாத்தாலே போதுமே*

*மங்கை காத்திருக்கேன் மாமனும் வந்திடட்டுமே*
*மாமனோடப் பேசிக்கிட்டு இருந்தாப் போதுமே*
*பருவத்துக் காதலிது எப்போதுமே தொடர்ந்திடுமே*
*மாமன் வருவான் முல்லைப்பூத் தருவானே*

*நானும் கூந்தலில் சூடியும் அழகாகி விடுவேனே*
*காதல் மோகம் மனசெல்லாம் நிறைந்திருக்கே*
*அங்கமெல்லாம் அனலாக சூடாகி இருக்கிறதே*
*மாமனும் வந்தா அரவணைத்துக் கொள்வானே*

*கற்புக்கரசியா மாமனோட மட்டும் வாழ்வேனே*
*வேப்பஞ்சீலக் கட்டி மண்சோறும் சாப்பிடுவேன்*
*குலசாமிக்கு பொங்கலிட்டு கிடாவும் வெட்டறேன்*
*மகமாயி அருளோட கண்ணாலமும் நடந்திடுமே*

**கவிஞர் இரா.சீ.பாலகுமார்., M.A .,**
*சந்தோசபுரம். சென்னை - 600073.*



# மாயத்திரை



"எப்போ பார்த்தாலும் தூக்கம் விடிந்து எவ்வளவு நேரம் ஆகிறது?. காலையில் எப்பொழுதுதாவது சீக்கிரமா எழும்புகின்றானா?? இப்படி என்றும் மிகப் பெரிய அர்ச்சனையுடன் தான் காலைப்பொழுது விக்ரமுக்குத் தொடங்கும்.

விக்ரமின் அப்பாவிற்கு கல்லூரியில் பேராசிரியர் ஆக வேண்டும் என மிகப்பெரிய ஆசை. அவரால் அவர் நினைத்ததை படிக்க முடியவில்லை.

பொறியியல் படித்து அதில் மிகக்குறுகிய வயதில் வேலைக்குச் சேர்ந்து அடிமட்டத்தில் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து அவர் மேந்நிலை அடைய பல வருடங்கள் எடுத்து விட்டது.

இன்றும் அந்தத் துறையில் அவர் நினைக்கும் பதிவு உயர்வு அவருக்குக் கிடைக்கவில்லை. இருந்தும் பசங்களுக்காக எல்லாவற்றையும் மறந்து ஓடிக்கொண்டே இருக்கின்றார்.

அதைப்போல தான் விக்ரமின் அம்மா யசோதாவும். படிக்க நினைத்தை படிக்க முடியாமல் கஷ்டப்பட்டவர். இப்பொழுது இவர்களின் முழுக் கனவும் விக்ரமைப் பற்றியது தான்.. விக்ரம் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன்.

"டேய் விக்ரம்! அப்பா வாக்கிங் போய்விட்டு வந்து வேலைக்குக் கிளம்ப குளிக்கப் போயாச்சு. நீ இன்னும் படுக்கையை விட்டு எழுந்திரிக்க மாட்டேங்குற? அப்புறம் அப்பா திட்டாம என்ன செய்வாரு?"

"அட போம்மா, இல்லனா மட்டும் அப்பா என்ன திட்டமாடாங்களா? எப்பொழுதும் எனக்கு அர்ச்சனை நடந்துட்டுதான் இருக்கு.."

"டேய், முதலில் நீ உன்ன மாத்திக்கோ. அப்புறம் உன் அப்பாவை குறை சொல்லாம்".

"சரிம்மா, நீயும் உன் பங்குக்கு ஆரம்பிக்காதே" என்று சலித்துக் கொண்டே பள்ளிக்குக் கிளம்பினான்.

பள்ளியில் விக்ரமின் நண்பன் தாஸ் இடம் எல்லாவற்றையும் சொல்லிப் புலம்பினான். "சரி விடுடா, எல்லாம் ஒரு நாள் மாறும்".

"எதுவும் மாறாது. வா மணியடித்து விட்டது. வகுப்புக்குப் போகலாம்" என்றான் விக்ரம்.

சில நாட்களுக்குப் பிறகு காலாண்டு தேர்வுகள் முடிந்து வகுப்பில் அதற்கான விடைத்தாள்கள் வழங்கப்பட்டன. விக்ரம் எல்லா படங்களையும் சேர்த்து 90% சத விகிதம் மதிப்பெண் பெற்று இருந்தான்..

தாஸ் 80% மதிப்பெண் பெற்று இருந்தான். வகுப்பில் முதல் மதிப்பெண் 96 % சதவிகிதம் தான்.

பள்ளி முடிந்து இருவரும் கிளம்பும்

பொழுது தாஸ் கேட்டான் "டேய்! உனக்கு இன்னைக்கு வீட்டில் ராஜ மரியாதை தான். உன் அப்பாவும், அம்மாவும் உன்னை கொண்டாடப் போறாங்க.. " என்றான்.

"எங்க அப்பாவையும், அம்மாவையும் பத்தி உனக்கு தெரியாது? அந்த மீதம் உள்ள ஆறு சதவிகிதம் என்ன ஆச்சு? என்று அதற்கு ஒரு பெரிய அர்ச்சனை நடக்கும்.. "

"எனக்கு வீட்டுக்குப் போகவே விரும் பமில்லை. நான் உன்னுடன் வரட்டுமா? "என்றான் விக்ரம்

தாஸ் இதுவரை யாரையும் அவன் வீட்டுக்கு அழைத்துச் சென்றது இல்லை. ஆனால் விக்ரம் அவன் உயிர்த்தோழன் என்பதால் அவனால் மறுக்கவும் முடியவில்லை.

இருவரும் தாஸ் வீட்டுக்கு வந்தனர். "அம்மா நம்ம வீட்டுக்கு யாரு வந்து இருக்கானு தெரியுமா? என் உயிர்த்தோழன் விக்ரம். அவன் தான் காலாண்டுத் தேர்வில் இரண்டாம் இடம்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்று தேனீர்க் கோப்பையுடன் வெளியே வந்தான்.

"டேய் உங்க அம்மா எங்கடா? சத்ததையே காணோம். நீ சொன்னதற்கு எந்த பதிலும் இல்லை."

"இதற்கு மட்டும் இல்லை... எதற்கும் என் அம்மாவிடம் இருந்து பதிலும் வராது கேள்வியும் வராது. கொஞ்ச மாதத்திற்கு முன் வந்த கொரானாவால் ரொம்ப பாதிப்படைந்து விட்டார்கள். கை கால்கள் செயலிந்து பேசும் தன்மையையும் இழந்து விட்டார்கள்"

"உனக்காவது உன்னைத் திட்ட, உன்னை வழி நடத்த, உனக்கு வேண்டியதைச் செய்து தர, நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பல வகுப்புகளில் உன்னை கட்டாயப்படுத்தி, உன்னை ஈடுபடுத்த அம்மாவும், அப்பாவும் இருக்கிறார்கள். எனக்கு யார் இருக்கிறார்கள்? எனக்கு அப்பாவும் கிடையாது".

"டேய் ! தாஸ் நீ இதுவரை என்கிட்ட இதைப்பற்றிச் சொல்லியதே கிடையாதே ஏன்? நம் நட்பு அவ்வளவு தானா!"

"உண்மையில் உன்கிட்ட சொல்லக் கூடாதுனு நான் ஒருநாளும் நினைத்தது இல்லை. என் நிலைமையை சொல்ல எனக்கு வாய்ப்பு வரலை. இனியாவது உங்க அப்பாவைத் திட்டாதடா? அவருக்கு உலகமே நீ தான்டா! உன்னைப் பெரிய இடத்துக்கு எடுத்துச் செல்லும் முயற்சிதான் இது" என்றான் தாஸ்

"சரிடா! நான் கிளம்புறேன் ஆனால் இனி உனக்கு யாரும் இல்லைனு சொல்லாதே சரியா?" என்றான் விக்ரம்

வழக்கம்போல வீட்டிற்குச் சென்றதும் அவன் மார்க் பார்த்து அவங்க அப்பா "இன்னும் நீ முயற்சி செய்தால் அதிக மதிப்பெண் பெற்று இருக்கலாம்! உன்னை வைத்து என்ன செய்ய? படிக்க எழுப்பி விட்டால் நல்லா தூங்கத் தெரியும்" என்று அவனைத் திட்ட ஆரம்பித்ததும், கோபப்பட்டு அம்மாவிடம் வாக்குவாதம் செய்யாமல் "கண்டிப்பாக அடுத்து முறை இதை விட சிறப்பாக முயற்சி செய்கிறேன்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்ட சென்ற மகனை சிந்தனையுடன் பார்த்தார் தந்தை.

இந்த மன மாற்றத்தின் காரணம் அவருக்குப் புரியவில்லை. ஆனால் அவனைப் பற்றிய கவலை இனி அவர்களுக்கு இல்லை.



**லட்சுமிசெந்தில்**

**சென்னை**



# நட்பும் VS உறவும்



பரணி சுப சேகர் - மதுரை 17

எதிரி யார்? நண்பர் யார்? உறவுகளின் நிலைப்பாடு இன்று எதைக் காட்டுகிறது? உறவுகளை வரிசைப்படுத்தி ஒவ்வொரு உறவுக்கும் ஒவ்வொரு பெயராக மாமா, அத்தை,சித்தி, தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சின்னம்மா என்று கொண்டாடி மகிழ்ந்த கடைசி தலைமுறையில்தான் நாம் வாழ்கின்றோம். இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் அத்தையோ, மாமனோ, பெரியப்பன், சித்தப்பன் உறவுகளோ இருக்கப் போவதில்லை. வீட்டுக்கு ஒரு பிள்ளை என்று வந்தபோதே உடன்பிறப்பு என்பது இல்லாது போய்விட்டது. விட்ட குறை தொட்ட குறையாய் வம்சத்தில் சில பெரியவர்கள் இருப்பதினால் உறவுகள் இப்போது அறிமுகம் ஆகின்றன. ஆனால் இத்தலைமுறையோடு இவ்வத்தியாயம் முடிந்து போகும் ஒன்றுதான்.

உறவின் பாசப்பிணைப்புகள் வருங் காலத்தில் இருக்கப் போவதில்லை. பெரிய ஆலமரம் போல் இருந்த குடும்பங்கள் இன்று ஒற்றைப் பனைமரம் போல் ஆகி வருவதை பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றோம். உறவுகள் என்ற ஒன்று இருக்கும் போது செய்முறை அல்லது பாத்தியதை, இவைகளோடு பாதுகாப்பு என்ற ஒன்று கூடுதல் பலமாக இருந்து வந்திருக்கிறது. உறவுகளே இல்லையென்ற நிலை வரும்போது, உதவியின் வடிகால்களும் இல்லை யென்று ஆகி தனித்ததோர் நிலையில் அத்தனையையும் நாமே வடிவமைக்க

வேண்டிய நிலையில் தான் இருக்கின்றோம். காலத்தின் கோலமாகவே இது இருந்தாலும், கண்முன் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றோம். ஒரு பண்டிகையோ, திரு விழாவோ வரும்போது உறவுகள் தன் பெற்றவர்களைத் தேடி குடும்பமாக வந்து, மகிழ்வைப் பகிர்ந்து, மனம் விட்டுப் பேசி, குறையில்லா நிறைமனதாய்த் திரும்பிச் செல்லும் நிலை கரைந்து போன கனவாகி விட்டது.

இன்று உறவு என்பது நட்புகளாலேயே தீர்மானிக்கப்படுகிறது. நட்பு உறவாகி விட முடியுமா என்றால் இன்றைக்கு இது சாத்தியமாகவே தெரிகிறது. ஒன்று மட்டுமே உண்மையாகத் தெரிகிறது. பாகுபாடில்லாத உறவுமுறையாக நட்பு வளர்ந்து வருகிறது. சாதிக்கு அப்பால், இனத்துக்கு அப்பால் ஒரு நல்ல பரிமாணமாக நட்புகள் நமக்கிருப்பது மட்டும்தான் ஆறுதல் அளிக்கிறது. உறவு முறை என்ற ஒன்று மறைந்து வரும் காலத்தில் நட்பு என்பது உறவாகி அந்த இடத்திற்கு வருகிறது. ஆனால் நட்பு என்ற போர்வையில் உள்ள அனைவரும் உறவுக்கான இடத்தைப் பிடித்து விட முடியுமா?

பார்வைக்கு முன், பார்வைக்குப் பின் என நட்பையும் ஆராய வேண்டிய நிலைதான் உள்ளது. தேனொழுகப் பேசி நம் முன் நல்லதோர் முகபாவத்தோடு இருப்பவன், மனதுக்குள்ளே நமக்கு எதிரான செயல் மனம் கொண்டிருப்பதும் இங்குதான். இதனை நாம் நட்பென்று சொல்ல இயலுமா? நல்லவேளை உறவு வட்டத்தில் இவனில்லை என்று மகிழலாம். காரணம் உறவென்றால் பொறுத்துப் போகவோ, சகித்துக்கொள்ளவோ வேண்டியிருக்கும். நமக்கு பிடிக்கவில்லை யென்றாலும் குடும்பத்தில் யாருக்காவது பிடித்து இருக்கும். ஒட்டவும் முடியாமல் வெட்டவும் முடியாமல் உள்ளுக்குள் வெந்து வெளியே புன்னகைக்க வேண்டிய நிலையை உறவு தந்து விடும். நட்பில் இந்த கொடுமையில்லை. அந்த வகையில் மகிழ்வுண்டு.

கண்டுகொள்ளாத பல உறவுகளும் உண்டு. கண்ணீர் விடும் சில நட்புகளும் உண்டு பிரதிபலன் எதிர்பார்க்காது, தோள் கொடுக்கும் நட்புகள் என்றும் இனியதோர் உறவுகள்தான். நமது சங்கடமான நேரங்களில், மனம் சங்கடப்படாமல், தோள் கொடுக்கும் சுயநலம் இல்லாத நட்புகள் உறவுகளை விட சிறந்ததுதான். இது நாம் வாங்கி வந்த வரம்தான். ஆனால், எல்லோருக்கும் இது வாய்த்து விடுகிறதா என்றால் வாய்ப்பு சிறிது குறைவு தான். உறவோ, நட்போ உணர்வோடு ஓடி வர சிலர் மனதளவில் தயாராக இருந்தாலும் அவர்களின் பின்புலத்து இயக்கத்தாலே தன்னைக் காட்டிக் கொள்ள முடியாமல் வெளிக்கொணர முடியாமல் மூடிக் கொள்ளும் மனப்பான்மையோடு சிலரது வாழ்க்கை இருப்பதையும் நாம் உணரத் தான் வேண்டியுள்ளது. மனமிருந்தும் வழியில்லா நிலை. இதற்காக கவலைப் படக் கூடாது. எல்லோருக்கும் ஒவ்வொரு காலம் அப்படியும், இப்படியுமாக இருக்கத்தான் செய்யும். அப்போது உண்மை உணரப்படும்.

நட்போ, உறவோ சம்பிரதாயத்துக்காக இல்லாமல் இதய சுத்தியோடு ஒருவருக்கொருவர் புரிதலுடன் நடந்து கொண்டால் வாழ்வைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. கூடவே இருந்து குழி பறிப்பவர்களை விட, எட்ட இருந்து எதுவும் செய்யாது இருப்பவர்களை நம்பி நகர்ந்து விடலாம். இன்றைக்கு ஒருவன் முன்னேற்றத்தை உள்மனதில் இருந்து வாழ்த்துபவர்கள் இருக்கிறார்களா, என்றால் எண்ணிக்கை அவ்வளவு கூடுதலாக இல்லை. தனக்கென்றால் ஒரு நிலைப்பாடும் மற்றவர்க்கென்றால் வேறொரு நிலைப்பாடும் கொண்ட நரம்பில்லாத நாக்குகள் எதையும் பேசும்போது, யாரையும் எதிர்பார்க்காது இருப்பதே நல்லது என உணரப்படும் நிலைதான் இன்று.

முன்னேற்றத்தைக் கண்டு முனங்காது. முழு மனதோடு ஆக்கமும், ஊக்கமும்



கொடுக்கும் மனிதர்கள் உறவுகளை விட சிறந்தவர்களே. காசு, பணம் கொடுத்து உதவ வேண்டாம். கவலைப்படும் சமயத்தில் கவலைக்கு மருந்தாக ஆறுதல் வார்த்தை தருவதும், இக்கட்டான நேரங்களில் இளகிய மனதோடு தோள் கொடுத்து துணை நிற்பவர்களும், யாராக இருந்தாலும் உறவைக் காட்டிலும் சிறந்தவர்களே. இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். நாம் நல்ல நிலையில் இல்லாதபோது நமக்கு சோதனைகள் வரும் போது, தான் பெரியவன் என்ற அகங்காரமின்றி மனிதத்தோடு நம்மோடு இருப்பவர்கள் நமக்கு மிகவும் முக்கியமானவர்கள். அவர்களை நாம் இழந்து விடக்கூடாது; மறந்து விடக் கூடாது.

உறவு என்று சொல்லிக்கொண்டு உள்ளுக்குள் குழி பறிப்பவர்களை விட உரிமையோடு நம்மை நல்வழிப்படுத்தும் நட்பே சிறந்தது. நல்லது, கெட்டதை எடுத்துச் சொல்லி நம்மை ஆபத்தில் இருந்து காப்பாற்றும் நல்ல நட்பு நமக்கு கிடைத்தால் அது உறவுதான். இரத்த சம்பந்தம் என்பது வெற்று வார்த்தைதான் என்றுதான் களத்தின் காட்சிகள் இருக்கின்றன. கசப்பான வார்த்தையாக இருந்தாலும் உன்னைக் காத்திட அது உதவுமென்றால் அதைச் சொல்லும் நட்பின் மீது கோபம் கொள்ளக்கூடாது. இனிக்கப் பேசி குழியில் தள்ளும் உறவை விட இடமறிந்து இணக்கத்துடன் நடந்து கொள்ளும் நட்புறவுகள் நமக்கு கிடைத்த வரமாகும்.

நட்போ, உறவோ நாம் கேட்காமல் நமக்கு உதவ வேண்டும். கேட்டும் முகத்தைத் திருப்பிக் கொள்ளும் மனநிலையில் உள்ள உறவுகளுக்காக மனம் வருந்தக் கூடாது. காற்று எப்போதும் ஒரே திசையில் வீசுவதில்லை. காத்திரு. காலம் அனைத்தையும் கவனித்து, காத்திருந்து தன் தீர்ப்பை வழங்கும். சரியான சமயத்தில் சரியான பதிலை காலம் வழங்கும். உனக்கு இடர் மிகுந்த காலத்தில் உதவாதவர்களை புறம் வைத்து விட்டு உனக்காக தோள் கொடுப்பவர்களைத் துணையாக்கிக் கொள். உன் வாழ்வு அர்த்தமுள்ளது. நீ எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறாயோ அதே மாதிரி உனக்கானவர்களும், உனக்காக வாழ்வார்கள் என்ற உறுதி யோடு வாழ்வைத் தடமாக்கு. வாழ்க பல்லாண்டு. நட்போ உறவோ நலம் தருவதை மட்டும் அருகில் வைத்துக் கொள் போலிகளைப் புறந்தள்ளு. புகழோடு வாழ்வாய்.

# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாயத்துல்லா

**பகுதி-04**

நீயும் நானும்
நீளும் மேகமா...?
இல்லை பொழியும் மழையா...?

வைத்தியசாலை வளாகத்தினுள் நுழைந்த முச்சக்கர வண்டி வாயிலின் அருகில் நிறுத்தப் பட்டது தான் தாமதம் போல அவசரமாக இறங்கிக் கொண்டாள் ஹிஸ்னா.

எட்டு வயது மூத்தவனிடம் தங்கை யின் கையைப் பிடித்துக் கூட்டி வரச் சொல்லி விட்டு, ஒரு வயது மகனை மட்டும் அவள் தன் தோள் மீது தூக்கிக் கொண்டாள்.

பிள்ளைகளைத் தன் பின்னே தொடர்ந்து வரச் சொல்லிவிட்டு முன்னேறி நடந்தாள்.

கூட்ட நெரிசலில் யாரிடம் என்ன கேட்பது என்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தாள்.

மச்சானிடம் கோல் பண்ணிக் கேட்போமா என்று எத்தனையோ தடவை முயற்சித்துப் பார்த்து, தோல்வி மட்டுமே அவளை பார்த்துச் சிரித்துத் தள்ளியது.

அருகிலிருந்த கதிரையில் பிள்ளைகளை அமர்த்தி விட்டு, ரிசப்ஷனில் போய் நவாஸ் எனும் பெயரைச் சொல்லி விசாரித்தும் பார்த்தாள்.

அப்படி யாரும் அட்மிட் ஆகவில்லை என்று பதில் வந்தது.

அந்தப் பதில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

‘மச்சான் கால் பண்ணினாரே....
சீவன் இல்லாமல் விழுந்து என்றாரே ....
உடனே ஹாஸ்பிடல் போறோம்...
எனக்கும் வாருங்கள் ....

என்று தானே தகவல் தந்தார்....

இப்பொழுது ஏன் போனை ஆன்சர் பண்ணுவதில்லை....?

ஒருவேளை தோழி அஸ்மா சொன்னது போல சதா சண்டை போடுகிறேன் என்று என்னை விட்டு வேறு ஒருவருடன் வாழ திட்டமிடுகிறாரோ....?

ராக்கெட் வேகமெடுத்தது நெஞ்சின் புல்லட்கள்.

‘அஸ்மாவின் முன்னுத்தூட்டு சபீஹாட மாப்புள, சபீஹா ஒரே சண்டை புடிக்கிற எண்டு நான் வேற ஒருத்தரை பார்த்துட்டுப் போறன் எண்டு செல்லி இப்ப அவங்க பிரிஞ்சி ஈக்கிறாங்க...’

அஸ்மா சொன்ன வார்த்தைகள் அவள் மனதில் டேப் ரெகார்டிங் போல மீண்டும்

ஓடியது. நெஞ்சு சந்தேக மயானத்தில் பிணம் திண்ணிக் கழுகைப் போல முகாமிட்டது.

«இவருடைய பேரும் இல்ல எண்டு தானே செல்லுற...

மச்சான் சீவன் இல்லாமல் கீழே புழுந்து எண்டு தானே சென்ன...

ஒருவேளை இவர் வந்து என்னையும் வேணாண்டுவாரோ...

அண்டைக்கு அவருக்கு ஒரு கோல் ஒண்டு வந்த... அவரு முன்னுக்கு ஹால் ல தான் ஈந்த...

உடனே போன் அ எடுத்துக் கொண்டு வெளிய பெய்த் திட்ட....

இத நான் அஸ்மா கிட்ட சென்ன உடனே தான் அஸ்மா சபீஹாட விஷயத்தயே எனக்கிட்ட சென்ன...

எனக்கும் சந்தேகம் தான்....

இவரும் எவளயாவது இழுத்துக் கொண்டு வந்துரும் என்டு...

அவரு தாரசரி கூட்டிட்டு வந்தால், நான் என்ன செய்ய இனி...?

எனக்கு அப்படி ஏன்ட வாழ்க்கைய உட்டுக் குடுக்க ஏலுமா...?

எவள் வந்தாலும் நான் உட்டு குடிக்கியல்ல...

நவாஸ் ஏண்ட.... ஏண்ட மட்டும்...

அவருக்கு எப்படி சரி நான் ஏண்ட இரக்கத்தை விளங்கப்படுத்துவன்....

புதுசா வந்தவளை அடியோட உட்டுட்டு வர சொல்லுவன்...

அதையும் கேட்காட்டி பாக்கோமே....

அவருக்கு அப்படி லேசா என்ன உட்டுட்டு போகேலா... நானும் உடப் போறோம் இல்ல அப்படி...»

அவளின் மனம் எங்கெங்கோ அலை பாய்ந்தது.

வாயும் தனக்குத்தானே பேசிக் கொண்டது.

«மச்சான் சீவன் இல்லாம புழுந்தெண்டு தானே சென்ன. ..

செல நேரம் வேற எங்க சரி ஹாஸ்பிடல் கூட்டிட்டு பெய்த்தோ...

இனி எல்லாத்துக்கும் போன் ஆன்சர் பண்ணோணுமேன் ...

பண்ணினால் தானே விளங்கும்....

உண்மைக்கும் அவருக்கு என்ன சரியா...

இல்லாட்டி என்ன பயம் காட்டத்துக்கு இப்படி செல்லியோ... அல்லாஹ் அறிவான்...»

பெருமூச்சு விட்டாள். உதடு மட்டும் அசைந்து கொண்டே இருந்தது.

‘அவருக்கு மட்டும் ஒன்டும் ஆகிறப் படாது யா அல்லாஹ்...

அவருக்கு மட்டும் ஒன்...டும் ஆகிறப் படாது.....

ஏண்ட மூணு புள்ளைகளுக்கும் வாப்பா வேணுமே...‘

நேராகவும் மறையாகவும் அவளில் எழுந்த எண்ண அலைகளை அவள் காற்றோடு கலக்கச் செய்தாள்.

«உம்மா ஏன் நாங்க இங்க வந்தீக்கிற...?» மூத்த மகளின் கேள்விக்கு விடை தெரியாதவளாய் அவள் விழித்துக் கொண்டிருந்தாள்.

பத்துப் பதினைந்து நிமிடத்திற்கு மேல் அவள் அங்கே இருந்திருப்பாள்.

என்ன செய்ய வேண்டும் என்று தெரியாத நிலை.

அவள் பதைப்பதையும், பிள்ளைகளின் கையைப் பிடித்து அழுந்த பதிப்பதையும் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி அவள் அருகில் வந்தார்.

சிங்களத்தில்,'மகள், புள்ளைகளோடு ஏன் இங்கே ஈக்கிறீங்க?» என்று கனிவாய் விசாரித்தார்.

அவளுக்குத் தெரிந்த அரைகுறை சிங்களத்தில் பதில் அளித்தாள்.

சில வேளை எமர்ஜென்சி வார்டில் இருக்கலாம்... பெயர் பதிவிடாமலும் இருக்கலாம்... என்று அவர் தந்த தகவலின் படி எமர்ஜென்சி வோர்ட் நோக்கிப் பிள்ளைகளுடன் நடக்கலானாள்.

அவசர சிகிச்சைப் பிரிவை நெருங்கும் வரையில் அவளின் உள்ளம் அவளிடம் இல்லை.

«நவாஸுக்கு ஆக்சிடெண்ட் ஆகி இருக்குமோ.... அப்படியே ஆக்ஸிடெண்ட் ஆகி இருந்தால், ஏன் மச்சான் சீவன் இல்லாம புழுந்து என்று சொல்லோணும்...?

எமெர்ஜென்சி வார்டுல என்டால் ஆக்சிடெண்ட் ஆனதுல என்ன சரியாகி ஈக்குமோ...?

அவருக்கு பெருசா என்ன சரியாகி நான் பயந்துருவன் என்டு செல்லி இப்படி எனக்கு செல்லி ஈக்குமோ...?»

தொடர் கேள்விகள் மனதில் தொடர்ந்த வண்ணமே இருந்தன. மனதால் நினைத்ததை விட்டில் சத்தம் போல சொல்லியும் பார்த்துக் கொண்டாள்.

அவசர சிகிச்சைப் பிரிவின் கதவருகே....

அங்கே....

ஸ்ட்ரச்சர் மேலே...

நவாஸைப் போலவே ஒரு உருவம்....

துணி கொண்டு மூடியிருந்தது...

கை மட்டும் கீழே விழுந்து, சரிந்து இருந்தது...

சரிந்திருந்த கையின் விரல்களில் நவாஸின் கண்டாள்...

அவளின் உலகமே நின்று விட்டது..

«ஹோ...» என அழுகை பீரிட்டது.

அழுத வண்ணமே அந்த ஸ்ட்ரச்சரை நெருங்கினாள்...

நவாஸுக்கு என்ன நடந்திருக்கும்....?

**அன்பின் பாலம் தொடரும்...**

# புதுக்கவிதைகள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

உங்க அம்மா பேச்சு தான்
உங்களுக்கு முக்கியமா போச்சு
என்று சொல்லும் மனைவி
தன் குழந்தை இடம் அம்மா சொல்லை
கேட்க மாட்டாயா என்று
கடிந்து கொள்கிறாள்
இது என்ன முரண்பாடு.
..................................................

வேலை தெரியாதவன்
உயர் பதவியில் இருப்பதும்
வேலை தெரிந்தவன் அடிமையாக
இருப்பதும் இந்த நாட்டின்
சாபக்கேடு.
..................................................

கடமையை செய்பவனுக்கு கடமைகள்
இருந்து கொண்டே இருக்கும் .
கவலைப்படுபவனுக்கு கவலைகள்
இருந்து கொண்டே இருக்கும்.
..................................................

வாய்ப்பு வரும்வரை
காத்திருக்காமல் வாய்ப்புகளை
உருவாக்குபவனே புத்திசாலி
..................................................

பணம் கூட
சில இடங்களில் தான்
தேவைப்படுகிறது
ஆனால் பொறுமை எல்லா
இடங்களிலும் தேவைப்படுகிறது
..................................................

நம் கையில் காசு இல்லை என்றாலும்
நம்மை வந்து எட்டிப்பார்க்கும்
ஒரு விஷயம் வியாதி தான்
..................................................

கோவில் வாசலில் உள்ள
மனிதனிடம் நம் செருப்பை
காசு கொடுத்து பாதுகாக்க
சொல்லிவிட்டு கடவுளிடம் சென்று
நம்மை பாதுகாக்குமாறு
வேண்டிக் கொள்கிறோம்
..................................................

அளவோடு சிந்தித்தால்
சிந்தனைவாதி
அளவில்லாமல் சிந்தித்தால்
சிந்தனையே வியாதி
..................................................

கோவிலில் நூறு ரூபாய்
கொடுத்தால் கடவுளை அருகில்
பார்க்கலாம் கோவிலின் வெளியே
இருக்கும் பிச்சைக்காரருக்கு
நீங்கள் ஒரு ரூபாய் கொடுத்தால்
அவர் உங்களை கடவுளாக பார்ப்பார்.
..................................................





POWER POINT STORIES 2. O : 01

பவர் பாயிண்ட் கதைகள் 2. O : 01


முதல் அத்தியாயம் : வனஜா முத்துக்கிருஷ்ணன்
இரண்டாம் அத்தியாயம் : விஜி சிவா
மூன்றாம் அத்தியாயம் : ருக்மணி வெங்கட்ராமன்
நான்காம் அத்தியாயம் : கி. இரகுநாதன்

கதை நெறியாள்கை : விஜி சிவா


சிறுகதை

# காட்டின் மொழி

## அத்தியாயம்: 01


**எழுதியவர் :**

**வனஜா முத்துக்கிருஷ்ணன்**




"நம்மளோட இந்தச் சிறிய கிராமத்தில் உள்ள அழகிய நதி, குளத்தில் பூத்திருக்கும் வண்ண மலர்கள், நீல வான ஓடையில் நீந்திக் கொண்டிருக்கும் வாத்துக் கூட்டங்கள்...."அடடா, இயற்கை எவ்வளவு அழகும் அற்புதமும் நிறைந்தது தெரியுமா ஆச்சி?" உற்சாகக் குரலில், தன் தாவணியைச் சரி செய்தபடி அந்த ஓட்டு வீட்டினில் நுழைந்த ரோஜா,"இன்னைக்கு நம்ம பிள்ளையார் சாமிய கும்பிட்டு வர கொஞ்சம் லேட் ஆயிடுச்சு ஆச்சி." என்றாள். தன் பாட்டியிடம் இருந்து எந்த பதிலும் வராமல் போக, பதட்டத்துடன் கூர்ந்து பார்த்தாள் ரோஜா.

அங்கு ஒரு கிழிந்த பாயில் சுருண்டபடி முனகிக் கொண்டிருந்தாள், ரோஜாவின் பாட்டி முத்தம்மா.

"ஐயயோ... என்ன ஆச்சி...? உடம்பு இப்படி அனலாக் கொதிக்குது" பரபரத்தவள்,"இரு கொஞ்சம் கஷாயம் போட்டுகினு வாரேன்." என்று தன் தாவணியை இழுத்துச் சொருகிக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

"ஆச்சி, இந்தா... கசாயமும், கஞ்சியும் காய்ச்சிக் கொண்டாந்திருக்கேன். குடிச்சிட்டு பேசாம ரெஸ்ட் எடு, நீ இன்னைக்கு வேலைக்கெல்லாம் போவேணாம்." குரலில் கண்டிப்பு காட்டினாள் ரோஜா.

"உன் தாத்தன் இருந்த வரை கவலை இல்லாம இருந்துச்சு." கண்களைத் துடைத்துக் கொண்டாள் முத்தம்மா.

முத்தம்மாவை அணைத்துக் கொண்ட ரோஜா,"ஆமா ஆச்சி. ஆனா நாம ரோடுல நிக்காம இருக்க இந்த ஒரு ஓட்டு வீடாவது வாங்கி வச்சுட்டு போயிருக்காரு தாத்தா. நீ கவலைப்படாதே ஆச்சி. நான் கௌம்பறேன். இன்னக்கு ரிசல்ட் வருது. 'நான் நல்லபடியா பாஸ் பண்ணணும்' என்று ஆசிர்வாதம் செஞ்சு அனுப்பி வை." என்று முத்தம்மாவின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

"உன் தங்கமான மனசுக்கு நீ நல்லா இருப்ப ஆத்தா. ஆனா ரோசா"... என்று இழுத்த முத்தம்மா,"நம்ம ஊருல எல்லாரும் பஸ்ல போயித்தான் பள்ளிக்கூடம் போறாங்க.

ஆனா நீ இந்தக் காட்டு வழியாப் போறது எனக்கு பயமா இருக்கு. தெனம் நீ வீட்டுக்கு வர வரைக்கும் மனசு 'திக்திக்'னு அடிச்சுக்குது. உன்னோட தாத்தன் இருந்த வரை உன் கூடவே அவரு வருவாரு. பயமில்லாம இருந்துச்சு எனக்கு."

"ஆச்சி.. எனக்கு என்னமோ பஸ்ஸே பிடிக்கலை. காடு, அங்க இருக்கிற மரங்க இவைகளை எத்தனை வருசமா நான் பார்த்துட்டு வரேன். தாத்தா அந்த மரங்க, செடி கொடிங்க கிட்ட என்னை சாக்கிரதையா பாத்துக்கச் சொல்லி இருக்காரு. தெனமும் அங்க இருக்கிற மரங்க, செடி, பறவைங்க எல்லோரும் எனக்குத் துணையா வராங்க. இயற்கையை ரசிச்சுகிட்டே போகும் போது ஒரு பயமும் இல்லை. அப்புறம் என் பிரண்டு... ரிஸ்கி.. அந்தக் குரங்கு இருக்கே..." என்று சிரித்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தாள்.

'என்ன பொண்ணு இது! இயற்கை அது இதுன்னு என்னமோ சொல்லுது. ஒண்ணுமே புரியலை. அந்தக் காட்டு காளியம்மன் தான் பார்த்துக்கணும்' ஆகாயம் நோக்கி கும்பிட்டாள் முத்தம்மா.

... ... ...

'பிள்ளையாரப்பா... இன்னிக்கு உன் கிட்ட ஸ்பெஷல் வேண்டுதல் வச்சிருக்கேன். இன்னிக்கு எனக்கு ரிசல்ட் வருது. என்னை வளர்த்த பாட்டியையும், தாயா இருந்து வளர்த்த இந்தக் காட்டையும் காப்பாத்தணும்.' மனதிற்குள் வேண்டியபடி காட்டினுள் நடந்து சென்றாள் ரோஜா.

'இந்தக் காட்டு வழியாப் பள்ளிக்கூடம் போறது இன்னிக்குத்தான் கடைசி நாளு' எண்ணுகையில் ஏனோ கண்ணீர் உருண் டோடியது ரோஜாவிற்கு.

... ... ...

ரோஜா, சற்று உற்சாகத்துடனும், மனக்கலக்கத்துடனும், தலைமையாசிரியையின் அறைக்கு வெளியே நின்று,"மிஸ்... உள்ளே வரலாமா?" என்றாள். அங்கிருந்த ஆசிரியர்கள் அனைவரும் அவளைப் பார்த்தவிதத்தில்... சற்று பயத்துடனும், குழப்பத்துடனும் தயங்கி நின்றாள்.

இந்தச் சிறிய பள்ளிக்கூடம் 'ரோஜா' என்ற ஒரு செடியை நட்டது. அது பெரிய தோட்டமாக மாறுமா?!

... ... ...



## அத்தியாயம்: 02

**எழுதியவர் : விஜி சிவா**

"வாழ்த்துகள் ரோஜா. மாநில அளவில் நீ இரண்டாவதா வந்திருக்க. நம்ம ஸ்கூலுக்கு நீ பெருமை சேர்த்துட்ட." புன்னகை ததும்ப அவளைச் சற்று அணைத்தவாறு கைகுலுக்கினார், தலை மையாசிரியை.



விழித்த ரோஜாவை, "கங்கிராஜுலேசன்ஸ் ரோஜா" எனக் கூறியவாறு, தன் மாணவியைப் பெருமையுடன் கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டார், அவளின் வகுப்பு ஆசிரியை.

அங்கிருந்த மற்ற ஆசிரியர்களும் அவளை கைகுலுக்கி வாழ்த்தினர்.

"நீ நல்லா படிப்பேன்னு உங்க கிளாஸ் டீச்சர் சொல்லி இருக்காங்க. ஆனா நீ மாநிலத்திலேயே இரண்டாவதா வருவேனு நாங்க எதிர்பார்க்கல. நம்ம பள்ளிக் கூடத்துக்கும், நம்ம ஊருக்கும், எங்க ஆசிரியர் தொழிலுக்கும் நீ பெருமை சேர்த்திருக்க." பாராட்டினார் தலைமையாசிரியை.

"தேங்க்ஸ் டீச்சர்." மகிழ்ச்சியுடன் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்க, புன்னகையுடன் ரோஜாவை அணைத்துக் கொண்டார் தலைமையாசிரியை.

"ஆமா, நீ மேற்கொண்டு என்ன படிக்கப் போ...?" கேள்விகளை முடிக்கும் முன்பே அங்கு சில பத்திரிகையாளர்கள் வந்தனர்.

தலைமையாசிரியையும், மற்ற ஆசிரியர்களும் எழுந்து நின்று, பெருமை பொங்கிய முகத்துடன் பரபரத்தனர்.

கேமராக்கள் மின்னின. 'வாழ்த்துகள்' பெருகின. ரோஜாவின் நண்பர்கள் உற்சாகமாய்க் கோசமிட்டனர்.

பத்திரிக்கையாளர்களின் வழக்கமான கேள்விக்கணைகள் பறந்தன.

"சரி, நீங்க என்ன படிக்கப் போறீங்க? டாக்டரா... கலெக்டரா... வக்கீலா...? என்ன ஆகப் போறீங்க??"

ரோஜா நிதானமாகச் சொன்னாள்..." ஃபாரஸ்ட் ரேஞ்ச் ஆபிசர் ஆகணும் சார்."

இப்படி ஒரு பதிலை, அங்கிருந்தவர்கள் எவருமே எதிர்பார்க்கவில்லை என்பது அவர்களது முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

தலைமையாசிரியை குழப்பத்துடன் புருவம் உயர்த்தினார்.

"ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா?" ஒரு பத்திரிக்கையாளர் ஆவலுடன் கேட்டார்.

"காட்டைப் பாதுகாக்கணும் சார். நிறைய மரங்கள் வளர்த்து, காடுகளை உருவாக்கணும்." முகம் மலர பதிலளித்தாள் ரோஜா.

"காடுகளை வளர்க்கணுமா..?" தலைமை ஆசிரியை குழப்பத்துடன் முணுமுணுக்க,

"எஸ் மேம். இந்த உலகத்தில் மனிதர்கள் மட்டுமல்ல... எல்லா உயிரினங்களும் வாழ்வதற்கு உரிமை இருக்கு இல்லையா...? அதுக்கு பல்லுயிர்ப் பெருக்கம் ரொம்ப முக்கியம்."

"காடு வளர்ப்பதற்கு இங்கே இடமே இல்லையே பாப்பா?" சற்று வயதான பத்திரிகையாளர் கேட்க,

"கொஞ்ச இடத்திலேயே காடுகள் உருவாக்கலாம் சார். அதுக்கு 'மியாவாக்கி முறை' அப்படின்னு சொல்லுவாங்க... ஜப்பான்காரங்க கண்டுபிடிப்பு அது."

" ........"

"போதுமான தண்ணி இல்லைன்னு சொல்றோம், சுத்தமான காற்று இல்லைன்னு சொல்றோம்,... மிருகங்கள் ஊருக்குள்ள வருதுன்னு சொல்றோம் ஆனா. சொல்றோமே

தவிர, அதுக்கு நாம ஏதாவது பண்றோமா...?

அவள் பேசப்பேச, அங்கு சிறிது சிறிதாக கூட்டம் கூடியது.

"நிலத்தடி நீர்மட்டம் உயர்றதுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாக்கிறதுக்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும், மண் வளத்தைப் பெருக்குவதற்கும்... எல்லாத்துக்கும் மரங்கள் தேவை... காடுகள் தேவை."

அவள் பேச்சைக் கேட்டு அவளுடைய வகுப்பாசிரியை மட்டும் ரோஜாவை மிகவும் பெருமையாகப் பார்க்க, மற்ற ஆசிரியர்களும், தலைமையாசிரியையும் அவளைச் சற்று பயமாகப் பார்த்தனர்.

"ஆண்களே ஏற்கத் தயங்கும் வேலை இது. நீங்கள் பெண்ணாக இருந்து கொண்டு ஒரு காட்டை உருவாக்குவதும் பாதுகாப்பதும்... இந்த வேலை உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறீர்களா?" ஆவலை அடக்க முடியாமல் ஒரு பெண் பத்திரிக்கையாளர் கேட்க,

"இயற்கையை நேசிக்குறதுக்கும் நல்ல மனிதர்கள் வேணும், அவ்வளவு தான் மேடம். அத நாம ஏன் பண்ணக்கூடாது?" அவளின் குரலில்... காட்டின் இளவரசியாய்த் தெரிந்தாள்!

"உங்களுக்கு ஏன் வனத்துறை அதிகாரி ஆகணும் என்கிற ஆசை வந்துச்சுனு நாங்க தெரிஞ்சுக்கலாமா?" குறுகுறுப்புடன் ஒரு பத்திரிக்கையாளர் கேட்க,

"நீங்க என் கூட வாங்க சார். எங்க தாத்தா வளர்த்த காட்டு மரங்களைக் காட்றேன். காடு பேசுவதைப் பாருங்க சார்" ரோஜாவின் முகம் குழந்தையாய் மாறியது.

... ... ...

சற்று நேரத்தில் சில ஆசிரியர்களும், பத்திரிக்கையாளர்களும் அவளுடன் அந்தக் காட்டை அடைந்தனர். இயற்கையின் ஓசையையும், ரம்மியத்தையும் கண்டு வியந்தனர்.

அவள் ஒவ்வொரு மரங்களைப் பற்றியும், தன்னுடைய கண்கள் மின்னச் சொல்லிக் கொண்டு வந்தாள்."சார்... இது கருங்காலி மரம், இது பாலை மரம், அதோ... அது மகோகனி மரம், அது ஈட்டிமரம், இது கருமருது. அப்புறம் அது..."

தூரத்தில் இருக்கும் மரங்களை, அதன் மகிமையை, அதன் வயதை... அவள் சொல்லச் சொல்ல,

ரோஜாவின் அறிவை வியந்தது கூட்டம். புகைப்படக் கருவிகள் மீண்டும் மின்னின.

அப்பொழுது தூரத்தில் சற்று 'சலசலப்பு' சத்தம்!

அந்த இளம் பத்திரிக்கையாளன், ரோஜாவைப் பார்த்தபடி புகைப்படக் கருவியை சத்தம் வந்த திசை நோக்கித் திருப்ப, அந்தக் கருவியின் மெமரி கார்டில் யாரும் அறியாமல் தூரத்திலிருந்த மற்றொன்றும் பதிவாகியது. பலரின் வாழ்க்கையை அசைத்துப் பார்ப்பதாக அது மாறிவிடக்கூடும் என்பது... அன்று அங்கு இருந்த யாருக்கும் தெரியவில்லை.

'காடு மௌனமாய்ப் பேசியது அன்று!'

... ... ...

**அத்தியாயம் : 03**

**எழுதியவர் :**
**ருக்மணி வெங்கட்ராமன்**



அன்று அனைவரும் வியந்து ரோஜாவைப்

பாராட்டி விட்டுச் சென்றனர்.

இளம் பத்திரிகையாளர் சஞ்சய், தனது அலுவலகத்தில் அந்த வீடியோவை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் பதற்றம்; உள்ளத்தில் சற்று குழப்பம். 'வேறு யாரும் இதைக் கவனித்து இருப்பார்களா? ரோஜாவுக்கு இதைப் பற்றித் தெரியுமா?' யோசித்தான்.

... ... ...

அடுத்த நாள் காலை, அந்தக் காட்டுக்குள்... ரோஜா ஒரு செடியை நட்டு, அதனுடன் பேசிக்கொண்டே தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.


"ரோஜா!" மெதுவாக சஞ்சய் கூப்பிட்டான்.

அவள் திரும்பினாள்.

"வாங்க சார்... நீங்க திரும்ப இந்தக் காட்ட பார்த்து, என்கிட்ட பேசணும்னு நேற்று போன்ல சொன்னது எனக்கு ரொம்ப சந்தோஷம்."

சஞ்சய் சில நிமிடங்கள் அமைதியாக நின்றான். பிறகு மெதுவாகச் சொன்னான்:

"ரோஜா, உன்னோட காட்டுக்குள்ளே... யாரோ ஒருவிதமான செடியை வளர்த்து வராங்க. அந்தப் படத்தை கூகுளில் அனுப்பிக் கேட்டேன். அது காத் எனப்படும் ஒரு வகையான போதைச் செடினு கூகுள் சொல்றது. அதன் இலையை மென்று தின்றால் போதை ஏற்படும். அதை எப்படி இங்கு கொண்டு வந்து பயிரிட்டார்கள் என்பது தெரியவில்லை. சில செடிகள், உண்மையில், பல நோய்களுக்கு மருந்து தயாரிக்க உதவுகின்றன. ஆனா இந்தச் செடியை சில நாடுகளில் போதைப் பொருளாகவே பயன்படுத்துகிறார்களாம்."



# பறவைகளின் விழிப்பு

வையம் விழிக்க
விழிக்கும் பறவைகள்
வைகறைப் பொழுதை
விளித்துப் பறக்கும்

கரிச்சான்குருவி காதலொடு
களமாடும் மூன்றுமணி
கருங்குயிலும் கானம்
இசைக்கும் நான்குமணி
காகம் கரையும்
காலமது ஐந்துமணி
கௌதாரி குரல்
எழுப்பும் ஐந்தரைமணி
மீன்கொத்த அழைக்கும்
மீன்கொத்தி ஆறு மணி

வைகறை பொழுதிலே
உழைத்திட முனையுது
பறவைகள் எல்லாம்
கதிரவன் சூடுரைப்பினும்
பொறுத்து உறங்கும் மானிடா
பறவையின் எச்சம் பட்டாலாவது
திருந்த முனை வாயா?

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

ரோஜா அதிர்ச்சியடைந்தாள். அவள் முகம் மாறியது."என்ன... என்ன சொல்றீங்க சார்?"

"உன்னோட காட்டுக்குள்ள நான் எடுத்த வீடியோவில் மரங்களுக்கு இடையில் அந்தச் செடிகள் தெரியுது. இதோ... நீயே பாரு" படத்தையும் வீடியோவையும் காட்டினான் சஞ்சய்.

ரோஜா திகைத்தாள்.

"அது எப்படி சார், எங்க காட்டுக் குள்ள...?"

ரோஜா கூர்ந்து பார்த்தாள். அழகான இலைகளுடன் இருந்த அந்தச் செடி, கவனத்தை ஈர்க்கும் வகையில் இருந்தது.

"சார், நாம அதை நேர்ல பார்த்துடலாமா? அந்த இலைகளைப் பறித்து ஆய்வுக்கு அனுப்பி அதன் இயல்பை உறுதி செய்யணும்."

அதே சமயம் பாட்டி, ரோஜாவைத் தேடிக்கொண்டு காட்டிற்கு வந்தார்.



பாட்டியிடம் அனைத்து தகவல்களையும் ரோஜா கூறினாள்.

"நீ தனியா அந்தப் பக்கம் போறது எனக்குப் பயமா இருக்கு ரோஜா. இது சாதாரண மரம் வெட்டும் விஷயம் இல்ல. இது உயிருக்கு ஆபத்தான விஷயம். பேசாம போலீஸ்ல புகார் மனு கொடுக்கலாம். ஏற்கனவே எல்லோரையும் இழந்துட்டோம்." பாட்டி பதறினாள்.

ரோஜா சற்று யோசித்து...

"இல்ல ஆச்சி, இதன் பின்னனியில் யார் இருக்காங்கன்னு நாம தெரிஞ்சுக்கணும். இந்தக் காட்டை பாதிக்கும் செயலுக்குப் பின்னாலிருக்கும் நிஜ முகம்தான் முக்கியம்."

சஞ்சய் ஆழ்ந்த யோசனையுடனும், குழப்பத்துடனும் ரோஜாவை உற்று நோக்கியபடி இருந்தான்.

ரோஜா தெளிவான முகத்தோடு பாட்டியிடம் சொன்னாள்."ஆச்சி... இந்தக் காடு நம்ம குடும்பம். இந்த மரங்களின் குரலாக நாம இருக்கணும். இந்தக் காட்டில் எத்தனை மரங்களை தாத்தா தன் கையால் நட்டு, நீரூற்றி, அதனுடன் தன் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டார் என்று நமக்குத் தெரியும்."

"ரோஜா, அப்போ எல்லாரும் ஒற்றுமையா அண்ணன் தம்பிகளா பழகின காலம். இப்ப அப்படி இல்லை. 'உழைக்காம ஒரே நாளில் பெரிய பணக்காரன் ஆகணும்னு' எல்லாருக்கும் ஆசை. அதனால்தான் சட்டத்துக்குப் புறம்பான இது மாதிரியான வேலையைச் செய்றாங்க."

பாட்டியின் பேச்சைக் கேட்ட சஞ்சயின் முகம் மாறியது!

ரோஜா தைரியமாகச் சொன்னாள்,"பயப்படாதீங்க ஆச்சி, இயற்கை குரல் கொடுக்கும்." புன்னகையுடன் சொன்னவள்,"நீங்க வீட்டுக்குப் போங்க. நானும் சாரும் அந்த இடத்துக்கு போய் பாத்துட்டு வர்றோம்!" என்றாள்.

ஆமோதிப்பது போல் மரங்களின் கிளைகள் வேகமாக அசைந்தன. பறவைகள் ஒலி எழுப்பின!

... ... ...



## அத்தியம் : 04

**எழுதியவர் :**
**கி.இரகுநாதன்**

அது வரையில் அமைதியாக இருந்த காடு திடீரென்று உயிர் பெற்றதைப் போல இருந்தது. பறவைகள் எங்கே மறைந்திருந்தனவோ..? ஒரே சமயத்தில் பறவைக் கூட்டம் ஒன்று படபடவென்று தம் சிறகுகளை அடித்துக் கொண்டபடி வானத்தில் பறந்து மீண்டும் கிளைகளில் அமர்ந்தன.

ரோஜா வானோக்கி தன் உள்ளங்கையை உயர்த்தினாள், அவள் தோளில் அமர்ந்த பறவை ஒன்று அவள் கையிலிருந்த சூரியகாந்தி விதைகளை கொத்திச் சாப்பிட, மற்ற பறவைகள் கீழே சிதறிய விதைகளைச் சாப்பிட்டன. சஞ்சய் வியப்புடன் பார்த்தவாறு நின்றிருந்தான்.

"காட்டின் மொழியை கேட்கும் போது என்னையே மறந்துடறேன் சார். எவ்வளவு இனிமையான மொழி அது. பறவைகளும், மிருகங்களும்.. ஏன்.. மரம்,, செடி, கொடிகள் கூட தமக்குள் பேசிக் கொள்ளும் மொழியை மனிதர்கள் புரிந்து கொண்டால் இயற்கையை அழிக்க மனம் வராது. இங்கே போதுமென்ற மனம்' யாருக்கும் இல்லை. பணத்துக்கு நிரந்தர அடிமைகளாகி நிற்கறவங்ககிட்ட நீங்க இயற்கையைப் பத்திப் பேசி என்ன பிரயோஜனம் சொல்லுங்க.."

சஞ்சய் பதிலேதும் சொல்லாமல் புன்முறுவலுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அருகிலிருந்த மரங்களில் குரங்குகளின் கூட்டம்.... கிளைக்குக் கிளை தாவி, மரத்துக்கு மரம் எம்பிக் குதித்து, குர்... குர்.....ர்.... குர்ர்ர்ர்' என்று சப்தமிட்டவாறு ஆனந்தக் கூச்சலிட்டன.

"ஹேய்..! ரிஸ்கி..! வாடா இங்க.." என்று மகிழ்ச்சியுடன் ரோஜா கைகளை நீட்ட.. தாவி வந்த ஒரு குரங்கு சட்டென்று நின்று சஞ்சயைப் பார்த்து கோபத்துடன் குர்... குர்.... குர்ர்' என்று சப்தமெழுப்பி அவன் மீது பாய்வதற்குத் தயாராக நின்றது.

ரோஜா குரலில் கண்டிப்பைக் காட்டி னாள்."நோ... ரிஸ்கி.. நீ அவரை ஒண்ணும் பண்ணக் கூடாது...." என்றவள் சட்டென்று சஞ்சயின் தோளை அணைத்து,"ரிஸ்கி..! அவர் என்னோட ஃபிரண்டு.." என்றாள். ஆனால் ரிஸ்கி அவனை முறைப்பதை நிறுத்தவில்லை.

அதனுடன் நேரடி பார்வையைத் தவிர்த்த சஞ்சய்,"மனுஷங்க பேராசைக்காரங்கன்னு நீ சொன்னது சரி ரோஜா. அந்தப் பேராசை தானே அத்தனை முன்னேற்றத்துக்குமான மூல காரணமா இருந்திருக்கு. பேராசை இல்லாம இருக்கறதுக்கு மனுஷங்க என்ன மிருகங்களா..? எந்த மிருகமும் தன்னோட இனத்துல

# தெருவெங்கும் தமிழ் முழக்கம்

மூத்த மொழியாய் திகழ்ந்திடினும்
இளமையின் வனப்பில் சிறப்பவளே!
மூவேந்தர் சங்கம் கூட்டி வளர்த்த
முத்தமிழே! தேனே! பாகே!
செங்கரும்பே!
கல் தோன்றி மண் தோன்றா
காலத்தே முன் தோன்றிய
மூத்த மொழியே! செம்மொழியே!
உன் குழலோசை
உலகெங்கும் பரவ
உள்ளமெல்லாம் பொங்கி
வழியிது இன்பத் தேனின் இனிமை
தேமதுரத் தமிழோசை
உலகமெல்லாம் பரவும்
வகை செய்ய வேண்டும் ...
கம்பனும் வள்ளுவனும்
இளங்கோவும் பாரதியும்
இன்னும் பல கவிஞர்கள்
புலவர்கள் கண்ட
தமிழ் மண்ணில்
ஊமையராய், செவிடராய், குருடராய்
வாழவும் வேண்டுமோ?
மகிழ்வு வந்து
மாமனிதராய் மாறிட வேண்டுமெனில்..

**கவிமணி இரஜகை நிலவன்**



இருக்கற இன்னொரு சக மிருகத்தைப் பத்தி தாழ்வா நினைச்சதில்லை..? ஆனா மனுஷன் தான் பணம் இருக்கறவனை உயர்வாகவும், இல்லாதவனை தாழ்வாகவும் நினைக்கிறான். அதனால் பணம் சம்பாதிக்கணும்னு ஆசைப்படறது தப்பா..?" என்றான்.

"நேர்மையான முறையில் நிறைவேத்தப் படற எந்த ஆசையும் தப்பில்ல சார்.." என்றவாறே நடந்த ரோஜா சட்டென்று நின்றாள். தன் குரலைத் தாழ்த்தி,"சார்.. இங்க நம்ம ரெண்டு பேரைத் தவிர வேற யாரோ இருக்காங்க..." என்றாள்.

"எதை வெச்சு சொல்ற ரோஜா..?"

"மனித நடமாட்டத்தை உணர்ந்தா, சில செடிகள் பூமிக்குள்ளேயே தன்னை இழுத்துக்குமாம். அந்தச் செடிய தூரத்திலிருந்து பார்க்கும் போதே அதுங்க தம்மை உள்ள இழுத்துகிட்டதுங்க.. இங்க கண்டிப்பா மனித நடமாட்டம் இருக்கு சார்." என்று சொல்லி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

திடீரென்று மீண்டும் பறவைகள் சப்தம் எழுப்பியபடி தங்கள் கூட்டை விட்டுப் பறந்து செல்வதையும் கவனித்தாள். அவற்றின் குரலில் பயமும், எச்சரிக்கையும் கலந்திருப்பதை உணர்ந்தாள். சற்று தூரத்தில் காலடி ஓசையும் கேட்டது.

"சார்..! கண்டிப்பா யாரோ இருக்காங்க.. நான் இந்த பக்கம் போய் பார்க்கறேன். நீங்க அந்தப் பக்கம் போய் பாருங்க..." என்று அவசரமாகச் சொல்லி அவன் பதிலுக்குக் காத்திராமல் வேகமாகச் சென்றாள்.

... ... ...

சற்று நேரத்தில் திரும்பி வந்தவள்,"யாரும் அங்கு இல்லை சார். அங்க குரங்குகள் தான் ஒன்னோட ஒன்னு விளையாடிட்டு இருக்கு.

நீங்க யாரை யாவது பாத்தீங்களா சார்?"

"நான் எதுவும் பார்க்கல ரோஜா. ஆனாலும் என் பிரண்டுக்கு போன் பண்ணி சொல்லி இருக்கேன். இங்க பக்கத்துலதான் இருக்கான்; இப்ப வந்துடுவான். வந்த உடனே நாம காட்டுல இன்னும் கொஞ்சம் உள்ள போய் யாராவது இருக்காங்களான்னு பார்க்கலாம்.... நீ பயப்படாதே." என்றான்.

ரோஜா தலையசைத்து, ஒரு கல்லின் மீது உட்கார்ந்தாள். பார்வையை எந்த இலக்குமில்லாமல் வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். பின்னர் கண்களை மூடி மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து நிதானமாக வெளியேற்றினாள். மீண்டும் கண்களைத் திறந்து முகத்தை அழுத்தித் தேய்த்தாள். இப்போது டென்ஷன் குறைந்து முகம் பிரகாசமாக இருந்தது.

எழுந்து நின்றாள். மீண்டும் பழைய சந்தோஷம் அவளுடைய உடல் மொழி யிலும், பேசும் குரலிலும் தெரிந்தது.

"அடடா..! சார்..! அங்க பாருங்களேன்.. இயற்கையின் அற்புதமான படைப்பு. அந்தப் பூ எவ்வளவு அழகா இருக்குன்னு பாருங்க..! ப்ளீஸ்..! எனக்கு அந்தப் பூவை பறிச்சுத் தரீங்களா சார்..?" என்றாள் கெஞ்சலாக.

ரோஜா சொன்னது உண்மைதான். குட்டி குட்டியாக மல்லிகையின் மொக்குகளைக் குடை போல் கவிழ்த்து வைத்தாற் போல் இருந்தது அந்தப் பூ. அதைத் தாங்கியிருந்த தண்டு, அடர் பச்சை நிறத்தில் பார்க்கவே மனதுக்கு இதமாக இருந்தது.

அதற்குள் இருசக்கர வாகனம் ஒன்று வர, அதிலிருந்து இரண்டு பேர் இறங்கி னார்கள்.

"டேய்... மச்சான்! என்னடா ஆச்சு..? எதுக்காக அவசரமா வரச்சொன்ன..? எதற்கும் கூட இருக்கட்டுமேன்னு துணைக்கு இவனையும் அழைச்சிகிட்டு வந்தேன்" என்றான் வந்தவர்களில் ஒருவன்.

சஞ்சய் அவனைத் தட்டிக் கொடுத்தான்."மச்சி! நீ இப்ப வந்தது மனதுக்கு எவ்வளவு இதமா இருக்கு தெரியுமாடா.. முழு விவரமும் அப்புறமா சொல்றேன்...! முதல்ல அதை விட முக்கியமான ஒரு வேலை இருக்கு..! வா..! அந்தப் பூவை பறிச்சிகிட்டு வரலாம்.." என்றான்.

வந்தவன், இருவரையும் மாறிமாறிப் பார்த்தான். கேலியாக, புரிஞ்சிருச்சி மச்சான்.... மச்சம்டா உனக்கு.." கிசுகிசுத்தான்.

அந்தச் செடிக்கு அருகில் போக சரியான வழியில்லாமல் கரடு முரடாக இருந்தது. மேடு பள்ளங்கள் நிறைந்திருந்தது.

சஞ்சய் தன் நண்பனிடம் 'ப்ளீஸ்' என்று கெஞ்ச..... நண்பன் துரிதமாக அந்த இடத்தை நோக்கிச் சென்றான். பள்ளத்தில் இறங்கி சில நொடிகள் காணாமல் போய் மீண்டும் மேட்டில் ஏறி இவர்களைப் பார்த்து கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். தூரத்திலிருந்து பார்த்ததை விட அருகிலிருந்து பார்ப்பதற்கு இன்னும் அழகாகத் தெரிந்தது அந்தப் பூ. ஆனால் உயரத்தில் இருந்தது. லேசாக ஆட்டிப் பார்த்தான். ஏறினாலும் தண்டு தாங்காது என்று தெரிந்தது.

"யாராவது ஒருத்தன் வாடா.." என்று கத்தினான் நண்பன். அவன் வந்த பிறகு,"உன் தோள் மீது ஏறித்தாண்டா பூவை பறிக்கணும். கவனமா இருக்கணும்.." என்றபடி அவன் தோளில் உட்கார்ந்தான். தோள் கொடுத்தவன் எழுந்து நின்றாலும் உயரம் போதவில்லை. இருவரும் ஒரே

சமயத்தில் எம்ப, காலுக்கடியில் ஏதோ நழுவ, சற்றே நிலை தடுமாறி கீழே விழ•••. அந்தச் செடியும் அவர்களின் மீதே விழுந்தது!

"ஐயோ••• என்னடா ஆச்சு" என்று அலறியபடி சஞ்சய் ஓட••• ரோஜாவும் கூடவே ஓடி வந்தாள். சஞ்சய் முதலில் செடியை அப்புறப்படுத்த முயற்சித்தான். கைகளில் பசை போல் ஏதோ ஒட்டியது. பலம் கொண்ட மட்டும் செடியை இழுத்து தூர வீசி எறிந்தான். அவனுடைய நண்பர்கள் இருவரும் பேசக்கூட முடியாமல் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார்கள்.

"டேய்..! என்னடா ஆச்சு..! எழுந்திருடா.." என்று இருவரையும் தட்டி எழுப்ப முயன்றான் சஞ்சய். முடியவில்லை.

சஞ்சய் பயத்தில் அலறினான்."ரோஜா..! என்ன ஆச்சு..! என் நண்பனுக்கு என்ன ஆச்சு.. ஒண்ணுமே புரியலயே.." என்று தலையிலடித்துக் கொண்டு அழுதான்.

ரோஜா மௌனமாக நின்றாள்.

சஞ்சய் நடுங்கினான். "இங்க வேற ஏதோ இருக்குது ரோஜா..!"

ரோஜா இரு கைகளையும் கட்டிக் கொண்டு கம்பீரமாக நின்றாள்."இங்க வேற எதுவுமே இல்ல சஞ்சய்.."

ரோஜாவின் பேச்சில், திடீரென்று 'சார்', 'சஞ்சய் ' என்று ஆன மாற்றத்தைக் கவனித்தான் சஞ்சய்.

ரோஜா தொடர்ந்தாள்.."நீ இப்ப தூக்கிப் போட்டாயே.. அந்தக் செடிக்கு"ஜெயன்ட் ஹாக்வீக்' என்று பெயர். காட்டில் வளரும் விஷச் செடிகளில் ஒன்று••• அதைத் தொட்டா.. இப்படித்தான் ஆகும்" நிதானமாக அவள் பேசிய விதம் சஞ்சய்க்கு ஏதோ விபரீதத்தை உணர்த்தியது.

"ஏய்..! விவரமாச் சொல்லுடி.." கடுமையானான். ரோஜா சிரித்தாள்.!

"டேய் முட்டாள்•••! என்னை காத்' செடி பக்கம் போக விடாமத் தடுத்து,, உன் ஆளுங்களுக்கு சைகை செஞ்சதை நான் கவனிச்சேன். என்னைப் பயமுறுத்த அவங்க போட்ட சத்தத்தைக் கேட்டு ஓடின நான் நிதானித்தேன். நான் திரும்பி வந்தப்போ உன்னுடன் ஒருவன் பேசிகிட்டிருந்ததை தூரத்திலிருந்தபோதே பார்த்துட்டேன். என்னை தீர்த்துக் கட்டச் சொல்லி நீ செஞ்ச சைகைகளின் மூலம் புரிஞ்சிகிட்டேன்! இந்தச் செடிகளை வெச்சவன் நீதான்னும் தெரிஞ்சிகிட்டேன்."

சஞ்சய் ஆத்திரத்துடன்,"அடிப்பாவி..! எல்லாமே தெரிஞ்சுகிட்டுதான் என்னை பூவை எடுக்கச் சொன்னாயா..? உன்னை•••" ஆத்திரத்துடன் கை ஓங்கினான்.

கிளையிலிருந்து கோபமாய்த் தாவியது 'ரிஸ்கி'.

"நீ..! நீ••••" சஞ்சய்க்கு வார்த்தைகள் குழறின.

அருகிலிருந்த கல்லின் மேல் வாகாக சாய்ந்தவாறு தொடர்ந்தாள் ரோஜா.

சஞ்சய்க்கு மூச்சுத்திணற ஆரம்பித்தது. ரோஜா தொடர்ந்தாள்.

"அப்புறம்... டெலிபோன் சிக்னலுக்கான டவர் இங்க கிடைக்காதுன்னு எனக்கு நல்லாத் தெரியும். சிக்னலே கிடைக்காத

டெலிபோன்ல பேசி... சாரி... சாரி... அவன் காதுக்கு நேரடியாகவே கேட்கற மாதிரி கத்தி சொன்னப்ப புரிஞ்சிகிட்டேன்...." ரோஜா சொல்லிக் கொண்டே போக.... சஞ்சய் ஆத்திரத்துடன் எழுந்து நிற்க முயன்று அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் தடுமாறிக் கீழே விழுந்தான். வாய் துடித்துத் திறக்க.. முதல் நுரை எட்டிப் பார்த்தது.

ரோஜா எழுந்தாள். வந்த வழியே நடக்க ஆரம்பித்தவள் நின்று, திரும்பி சஞ்சயிடம் சொன்னாள்.

"அறிவு கெட்ட முண்டம்டா நீ. நீயும், இதோ செத்துக் கிடக்கிற உன் கூட்டாளிகளும் சேர்ந்துதான் 'காத்' செடியை இங்கே வளர்க்க ஆரம்பிச்சீங்கன்னு எனக்குத் தெரிஞ்சுட்டா, பின்னாடி பிரச்சினை வந்துடும்னு நினைச்சு, என் உயிரையே எடுக்கப் பார்த்தீங்க. ஒண்ணு புரிஞ்சிக்க... தன்னை அழிக்கிற எவனையும் இயற்கை பழிவாங்கும். தன்னை நேசிக்கிற எவனை யும் அது காத்து நிற்கும்..!"

சஞ்சய் மெதுவாகக் கீழே சாய்ந்தான்.

ரோஜா புன்னகையுடன்,"இப்பவும் பார்த்தியா..?? உன் பேராசை உன்னை காப்பாத்தலை. என் இயற்கை என்னை காப்பாத்திருச்சு..." என்றாள்.

ஆனால் அதைக் கேட்கும் நிலையில் சஞ்சய் இல்லை.

அவள் பள்ளத்திலிருந்து மேலே ஏறி வர, எங்கிருந்தோ பறந்து வந்த கிளி ஒன்று ரோஜாவின் கன்னத்தோடு உரசி, கீச்... கீச்... என்றது. ரிஸ்கி உற்சாகமாய்க் குட்டிக்கரணம் அடிக்க....

'காடு பேசியது!' ■

# காதலடி நீ எனக்கு

**கார்மேகக் கூந்தலழகி
காந்தமாய் ஈர்த்தாயே
விண்மீனின் ஒளியாகி
வியந்திடச் செய்தாயே**

**நிலவின் குளிரில்
நித்தமும் நனைகிறேனே
ஆரணங்கின் எழிலில்
ஆனந்தம் அடைகிறேனே**

**பூவையின் இதழ்களில்
பூரிப்பும் மலர்கிறதே
என்னுள்ளே நுழைந்து
எண்ணமதில் நிறைந்தாயே**

**அழகோவியமே உனது
அங்கங்களால் வசியமாக்கினாயே
எழிலான தேகமதில்
எண்ணங்கள் சிதறுகிறதே**


**இளந்தென்றலாய் இதயமதை
இதமாய் வருடுகிறாயே
நளினமானப் பார்வையால்
நர்த்தனமாடும் நங்கையே**

**பல்லிடுக்கில் சிக்கிய
உணவுத்துகள்களாய் உன்னினைவுகளே
மந்திரத்தால் வசமாக்கி
மயக்கினாய் என்னையே**

**மீண்டிட வழியின்றி
மீன்விழியாளிடம் சரணடைந்தேனே
மானாட்டம் துள்ளலில்
மனதும் குதூகலமானதே**

**உயிரானவளே காதலடி
நீயெனக்கு அன்பே
உறவாடிக் களிப்புற்று
உணர்வுகளோடு கலந்திருப்போமே**

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
**விருதுநகர்**



# ஆன்றோர்கள் தேசம்


## மைதிலி சம்பத்,

செகந்திராபாத்




மஹாகவி, வரகவி, யுகக் கவிஞன், தேசிய கவி என்று பலவாறாகப் போற்றப்படும் பாரதியின் தேச பக்திக்கு ஈடு இணையே கிடையாது. அவன் ஒவ்வொருவருக்காகவும் பாடி யிருக்கிறான். தேச பக்திப்பாடல்கள், பெண்கள் விடுதலைப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள் என்றெல்லாம் பலப்பல பாடினாலும், பாப்பா பாட்டு என்று ஒன்று பாடியிருக்கிறானே அதில் உள்ளபடி நம்நாட்டுக் குழந்தைகள் வாழத் தொடங்கினால் அவர்கள் மகோன்னதமான மனிதர்களாகத் திகழ்வார்கள் என்பதில் ஐயமுண்டோ? அந்தப் பாடலில்தான்"ஆன்றோர்கள் தேசமடி பாப்பா" என்ற வரி வருகிறது. பின்னாட்களில் பாரதியாரின் மகள் சொல்லியிருக்கிறார்"அப்பா நாங்கள் எப்படி வாழவேண்டும் என்று ஆசைப் பட்டாரோ, அதை அந்தப் பாடலில் வரையறுத்துக் கொடுத்து விட்டார்' என்று."

குழந்தைகள் தமக்குள் சண்டையிடக் கூடாது. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உணவில்லாத காக்கையைப் போல் ஏமாற்றித் திருடித் தின்பவர் மீதும் இரக்கம் கொள்ளவேண்டும். 'பசு, குதிரை, நாய் என்று எல்லாப்பிராணிகள் மீதும் அன்பு வை' என்று சொல்லும் அவர், குழந்தைகளுக்கு நாளுக்கு ஒரு அட்டவணையே போட்டுக் கொடுத் திருக்கிறார். காலையில் படிப்பு, பாட்டு. மாலையில் விளையாட்டு என்று நற்குணங்களை, அதாவது பொய் சொல் லுதல், புறஞ் சொல்லல் ஆகாது என்று கூறும் அதே நேரத்தில் தெய்வம் நம்மைக் காக்கும் என்றும் குழந்தைகள் மனதில் பதிய வைக்கிறார்

பயமிருக்ககூடாது. தாயையும், தாய்த் திரு நாட்டையும், நம் தேசமாகிய ஆன்றோர்கள் தேசத்தையும் கும்பிட வேண்டும் என்கிறார். வேதமுடைய திருநாடு எனப் பெருமிதமாய் சொல் கிறார். சாதி வேறுபாடும் கிடையாது என்றே பாப்பாவிடம் வலியுறுத்துகிறார்

இவை பாப்பாவுக்கு மட்டுமா? மக்கள் அனைவருக்கும் பொருந்தும் அல்லவா !

சகோதரி நிவேதிதையும், அபேதா னந்தரும் அவரால் மிகவும் பாராட்டப் பட்டிருக்கிறார்கள்..

அவருடைய பார்வையில் ஆன்றோர்கள் என்பவர்கள் நம் நாட்டில் எல்லா இடங்களிலும் உள்ள எத்தனையோ பேர்.

சுதந்திரப்போராட்டத் தலைவர்கள் மஹாத்மா காந்தி, லோகமான்ய பால கங்காதரத் திலகர், பஞ்சாப் சிங்கம் லாலா லஜ்பத் ராய், கப்பலோட்டிய தமிழர் வ. வு. சிதம்பரனார் என்று எல்லோரையும் பாடியிருக்கிறார்

பாரதிக்கு தனது தேசம் எனும் பாரதத்தைப் பற்றி பெருமிதம் அதிகம். பாருக்குள்ளே நல்ல நாடு என்ற பாடலில் அவனுடைய தேசபக்தி பொங்கி பிரவாகிக்கிறது. ஞானத்தில், மானத்தில்,

அன்ன தானத்தில், கானத்தில், கவிதையில் யாகத்தில் யோகத்திலே என்று இன்னும் பலவும் கூறி அனைத்திலும் சிறந்த நாடு என்று பெருமிதம் கொள்கிறார். இவை அனைத்தையும் கூறுகிறார் என்றால், இவற்றில் சிறந்த சான்றோர்களைச் சொல்கிறார் என்றுதானே பொருள்?

மன்னும் இமயமலை எனும் பாடலில் எங்கள் நாட்டின் இமயமலை, கங்கை நதி என்று துவங்கி, உபநிடத நூல்கள் போன்றவற்றையும் சொல்கிறார்

செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்ற பாடலில் கம்பன், வள்ளுவன், சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோ, யாவரையும் போற்றுகிறார். ஔவையை ‘சாதி இரண்டொழிய வேறில்லை’ எனச் சொல்லிய தமிழ் மகள் என்று போற்றுகிறார். இதில் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ் நாடு. புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு என்றெல்லாம் தமிழ் நாட்டைப் போற்றும் இவர் நாடு வேறாகவும் அதில் பிறந்த ஆன்றோர்களை வேறாகவும் பார்க்கவேயில்லை.

மகாமகோபாத்தியாய என்ற கவிதையை எடுத்துக்கொண்டால் அவருடைய கவிதையில் ‘அன்னியர்கள் தமிழ்ச் செவ்வியறியாதாய் இன்றெம்மை ஆள்வாரேனும், பன்னியர் சீர் மகா மகோபாத்தியாயப் பதவி பரிவின் ஈந்து, பொன்னிலவு குடந்தை நகர் சாமிநாதன் தனக்குப் புகழ் செய்வாரேல், முன்னிவனப் பாண்டியர் நாள் இருந்திருப்பின் இவன் பெருமை மொழியலாமோ?" என்று கூறுகிறார்

உ.வே.சாமிநாதய்யர் இல்லாவிடில் இன்று நமக்கு இத்துணை பழந்தமிழ் இலக்கியங்கள் கிடைத்திட வாய்ப்புண்டோ?

சகோதரி நிவேதிதையைப் பற்றி பாரதியார் எழுதியுள்ளது இதுதான்

"அருளுக்கு நிவேதனமாய், அன்பிற் கோர் கோயிலாய் அடியேன் நெஞ்சில்

இருளுக்கு ஞாயிறாய் எமது யர்நாடாம்பயிருக்கு மழையாய் இங்கு

பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப் பெரும் பொருளாய் புன்மைதாதச் சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய் நிவேதிதையைத் தொழுது நிற்பேன்"

ஆன்றோர்கள் தேசம் என்று பாரதி பாடியது முக்காலும் சத்தியம். பாரதம் முழுவதும் கணக்கற்ற ஆன்றோர்கள் இருந்து தங்கள் முத்திரையை பதித்திருக்கிறார்கள். இன்றும் வாழ்ந்து தங்கள் அறிவுரைகளாலும், வாழும் முறைகளாலும் மக்களை நல் வழிப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்..

இவர்கள் அறநெறியின் சான்றோர்கள், ஞாநிகள், மகான்கள், தத்துவ இயலாளர்கள்., முனிவர்கள் ஆகிய அனைவரும் அடங்குவர். இவர்களில் வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து தமிழ் மொழிமீது கொண்ட பற்றால் நிலை கொண்டவர்களும் நிறைய பேர் உண்டு, வீரமாமுனிவர் போல்

**ஆதி சங்கரர், இராமானுஜர், மத்வர்,** இவர்கள் மூவருமே இந்து மதத்தின் மிக மிக உன்னத நிலையை மக்களுக்கு எடுத்துரைத்தவர்கள். இவர்கள் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், ஆகிய தத்துவங்களை மக்களுக்குப் போதித்தவர்கள். இன்றும் அவர்களுடைய கோட்பாடுகள் மக்க ளால் பக்தியுடனேயே பின்பற்றப் படுகின்றன.

**பன்னிரு ஆழ்வார்கள்.** திருமாலை அன்றி வேறு எதுவுமே அறியாத இவர்கள் தெள்ளுத்தமிழில் தேன் சொட்டப் பாடிய நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் திராவிட வேதம் என்று போற்றப்பட்டு,

அந்த மஹாவிஷ்ணுவிற்கே இவர்கள் பாடலால் ஏற்றம் என்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் சந்த அழகும், பொருள் அழகும் நெஞ்சை உருக வைக்கும் தன்மையும் இன்றும் அவற்றை மகோன்னத நிலையில் வைத்திருக்கின்றன.

**நாயன்மார்.** இவர்கள் அறுபத்து மூன்று சிவனடியார்கள் ஆவர். இவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் சிவ பெருமான் நடத்தியிருக்கும் அற்புதங்கள் எத்தனையோ. இந்த அறுபத்தி மூவரின் விக்ரகங்கள் ஒவ்வொரு சிவன் கோவிலிலும் உட்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருக்கும். இவர்களில் ஒவ்வொருவருடைய வரலாற்றையும் தொடுத்து பெரிய புராணம் என்ற பெயரில் சேக்கிழார் எழுதியிருக்கிறார் அற்புதமான நூல்.

**சீரடி சாய்பாபா:** இவர் மஹாராஷ்டிரத்தில் வசித்திருந்த ஒரு யோகி, குரு மற்றும் சூஃபி துறவி. இந்துக்களும், இஸ்லாமியர்களும் ஒருங்கே வணங்கும் இவரை கடவுள் தத்தாத்ரேயர் அவதார மாகவே யாவரும் கருதுகின்றனர். இவர் வாழ்வில் பக்தர்களுக்காக நடத்திய அற்புதங்கள் எத்தனையெத்தனையோ.

**ஸ்ரீ சத்ய சாய்பாபா:** இவர் தென் இந்தியாவின் மிகப்பெரிய ஆன்மிகக் குரு. இவர் இறை அவதாரமாகவே போற்றப்படுகிறார். தனது ஆன்மிகச் சேவைகளை சமய சார்பற்ற முறையில் செயலாற்றிவந்தவர். சத்யசாய்பாபா நிறுவனம் தனது சாய் அமைப்புகள் மூலம் இலவச மருத்துவ நிலையங்கள், பாட சாலைகள், உயர் கல்வி நிலை யங்கள், அனைத்திடங்களிலும் குடி நீர்த் திட்டங்கள் ஆகியவற்றை மிகத் திறமையுடன் நிர்வகித்து வருகின்றனர்.

**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி:** சமீப காலம் வரை நம்மிடையே வாழ்ந்திருந்த இவர் நடமாடும் தெய்வம் என்றே போற்றப்படுகிறார். இவர் பக்தர் களுக்கு அருள்புரிவதற்காக நடத்திய அதிசயங்கள் ஏராளம். இவரின் பெயரைச் சொல்லும்போதே கண்களில் நீர் வரச்செய்யும் கருணாமூர்த்தி. பாரதத்தின் பல்வேறுபகுதிகளிலும் இவருடைய காஞ்சி மடம் நிர்வகித்துள்ள சேவைகள் கணக்கில் அடங்காதவை.

**ஸ்ரீ ரமண முனிவர்:** இவருடைய பக்தர்கள் இவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். இவர் அத்வைத வேதாந்த நெறியை போதித்தவர். திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். அங்கு இவர் நிறுவிய ஆசிரமம் உள்ளது, நான் யார் என்ற ஆன்ம விசாரமே இவருடைய முக்கியமான உபதேசம். உபநிடதங்கள், அத்வைத வேதாந்த நெறிகள் முதலியவற்றை இவரது உபதேசங்களில் காணலாம்.

**காரைக்கால் அம்மையார்:** சிவ பெருமானால் 'அம்மையே' அன்று அழைக்கப்பட்ட பெருமையுடையவர். இசைத்தமிழால் இறைவனை முதன் முதலில் பாடியவராகவும், அந்தாதி எனும் இலக்கண முறையை தமிழுக்கு அறிமுகம் செய்தவராகவும் விளங்கினார். அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை போன்ற நூல்களைத் தந்து தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியிருக்கிறார். இவருக்கென காரைக்கால் சிவன் கோவிலில் தனி சந்நிதியே அமைக்கப்பட்டுள்ளது

இங்கு கூறப்பட்டவர்கள் சிலர் தானே ஒழிய, உண்மையில் இன்னும் எத்தனையோ ஆயிரம் பேரைக் கூறலாம். இவ்வாறு பாரதம் முழுவதிலும் ஆன்றோர் அருள் புரிந்திருக்கையில் ஆன்றோர்கள் தேசமடி என்று பாரதி சொன்னதில் வியப்பென்ன?



# காதல்...

மதியம் லஞ்ச் பிரேக் விட்டிருந்தது.

கல்லூரி கேண்டினில் சாப்பிட்டு விட்டு வகுப்புக்கு திரும்பிய சந்துரு ..

அமைதியாய் கவனித்துக் கொண்டிருந்தான்.

அப்போது தான் லாவண்யா தன் தோழிகளுடன் வழக்கம் போல் வகுப்பறைக்கு திரும்பினாள்.

இந்தா... உன்னோட ப்ராஜெக்ட் ரிப்போர்ட் நோட்...

நான் ரிவைஸ் பார்த்துட்டேன்.னு நீட்டினாள்.

வாங்கிக்கொண்டான். சந்துரு.

மாலைநேரம் வகுப்பு முடிந்து வீடு திரும்பும் வேளை..

பலமுறை மறைமுகமாக காதலை சொல்லியும் எந்த பதிலும் சொல்லாத லாவண்யா கடந்து போவது ஒரு புள்ளியாய் மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்தான்.

ஏதோ சிந்தனையில் மூழ்கி தனியாளாய் வகுப்பில் அமர்ந்திருந்த சந்துரு

ஒருவித வெறுமையில் ப்ராஜெக்ட் நோட்டை தூக்கியெறிந்தான்.

அது காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

தலைகுனிந்து அமர்ந்திருந்த சந்துருவை தட்டி எழுப்பியதாக இருந்தது.

செய்வதறியாது நின்றான்.

லாவண்யா வட்டமிட்டிருந்தாள் பக்கம் எண் 143 .

**- சாயிராம்.**



# கற்பகத்தின் கல்யாணம்



**அன்புச்செல்வி சுப்புராஜூ**
பட்டாபிராம், சென்னை

8

தாத்தாவைப் பின்தொடர்ந்து சென்ற அனைவரும் இராமேஸ்வரம் கோவிலின் மூன்றாம் பிரகாரத்தினுள் நுழைந்ததுமே 'ஆகா... ஆகா... எவ்வளவு அழகு' என்று வியப்பாக குரல் எழுப்பினார்கள்.

'ஆத்தி எம்புட்டு நீள அகலமா, அழகா இருக்கு... நம்ம சக்கம்பட்டியவே உள்ள அடக்கிடலாம் போல... ' ஆச்சரியமாக தங்கச்சி கேட்க' எதை வேணும்னாலும் அடக்கலாம், உன் வாயை அடக்க முடியாது' பாட்டி சொல்லவும் எல்லோரும் சிரித்தார்கள்.

'இந்தக் கோவிலோட அடையாளமே 690 அடி நீளம், 435 அடி அகலத்துல 1212 தூண்களாலோட கட்டப்பட்ட இந்த மூன்றாம் பிரகாரம்தான். பார்க்கவே பிரம்மாண்டபமா இருக்கிற உலகப் பிரசித்தி பெற்ற இந்தப் பிரகாரம் எப்போதும் திறந்தே இருக்கும். இந்தியாவிலேயே திருச்சுற்று அமைப்புக்குப் பெயர் பெற்றது. இதோ இங்கே பாருங்க... மணலில் சீதை லிங்கம் பிடிக்க இராமர் பூஜை செய்யும் சிலையை... பக்கத்தில் நிற்பவர்கள் ஆஞ்சநேயர், சுக்ரீவர் உள்ளிட்ட வானரப் படைகள்' தாத்தா சொல்லவும் அனைவரும் வணங்கினார்கள். அடுத்ததா நளன், நீலன், கவனால் பூஜிக்கப்பட்ட சிவன் சன்னதிகளை வணங்கி , காலில் சங்கிலியுடன் கூடிய பெருமாள் - சேதுமாதவர், பாதாள பைரவர், காவியுடை இரட்டை விநாயகர், விபீஷணன் வணங்கிய ரங்கநாதர் என அனைத்துத் தெய்வங்களையும் வணங்கிய பிறகு மனம் முழுக்க நிம்மதியும், மகிழ்ச்சியுமாய் மதிய உணவு சாப்பிட்டனர்.

'என்னா கற்பகம் சாப்பிடாம யோசிச்சுக் கிட்டு இருக்க... இந்தா இருக்க சாமி நம்மளை கைவிட்டுருமா என்ன? உங்களுக்கு ஒரு கொறையும் வராது. கலங்காத சாப்பிடு...' பாட்டியின் ஆறுதல் பேச்சு சிறிது தைரியத்தைத் தந்தது.

அடுத்ததாக கடைவீதியில் சங்கால் செய்யப்பட்ட தோரணங்கள், வளையல்கள், பாசிமாலைகள், சோழிகள் என நிறைந்து கிடந்தன. அவர்களுக்கு தேவைப்பட்டதை வாங்கிக் கொண்டார்கள். கற்பகமும் அவளின் தங்கையும் ஆளுக்கொரு பாசிமணி வாங்கிக் கொண்டார்கள்.

'அத்தை... ரொம்ப நேரமாகிடுச்சு, எப்ப கௌம்புவோம்' கற்பகம் கேட்டதும் 'இந்தா செத்த நேரத்துல எல்லாரும் வந்துடுவாக.. வந்ததும் போகலாம்' சொல்லியபடியே வளையல் கடைக்குள் நுழைந்தார்.

'எனக்குப் பயமாயிருக்கு தங்கச்சி...' கற்பகத்தின் கண்கள் கலங்க 'அதெல்லாம் அப்பா நல்லாயிருப்பாருக்கா... நீ ஓயாம கேட்காத... கண்ணு கலங்காத... பொறவு நம்ம கூட வந்தவுகளுக்கு மனசு தாங்காதுல... நம்ம கஷ்டம் நம்மளோட.... அமைதியா வா... நீதா எங்களுக்கு தைரியம் சொல்லணும், ஆனா சமயங்கள்ல நா அக்காவா மாற வேண்டியதிருக்கு... க்க்கும்' தங்கச்சி பேசிக்கொண்டு இருக்கும் பொழுதே அனைவரும் வந்துவிட, மடத்திலுள்ள பைகளை எடுத்துக் கொண்டு முதல் ஆளாக பஸ்ஸுக்குள் ஏறினாள் கற்பகம்.

'தாயி... செத்த பொறு, இந்தா இருக்கிற காப்பிக் கடைல ரெண்டு வடை வாங்கிட்டு, ஒரு வாய் காப்பி குடிச்சிட்டு வந்துடுறோம்' தாத்தா சொல்லவும்... ஒரு சிலரைத் தவிர அனைவரும் காப்பி குடித்தனர்.

'சரிசரி....எல்லோரும் வேகமா ஏறுங்க... ஆறு மணிக்கெல்லாம் பாம்பன் பாலம் போகணும்... 'மாமா சொல்லவும் ' அங்கே

என்னத்தைப் பார்ப்பாங்களோ... எம்புட்டு நேரம் கடத்துவாங்களோ... தெரியலையே?' வாய்க்குள் முணங்கினாள் கற்பகம்.

'வாயை மூடிட்டு உட்காருக்கா, ஆக்கப் பொறுத்தவ ஆறப் பொறுக்கணும். சும்மா ஊருக்குப் போகணும், போகணும்னு சொல்லிட்டே இருந்தா மத்தவங்களுக்கு ஒரு மாதிரியா இருக்காதா... ஆனது ஆச்சு, இம்புட்டு நேரமாச்சு... இன்னுங் கொஞ்ச நேரம்... எப்படியும் காலைல ஊருக்குப் போய்டுவோம்' தங்கச்சி சொல்லவும், உண்மை புரிய அமைதியானாள் கற்பகம்.


இவர்களின் பேருந்து பாம்பன் பாலத்தின் கிட்டே வரவும் 'டிரைவர் பஸ்ஸை நிறுத்துங்க... நாங்க பாலத்து மேலேயே கொஞ்ச தூரம் நடக்குறோம். ஒரு அரைமணி நேரத்துல நீங்க வாங்க. ஏறிக்கிறோம்' மாமா சொல்லவும் பேருந்து ஓரங்கட்டப் பட்டது.

சுருங்கிய முகமுடன் இறங்கி, பாலத்தின் மேல் நடக்க ஆரம்பித்த கற்பகத்தின் கண்கள் வியப்பில் விரிந்தன. மேற்கு திசையில் செஞ்சிவப்பு வண்ணப் பெரிய கோளமொன்று வானத்திலிருந்து சர சரவென்று இறங்கி, இமைக்கும் நேரத்தில் மறைந்து விட்டது.

'சூரிய அஸ்தமனம் பார்க்கத்தே இம்புட்டும் செஞ்சியாக்கும். முன்னமே சொல்லியிருந்தா இன்னுங் கொஞ்சம் வேகமா வந்து, நல்லா பார்த்திருப்போம்ல... ' பாட்டி அங்கலாய்க்க'ஏம் பாட்டி, தாத்தா உன்னையவே சுத்திவர மாதிரி, சூரியனும் பொண்டாட்டியத் தேடி ஓடுதோ... இவ்வளவு அவசரமா ஓடுது' இளவட்டங்கள் கிண்டலடிக்க... அங்கே சிரிப்பலை எழுந்தது.

கடலில் மிதந்து கொண்டிருந்த படகுகளைப் பார்த்தபடியே நடந்து வரும் பொழுதே பாலத்தின் முக்கிய சிறப்பு வாய்ந்த கப்பல் கடக்கும் பொழுது, கப்பல்கள் செல்வதற்கு வசதியாக நடுவில் அமைக்கப்பட்டிருக்கும் தூக்கு பாலம் குறித்தும். இரண்டு பிரிவாக தூக்கும் இந்த பாலத்தின் ஒவ்வொரு பக்க இரும்பு பாலமும், 100 டன் எடை கொண்டது. இந்த தூக்கு பாலத்தை தூக்கி, இறக்கும் பணிகளுக்கான சிறப்பு பணியாளர்கள் பணிபுரிகின்றனர் என்பதையும், தூக்கு பாலத்தின் தொழில்நுட்பத்தையும் தானறிந்த வகையில் விளக்கிச் சொல்லியபடியே வந்தார் மாமா.

பாலத்தின் மேல் அனைவரும் சேர்ந்து நின்று புகைப்படங்கள் எடுக்கவும், பஸ் வரவும் சரியாக இருந்தது. 'நாளைக்கு கருக்கல்ல ஊருக்குப் போயிடுவோம். திரும்பவும் தறி, நூலு, பாவுன்னு பொழப்பு ஓடப்போகுது. வாங்கத்தா கௌம்பலாம் ' தாத்தா சொல்ல பேருந்து கிளம்பியது.



# தமிழ்ச்செம்மலுடன் சில கேள்விகள்

*மரபுக் கவிதைகளில் ஆளுமை பெற்றவர் நீங்கள். புதுக்கவிதை, ஹைக்கூ. கவிதை, தன்முனைக் கவிதை பற்றிய தங்களின் கருத்தினை பகிரலாமா?*

**நாகலட்சுமி ராஜகோபாலன் சென்னை.**



புதுக்கவிதை வரையறைகள் இல்லாமல் காற்றாற்று வெள்ளமாய் பாய்ந்து வரக்கூடியது என்றாலும் மற்றவர்களுக்குப் புரியாத வண்ணம் எழுதுவதுதான் புதுக்கவிதை என்று இப்போது ஆகிவிட்டது.

ஹைக்கூ என்பது ஜப்பானிய வடிவத்தை தழுவியது என்றாலும் அதுவும் இப்பொழுது வரையறையில் ஏதும் இல்லாமல் வெறும் மூன்று வரி கவிதைகளாகச் சுருங்கி விட்டது

தன்முனைக் கவிதை என்பது தெலுங்கு நானினு வடிவத்தினுடைய தமிழ் வடிவம் என்றாலும் என்னைப் பொறுத்தவரை இவ்வாறெல்லாம் புதுமையாகப் படைக்க வேண்டும் என்பது தேவையில்லாத ஒன்றாகவே கருதுகின்றேன் ஏனெனில் இது போன்ற வடிவங்கள் ஏற்கனவே தமிழில் உண்டு.



*காமத்தால் காதல் பிறந்ததா...,? காதலால் காமம் பிறந்ததா?*

**பழ.மணிகண்டன் - திருவண்ணாமலை**

காமம் காதல் இரண்டும் ஒன்றாகத்தான் சங்க காலம் வரை இருந்தது. தற்போது அது இரண்டும் வெவ்வேறு ஆகிவிட்டது. கட்டுக்கடங்காத காதல் காமமாகவும் கட்டுக்கடங்கிய காமம் காதலாகவும் தற்போது கருதப்படுகிறது.

*பள்ளிக் கல்வி வரைதான் படித்துள்ளேன். மரபு இலக்கணம் சரிவர கற்பிக்க வில்லை. கற்றதும் இல்லை. சிலருக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. இப்போது சில குழுமங்களில் மரபு கற்றுத் தருகிறீர்கள். அடிப்படை இலக்கணம் தெரியாதோர் எவ்வாறு கற்றாலும் மண்டையில் ஏற வில்லை. கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. பள்ளியில் முறையாக கற்றுத்த தந்தால் மட்டுமே சாத்தியமாகுமா அல்லது எப்போது வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாமா??? இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள் ஐயா.*



**ராமர் பாஸ்கரன் மும்பை**

எப்பொழுது வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். வயது ஒரு தடை இல்லை. ஆர்வமும் பயிற்சியும் இருந்தால் போதும். எதுவும் மண்டையில் ஏறும். ஏறாது என்று நினைப்பது நம்முடைய தன்னம்பிக்கை இன்மையே ஆகும். என்னை விட வயதில் மூத்தவர்கள் எல்லாம் தற்பொழுது மரபைக் கற்றுத் தேர்ந்து பாவலர்களாக மாறி உள்ளனர்.

*வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பண்பாட்டை மறந்து வாழ்வது ஏன்?*

**சி. வி. பிள்ளை**



பண்பாட்டை மறந்து வாழ்வது என்பது அவர வருடைய தனிப்பட்ட

வாழ்க்கை முறையை பொறுத்தது. வாழ்வாதாரத்துக்காக ஒரு பணியினை வெளிநாடுகளில் செய்து பொருளீட்டி வாழும் பொழுது அவர்களையும் அறியாமல் அல்லது சில நிர்பந்தங்களுக்கு உட்பட்டு அவர்கள் அந்நியர்களுடைய பண்பாட்டைப் பின்பற்றக் கூடியது கட்டாயமாகிறது. அவர்கள் மீது நாம் தவறு சொல்ல முடியாது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாருடைய வாக்குக்கிணங்க அவர்கள் உலக மாந்தர்களில் ஒருவராக மாறுகின்றனர். அதற்காக தமிழ்ப் பண்பாட்டை மறந்து விட்டார்கள் என்று நாம் கொள்ளலாகாது. தனிப்பட்ட முறையில் அவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். அல்லது தமிழர் பண்பாட்டின் மூலமாக அவர்களுக்கு ஏதும் ஆதாயம் கிட்டாமல் போகலாம் என்றே கருதுகின்றேன்.

*தமிழில் எப்போது பணம் நுழைந்ததோ. அதுபோல் இப்போது சாதி நுழைந்து கொண்டு வருகிறது... விருதும்.... வரவேற்பும்... சாதிக்கா...? தமிழுக்கா... இதனைப் பற்றிய தங்களின் கருத்து...?*



**சிந்தனை பாரதி திருச்சி.**

பணமும் ஜாதியும் இப்போது மட்டுமல்ல எப்போதுமே அதற்கென ஒரு தனி இடத்தை எல்லா இடங்களிலும் பிடித்து வருகிறது என்பது உண்மை தான். எனவேதான் ஒவ்வொரு ஜாதியினரும் அவர்கள் இனத்தைச் சார்ந்தவர்களை அழைத்து முக்கியத்துவம் கொடுத்து விருதுகளை வழங்குவது என்பது பரவலாக காணப்படுகிறது. ஜாதி மற்றும் பணத்தின் அடிப்படையில் செயல்படக்கூடியது தவறுதான் என்றாலும் அவரவர் சமூகத்தைச் சார்ந்தவர்களை அவரவர் அமைப்பின் வழியாக கௌரவப்படுத்துவது என்பதும் தவிர்க்க முடியாததாக மாறிவிடுகிறது.

*தஞ்சைத் தமிழ் மன்றப் கவியரங்கப் போட்டிகளை நிகழ்வன்றே போட்டியினை வைத்து தேர்ந்த முதன்மையாளர்களை அரங்கமேடையில் பாராட்டலாமே அவ்வாறு செய்வதினால் ஏதேனும் நடுவர் மற்றும் தலைமையருக்கு சங்கடங்கள் நிகழுமா...?*



**திவ்யகவிமுரசு முபா**
**திருவண்ணாமலை**

யாதொரு சங்கடமும் நிகழப்போவது கிடையாது தற்போது நாங்கள் நேரடிப் போட்டியினை அரங்கத்திலேயே நடத்தி நடுநிலையாளர்களைக் கொண்டு தெரிவு செய்து அதே அரங்கத்தில் பாராட்டவும் செய்கின்றோம் என்பதை தாங்கள் அறியவில்லையா. இவ்வாண்டு நடைபெற்ற தஞ்சைத்தமிழ் மன்ற ஆண்டு விழாவில் இணைய வழியாக நடத்திய போட்டியிலும் ஆண்டு விழா அன்று நேரடியாக அரங்கத்தில் நடந்த போட்டியிலும் கவிஞர்கள் கலந்து கொண்டு ரூபாய் 18,500 பணப்பரிசாக பெற்றார்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்வது நலம்.

*பாவலர்கள் இடையே மரபில் எழுதும் ஆர்வம் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது? மேலும் ஆர்வத்தைத் தூண்ட என்ன செய்யலாம் என்று ஆலோசனை தெரிவியுங்கள்!.*



**நெடுமுடி வேந்தன்**
**சென்னை**

மரபுக் கவிதை எழுதுவதற்கான ஆர்வம் இப்போது கவிஞர்களிடையே மிகவும் அதிகமாகி இருக்கிறது. தாங்கள் ஒவ்வொருவரும் கவிதையில் சிறந்த வர்களாகவும் கவிஞர்களாகவும் பாவலர்களாகவும் மாற வேண்டும் என்றால் மரபுக் கவிதையினை கற்றுத் தேற வேண்டும் என்ற உணர்வு கவிஞர்களிடையே தற்போது நன்றாக வளர்ந்துள்ளது. பெரும்பாலான கவிஞர்கள் மரபின் பக்கம் வருவதை அனுதினமும்

காண முடிகிறது. இதனை வளர்த்துக் கொள்வதற்கு அவர்கள் தமிழ் நூல்களை, குறிப்பாக,பாரதியார் பாரதிதாசன் கவிதைகள், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற நூல்களைப் படித்து அதன்பிறகு எழுதுவதற்கும் அவர்கள் வரவேண்டும் அவ்வாறு செய்தால் அவருடைய மொழிவளம் அதிகமாகி எழுதுவதற்கு உதவியாக இருக்கும்.

விருதுகள் நம்மைத் தேடி வரவேண்டுமா...? இல்லை விருதுகளைத் தேடி நாம் போக வேண்டுமா...? (விண்ணப்பம் செய்தால்தானே அரசிடம் இருந்து விருது கிடைக்கும் அதனால கேட்டேன்) மரபுக் கவிதை எழுதலன்னா அவர் கவிஞர் ஆக மாட்டாரா...? கடைசி வரை எனக்கு தஞ்சைப் பக்கம் வரும் வாய்ப்பே கிடைக்காதோ...?



**வீரை மைதீன்**
**திருநெல்வேலி**

விருதுகள் நம்மைத் தேடி வருவது தான் சிறப்பு தமிழக அரசினுடைய விருதுகளுக்கு விண்ணப்பம் செய்வதென்பது அரசினுடைய கொள்கை முடிவு அது குறித்து நாம் ஏதும் கருத்து தெரிவிக்கலாகாது. இவ்வாண்டு 45 கவிஞர்களுக்கு கவிச்செம்மல் விருது வழங்கப்பட்டுள்ளது அவர்கள் அனைவரும் மன்றம் நடத்திய கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் தாங்களும் கலந்து கொண்டிருந்தால் உங்களுக்கும் இது கிடைத்திருக்கலாம் ஹைக்கூ தன்முனைக் கவிதை மற்றும் மரபுக்கவிதை மூன்று வடிவங்களிலும் போட்டி நடத்தப்பட்டு அதிலிருந்து 45 கவிஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை தாங்கள் அறியவில்லையா? இணைய வழியாக நடத்திய போட்டியும் ஆண்டு விழா அன்று நடத்திய கவிஞர்களுக்கான நேரடி கவிதைப் போட்டியிலும் மரபு வலியுறுத்தப்படவில்லை எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் கவிதை எழுதலாம் என்றுதான் அறிவிக்கப்பட்டது எனவே புதுக்கவிதை வடிவத்தில் எழுதியவர்களும் அன்று பரிசு பெற்றுள்ளனர்.

சிதம்பரம் கோயிலில் கரையானால் அழிந்தது போக மீதம் கிடைத்தப் பாடல்களே பல ஆயிரம் திருமுறைப் பாடல்கள். இது போல ஆழ்வார்ப் பாசுரங்கள், தமிழ் செறிந்த காப்பியங்கள் இப்படி அனைத்துமே இலக்கண வளம், இலக்கிய வளம், பக்தி அறம் தோய்ந்தவை. உண்மையில் இவைகள்தானே தமிழ் வளர்த்துள்ளன. மாறாக இருபதாம் நூற்றாண்டில் வந்த சில கடவுள் மறுப்பாளர்கள் தமிழ் தமிழ் என்று உரிமை கொண்டாடுவது எப்படி? அவர்களின் தமிழுக்கான பங்களிப்பு அவ்வளவு பெரியதா?



**- பா.சக்திவேல் அம்மாபேட்டை**

தமிழ் தமிழ் என்று உரிமை கொண்டாடுவது அவர்கள் தமிழுக்காற்றிய பங்களிப்பைப் பொறுத்து அல்ல; மொழிப்பற்றின் காரணமாகத்தான்.. கடவுள் மறுப்பு கொள்கையாளர்களுடைய பங்களிப்பு இல்லை என்று நாம் சொல்லிவிட முடியாது. பாரதிதாசன் ஆரம்பத்தில் கடவுள் பற்றிய கவிதைகளை எழுதினாலும் கடவுள் மறுப்பாளர்களுடைய ஆதரவாளராகத்தான் மாறிப்போனார். அவருடைய படைப்புகள் தமிழுக்கு வளம் சேர்க்கவில்லையா? இதைப் போன்று நிறைய கவிஞர்கள் கடவுள் மறுப்பாளர்களாக இருந்து தமிழுக்கு நிறைய இலக்கியங்களை வழங்கி இருக்கிறார்கள். பெரியாருடைய எழுத்துச் சீர்திருத்தம் தமிழுக்கான மிகப்பெரிய கொடை அவருடைய கட்டுரைகள் தமிழுக்கான வளம் சேர்க்கக் கூடிய கட்டுரைகள்தான். அண்ணா கலைஞர் போன்றவர்களும் கூட பெரியாரின் வழி வந்தவர்களளே. அவர்களுடைய படைப்புகளும் தமிழுக்கானது தானே.

தமிழில் இத்தகைய பாண்டித்தியம் பெறக்

காரணமானவர் எவரேனும் உண்டா? அல்லது தன்னெழுச்சியாக தமிழ் மீது தீராக் காதல் வந்ததா?..



**அரிமா சிவ எம்கோ, வாழப்பாடி**

நான் ஏதும் பாண்டித்தியம் பெற்றவன் இல்லை ஏதோ எனக்குத் தெரிந்ததை மற்றவருக்கு சொல்லிக் கொடுக்கின்றேன் நானும் கற்றுக் கொள்கின்றேன். தமிழ் மீது தீராக் காதல் வருவதற்குக் காரணம் சிறு வயது முதலே அதன்மீது பற்று இருந்ததுதான்.

இங்கே நல்ல படைப்பாளிகள் மதிக்கப் படுவதற்கு ஏதேனும் வழியுண்டா ஐயா



**மகரந்தன் மா வசந்தகுமார்**

மதிக்கப்படவில்லை என்று சொல்லிவிட முடியாது ஒரு சில இடங்களில் நல்ல படைப்பாளிகள் மதிக்கப் படுவது உண்டு எனினும் பணபலம் ஆள் பலம் உடையவர்களே சிறந்த படைப்பாளிகளைப் போலத் தோற்றமளிக்கிறார்கள்.

கல்வி எதனை நோக்கி ஓடுகிறது.? வாழ்வியலைத் தொலைத்து, தொலை தூரப்பயணம் எதற்கு கண்ணை விற்று சித்திரம் வாங்க வேண்டுமா. சிரிக்க மறந்த இளம் வயதினரைச் சிந்திக்க வைக்க என்ன செய்வீர்கள்?



**உமாமகேஸ்வரி**

கல்வி வாழ்வாதாரத்தை நோக்கி செல்கிறது. ஒரு சிறந்த பொருளீட்டுதல் தேவையென்றால் கல்வி இன்றி யமையாததாகிவிடுகிறது. எனவே கல்வி முறையானது போட்டிகள் நிறைந்த வாழ்க்கையில் நாம் பயணிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கல்வியில் சிறந்து விளங்கி ஒரு வேலைவாய்ப்பைப் பெற்ற பிறகு அல்லது சுயதொழிலைத் தொடங்கிய பிறகு மட்டுமே தனது வாழ்க்கையைப் பற்றி ஒருவன் எண்ண இயலும். அது இல்லாமல் வெறும் வாழ்க்கையை மட்டுமே எண்ணினால் அவனுடைய எதிர்காலம் சிறப்பாக அமையாது.

ஆசிரியர் இராமவேல்முருகன், தந்தை இராமவேல்முருகன், நிர்வாகி இராம வேல்முருகனன், நண்பர் இராமவேல்முருகன் இதில் எந்த இராமவேல்முருகனைப் பிடிக்கும் ஏன்? அதில் எவரின் பணி சிறந்தது என நினைக்கிறீர்கள் ஏன்?



**செ.இலட்சுமண குமார். ஈரோடு**

அனைவரையுமே பிடிக்கும் அனைவருடைய பணியும் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன் என்றாலும் ஆசிரியர் இராம வேல்முருகன் தான் எனக்கு அதிகமாக பிடிக்கும். ஏனெனில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்காததால்.

இக்கால மாணவர்கள் மத்தியில் கவிதையின் தாக்கம் என்பது புதுக்கவிதை அளவிலே உள்ளது ? தங்கிலீஸ் சொற்களையே அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்? இதைப் பற்றி தங்களின் கருத்து என்ன ஐயா?



**ம.பழனிச்சாமி திருப்பூர்**

சோம்பேறித்தனத்தின் இன்னொரு வெளிப்பாடு தான் புதுக்கவிதை என்று உணர்ந்தவன் நான். தங்கிலீஷ் என்பது சிறிது சிறிதாக தமிழின் எழுத்து வடிவத்தைச் சிதைக்கக் கூடிய ஒரு செயலாகும். இதனை முற்றிலுமாக உணர்ந்து ஒழித்தால்தான் தமிழின் எழுத்து வடிவம் நிலைபெறும் அல்லது பேச்சு வடிவில் மட்டுமே தமிழ் இருக்கும்.

மரபுக் கவிதைகளின் வளர்ச்சி இன்னும் ஓங்கிடுமா! சந்ததிகள் நயந்து மரபுக் கவிதைகள் படைக்குமா!



**கிண்ணியா சபீனா இலங்கை**

மரபுக் கவிதைகளின் வளர்ச்சி உறுதியாக ஓங்கவே செய்யும். நிறைய இளைஞர்கள் மரபுக் கவிதை எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் இதன் பக்கம் வருவதை காண முடிகிறது.

புதுக்கவிதைகளில் உள்ள ஆர்வம் இன்றைய இளைய தலைமுறையிடம் மரபுக்கவிதைகளில் இல்லாததற்கான காரணம் கூறுங்கள் ஐயா....



**மு ஜாகிர் உசேன் புதுக்கோட்டை**

சோம்பேறித்தனம் தான் ஐயா

நியமன சட்டமன்ற உறுப்பினராக தங்களை தேர்வு செய்கிறார்கள். ஐ.நா சபையில் தமிழுக்கான இடமாக உங்களை சேர்க்கிறார்கள் இதில் எதை தேர்வு செய்வீர்கள்?



**செ.இலட்சுமணக்குமார் ஈரோடு**

இரண்டாவதைத்தான்

மரபுக்கவிதை வளர்ச்சியை ஊக்குவிக்கும் பணிகள் மேலும் அதிகரிக்க தங்கள் மேலான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த என்ன வழிமுறைகள் கையாளப்படுகிறது என்பதை அறிவிக்கக் கோருகிறேன்

**ஆ. சீனிவாசன் சென்னிமலை.**

எழுதுவதற்கான பயிற்சி

பயிற்சியைத் தொடர்ந்து உருவாக்கம். உருவாக்கத்தைத் தொடர்ந்து நூலாக்கம்



# வேடதாரிகள்

நாலும் கெட்டுப் போகுதிந்த நாகரிகங்கள்
நாட்டுக்குள்ளே உலவுகின்றார்
நாகரிக வேடதாரிகள்
நஞ்சையும் அமுதாய்
விற்றிடும் நயவஞ்சகர்கள்
நன்றாகத்தானே நடக்குது
இவர்களின் ஆடல்பாடல்கள்

தாயைப் போலே அன்பினைக் காட்டி
இவர்கள் தலையும் கொய்வார் தாலாட்டி
நாயைப் போலே கால்களைச் சுற்றி
நக்கி நன்றியும் கொல்வார் வாலாட்டி

கடும்புலி வாழும் காட்டுக்கு உள்ளே
கண்மூடி தவமும் புரியலாம் பயமின்றி
கொடும்பாவிகள் கூட்டத்தின் நடுவே நல்ல
கொள்கைகள் குற்றுயிராகும் ஒரு பலனின்றி

இதயம் தின்று இன்பம் காணும்
இவர்கள் பகுத்தறிவு வளர்ந்த பசும்புலிகள்
எதனைக் கொண்டு இவர்களை அழிக்க
இறைவனுக்குத் தெரியலையே தடம் வழிகள்

பொய்ம்மை மிகுந்த நாட்டிலே உண்மை
அடைக்கலம் தேடித் தேடி அலைகிறதே...
கூடுவிட்டுக் கூடு பாயும் கயவர்கள்...
மாய்வது எந்நாளோ? அந்நாளே திருநாள்...

**இராம.சு.சிவகுமரன், சென்னை**



# கலிவிருத்தம் பெரியார்

1

எண்ணப் பெருமை எழுத்தில் அளித்துப்
பெண்ணின் சிறப்பைப் பெரிதும் உணர்த்தி
மண்ணில் மனிதர் மதிப்பில் உயரத்
தன்னைக் கரைத்த தலைவர் பெரியார்

**- இப்னு ஹம்துன்**

2

ஈனப் பிறவி. இனமும் நிலைக்கத்
தானம் வழங்கித் தவமாய் உழைத்து
மானம் பெரிதாய். மடமைக் கொளுத்தி
ஊனம் அழித்த. உறவாய் பெரியார்

**- கவி நிலா மோகன். தஞ்சாவூர்.**

3

தாடிப் பெரியார் தகுதி யுடையார்
தேடிச் சிறுமை திருத்தும் புகழார்
கூடி யவரின் குணத்தைக் குவிப்பின்
நாடிப் பெறலாம் நலத்தை இனிதே..!

**- விசு. இம்மானுவேல் பெங்களூரு**

4

வீடும் மகிழ விழிப்பாய் இருக்க
நாடும் சிறக்க நலமும் விளைய
பாடும் படுவோர் பயனைப் பெறவே
ஓடும் நதியாய் உழைத்தார் பெரியார்!

**- பாவலர் க.சண்முக சிதம்பரம்**

5

பெண்கள் உயர்வைப் பெரிதும் உரைத்தார்!
மண்ணின் தலைவர்! மனத்தில் உறைந்தார்!
எண்ணம் முழுதும் எழுச்சி கொணர்ந்தார்!
திண்ணம் செயலாய்த் திகழ்ந்தார் பெரியார்!

**- ஓசூர் மணிமேகலை**

6

சாதி யெனவும் சமய மெனவும்
ஆதிக் குடியை அடிமைப் படுத்திப்
பாதி யுழைப்பைப் பறித்தோர் தமக்கும்
நீதி யுரைத்தே நிமிர்ந்தார் பெரியார்

**- இரா. சம்பந்தன், யேர்மனி**

7

முந்தை மனிதர் முடிந்து விடுத்த
விந்தை யெனவாம் விடியாச் செயல்கள்
சிந்தை நிறைத்துச் செயலால் தகர்த்த
தந்தை பெரியார் தரத்தில் பெரியார்

**- புலவர் தேவசகாயம் பிரான்சு**



*8*

சாதிப் பெயரால் சதிசெய் குழுவை/
ஆதி முதலாய் அகற்ற விழைந்தார்!
நாதி இழந்த நலிந்தோர் தமக்கோ
போதி மரமாய்ப் பொலிந்தார் பெரியார்!
**- கெங்கை பாலதா**

*9*

ஊறு நிகழும் உலகம் திருந்த
ஆறு சிறக்க அறிவைப் பகுத்தார்
மாறும் மனிதன் மடமை அகற்றிப்
பேறும் கொடுக்கப் பிறந்தார் பெரியார்
**- வேங்கை மார்பன் சையத் யாகூப்**

*10*

ஏங்கிக் கிடந்தோர் எழுந்து நடக்க
ஓங்கி ஒலித்த உரிமைக் குரலார்!
தூங்கிக் கிடந்தோர் துயரங் களைந்து
தாங்கிப் பிடித்த தகப்பன் பெரியார்!
**- இராம வேல்முருகன் வலங்கைமான்**

## கலிவிருத்தம் அண்ணா

*1*

பேச்சும் செயலும் எழுத்தில் நுழையும்
வீச்சு மொழியால் அரங்கம் அதிரும்
பேச்சுக் கலையால் சபையும் நிறையும்
மூச்சும் தமிழும் பிரியாத் தமிழர்
**- ம.பழனிச்சாமி. திருப்பூர்**

*2*

சொன்னால் சுவைக்கும், சுடராய் ஒளிரும்!
கன்னற் றமிழைக் கரும்பாய்ப் பொழியும்
அண்ணா சுரங்கம், அறிவின் அரங்கம்!
என்னைக் கவர்ந்த இனிமை எழுத்தே!
**- செல்வக் கடுங்கோ வாழியாதன் மதுரை**

*3*

அன்னைத் தமிழின் அழகைச் சுவைக்க
விண்ணும் அதிரும் உரையின் உயிரே
எண்ணும் கடமை எழுத்தின் வடிவில்
மண்ணில் விதைத்தாய் அரசின் குருவே!
**- தென்பரைத் தமிழன்பன்.**

*4*

முந்தைத் தமிழில் முதன்மை பெறுவார்
தந்தை பெரியார் தடத்தில் நடப்பார்,
சிந்தை தெளிவாய்ச் சிறப்பா யுரைப்பார்
தந்தார் பெருமை தமிழின் அறிஞர்...!
**- செண்பக ஜெகதீசன்**

*5*

அண்ணா வரவால் அடைந்த எழுச்சி
இந்நாள் வரையில் அகலாப் பொருளாய்
எந்நாள் வரினும் அரசை நடத்தும்
செந்நா மொழிந்த அடுக்குத் தமிழால்.
**- கவிஞர் சிவக்குமார் குன்றத்தூர்**

*6*

வண்ண மொழியின் வனப்பை அறிந்தார்
மண்ணில் விதைத்தார்! மனிதர் உயர்வைக்
கண்ணாய் நினைத்தார்! கலைகள் வளர்த்த
அண்ணா அவர்கள் அறிவின் புதையல் !
**- மாலதி திரு தஞ்சாவூர்**

*7*

பேச்சின் வழியால் பெருமை அடைந்தார்
மூச்சாய்த் தமிழை முனைந்து வளர்த்தார்
ஏச்சுப் படாமல் எமது மொழியை
ஒச்சம் பெறவும் உழைத்தே உயர்ந்தார்.
(ஒச்சம் - கீர்த்தி)
**- செல்வராசா சுதாகரன் இலங்கை**

*8*

மூக்கில் பொடியும் முகத்தில் சிரிப்பும்
தாக்கும் மனிதர் தலைநி மிரவும்
வாக்கில் நிறைந்து வளமாய்ச் செழிக்க
ஆக்கம் அறிஞர் அறிவீர் எவரோ ?
**- கவிஞர். சிந்தனை பாரதி**

*9*

மேடை அதிரும் மிரட்டும் குரலில்
ஓடை எனவே உதிரும் மொழிகள்
கோடை நிலவாய்க் குளிரும் தருமே
வாடை வளியாய் வழங்கும் சுகமே
**- பா.ச.கண்ணன்**

*10*

எங்கும் தமிழை எதிலும் உயர்வாய்
தங்கும் பெருமை தகைமை வளர்த்து
மங்காப் புகழால் மனதில் உயர்ந்த
சிங்கத் தமிழன் சிறப்பை வணங்கு.
*- க.தங்கவேலு கிருட்டிணகிரி*



# துளிப்பாக்கள் ..

.1.
தொலைந்த தூக்கம்
இரவை நகர்த்துகிறது
குயில் பாட்டு

2.
உதிக்கும் சூரியன்
அவசரமாக மறைகிறதே
வெட்கப்படுகிறதோ நிலவு

3.
ஒற்றைக் கூண்டு
சிக்கிக் கிடக்கின்றன காதலில்
ஜோடிப் புறாக்கள்

4.
பிச்சைக்காக உயர்கிறது
யானையின் தும்பிக்கை
தரம் தாழ்ந்தது மனிதம்

5.
வெறுமையான கூந்தல்
பூக்களால் நிரம்பியிருக்கிறது
முட்செடி

6.
ஒருபிடி சோறு
உண்ணாமல் கரைகிறது
தனிமையில் காகம்

7.
மறைந்த மின்னல்
பூனைக்குகு தெரிகிறது
கதவிடுக்கில் வானம்
8.
குழந்தையின் ஓவியம்
ரசிக்க முடியவில்லை
வாடகை வீடு

9.
அழைக்கும் யாசகன்
நினைவுக்கு வருகிறாள்
மறைந்த அம்மா

10.
பறக்கும் கனவு
குழந்தையின் கையில்
ஒற்றை இறகு...

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில், தமிழ்நாடு




நேர்கண்டவர் **ஏ டி. வரதராசன்**

# லோகநாதன் ஜி

## வட்டாட்சியர்

## மரபுக்கவிஞரானார்

**விருதுநகர் மாவட்ட வட்டாட்சியர், வருவாய் வட்டாட்சியர், சமூக ஆர்வலர், சிறந்த தமிழறிஞர், மிகச்சிறந்த மரபுக் கவிஞர் போன்ற பன்முகத் திறமையுடன் இருக்கும்,. ஐயா லோகநாதன் ஜி அவர்களின் சுவாரஸ்யமான பேட்டி இதோ.**



***வணக்கம் ஐயா***

*அன்பான வணக்கம் ஐயா.*

***வட்டாட்சியர் லோகநாதன் கவிஞர் லோகநாதன் இவை இரண்டில் எந்த பெயர் உங்களுக்கு பிடிக்கும்?***

*வட்டாட்சியர் என்பது எனது பதவியின் பெயர்..கவிஞர் என்பது எனது விருப்பம். இரண்டிலும் பிடித்தம் இருக்கிறது..*

***வட்டாட்சியர் லோகநாதன் மரபுக் கவிஞராக பரிணமித்தது எப்படி?***

*சங்க இலக்கியங்களில் எனக்கு மிகுந்த ஆர்வமும் பிடிப்பும் இருக்கிறது. மேல் கணக்கு நூல்கள் படிப்பேன்..*



*ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் பேரிடர் காலத்தில் பயன்படத்தக்க உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மாவட்ட.தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.*

மேலும் பாரதிதாசன் அவர்களுடைய கவிதைகளை விரும்பிப் படிப்பேன்.. அவர் போல எழுத வேண்டும் என்ற ஆர்வத்தில் எழுந்ததே மரபுக் கவிதைகளுள் பரிணமித்தது

**தாங்கள் முதலில் வட்டாட்சியராக பணியில் அமர்ந்த மாவட்டம் எது? எந்த ஆண்டு?**

விருதுநகர் மாவட்டம்..நான் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி II தேர்வு மூலம் 2001 ல் நேரடி வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்து பதவி உயர்வில் கடந்த 11 வருடங்களாக வட்டாட்சியராக பல்வேறு நிலைகளில் விருதுநகர் மாவட்டத்தில் பணிபுரிந்து வருகின்றேன். துணை ஆட்சியர் பதவி உயர்வை.எதிர் பார்த்துள்ளேன்.

**இத்தனை ஆண்டுகள் அரசுப் பணியில் உங்களை லஞ்சம் வாங்கச் சொல்லி அரசியல் வாதிகள் யாரேனும் அழுத்தம் கொடுத்ததுண்டா?**

இல்லை.. அவ்வாறான அழுத்தங்கள் எனக்கு இதுவரையில் வந்ததில்லை..

**அரசு சலுகையைக் குறுக்கு வழியில் பெறுவதற்கு உங்களிடம் கையொப்பம் வாங்குவதற்காக வந்து நிற்கும் அரசியல் வாதிகளை எதிர்த்து. உண்மையான ஏழைக்களுக்கு அந்த கையொப்பத்தை இட்டதுண்டா?**

மக்களுக்கான சான்றுகளை உரிய ஆவணங்கள் மற்றும் விசாரணை அடிப்படையில் தான் வழங்கி வருகின்றோம்.

தவறான அரசியல் பரிந்துரைகளுடன் வரப் பெறும் மனுக்களை விசாரித்து ஏன் வழங்க இயலாது என்ற காரணத்தை பரிந்துரைப்பவரிடமே சற்று பொறுமையாக அந்த சான்றுகள் வழங்கப்படுவதால் ஏற்படும் பாதகங்களை விவரித்து மறுத்ததுண்டு.




விருதுநகரில் உள்ள காதுகேளாதோர் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கைவினைப் பொருட்கள் செய்வதற்கான

**ஒரு மாவட்டத்தின் வளர்ச்சி என்பது கல்வியா? பொருளாதாரமா? ஏன்?**

கல்வியே.. பொருளாதர வளர்ச்சிக்கு அடிப்படையே கல்விதான் என்பது என் கருத்தாகும்.

**தாங்கள் வருவாய் வசூல் செய்த ஊர்களில் எந்த ஊரின் கணக்கு நேர்மையாகவவும் துல்லியமாகவும் இருந்தது?**

**எந்த ஊரின் கணக்கு மறு பரிசீலனை செய்யும் படி இருந்தது?**

கிராம கணக்குகளை கிராம நிர்வாக அலுவலர்கள் பராமித்து வருகின்றனர். கிராம கணக்குகளைப் பொதுவாக வட்ட அளவில் மாவட்ட அளவில் தணிக்கை செய்த பின்னரே துணைஆட்சியர்/ வருவாய் தீர்வாய அலுவலரால் (ஜமாபந்தி) முடிவு செய்யப்படும்.தவறான கணக்குகள் ஏதும் எழுதப்பட்டிருப்பின் அறியப்பட்டு சரி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படும்

**இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போது? நீங்கள் கண் கலங்கிய நிகழ்வு ஏதேனும் உள்ளதா?**

**அவ்வாறு இருப்பின் அந்த ஏழைக்கு நீங்கள் உங்கள் சொந்த செலவில் தனிப்பட்ட முறையில் ஏதும் செய்ததுண்டா?**

சாத்தூர் வட்டத்தில் வட்டாட்சியராக பணி புரிந்த பொழுது, தாய் தந்தை இறந்த நிலையில் 17 வயதான மூத்த மகள் தனது ஒரு தங்கை மற்றும் இரண்டு தம்பிகளை அருப்புக் கோட்டையில் உள்ள நூற்பாலையில் கூலி வேலை செய்து காப்பாற்றி வந்த நிலையில் அவர்கள் குடியிருந்த குடிசை வீட்டின் பக்க சுவர்கள் மழையால் இடிந்து விட்டது. தகவல் கிடைத்த உடன் வீட்டிற்கு கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளருடன் சென்று ஒரு மாதத்திற்கான அரிசி பலசரக்குக் கான உதவிகள் செய்தோம். தங்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்தோம். தொடர்ச்சியாக அந்த இடத்திற்கு பட்டா வழங்கி, ஆறு மாத காலத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் அழகான வீடு கட்டிக் கொடுக்க உதவினோம். அந்த குழந்தைகள் நால்வரும் புதிய வீடு பால் காய்ச்சும் போது கொண்ட மகிழ்ச்சியையும் காட்டிய நன்றி உணர்வையும் இன்றும் மறக்க இயலாது. கல்விக்கான மாதந்திர உதவியும் அரசு மூலம் செய்ததால் நன்றாக படித்து வருகின்றனர் .இன்றும் எனது தொடர்பில் இருக்கின்றனர்



விருதுநகரில் உள்ள காதுகேளாதோர் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கைவினைப் பொருட்கள் செய்வதற்கான மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட்டது.



கவிருதுநகர் மாவட்ட நிர்வாகம் சார்பாக நடத்தப்பட்ட புத்தகத் திருவிழா

**ஆவணங்கள் பற்றாக் குறையால் நிலவரி வசூல் செய்வதில் சிக்கல் வரும்போது... உடனடியாக எப்படி அதைத் தீர்ப்பீர்கள்?**

பட்டா தாரர்களிடம் மட்டுமே நிலவரி வசூல் செய்யப்பட்டு வருகின்றது. பத்திரங்கள் மட்டுமே வைத்து சிலர் தங்கள் நிலம் என்று உரிமை கோரி தீர்வை செலுத்த வருவார்கள். இவ்வினங்களில் பட்டா மாற்றம் செய்ய அவர்களை அறிவுறுத்துவோம் , சரியான கிரையம் தானா என உறுதி.செய்து பெயர் மாற்றம் செய்து பட்டா தாரிடம் நிலவரி வசூல் செய்யப்படுகிறது

**சட்ட விரோதமாக நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கும் அரசியல் வாதிகளிடம் இருந்து வரியை வசூலிப்பதில் சிரமம் ஏற்படும் போது என்ன செய்வீர்கள்?**

சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களிடம் வரி வசூல் செய்வதே தவறு ஆகும். அவரை அவ்விடத்தில் இருந்து சட்ட விதிகளின் படி அகற்ற வேண்டியதே வட்டாட்சியரின் பணி. சிவகாசியில் நீர் வழிப் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை பல மிரட்டல்கள் மத்தியில் அகற்றியுள்ளோம்.

**நில உரிமையாளர்கள் நிதி நெருக்கடியில் இருக்கும் போதும், அதே சமயம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வரி வசூலித்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படும் போதும் என்ன செய்வீர்கள்?**

நிலவரி வசூல் என்பது ஒரு



*2024 சுதந்திர தின விழா..*



வருடத்திற்கான வரி விதிப்பு. கிராம நிர்வாக அலுவலர்கள் பசலி ஆண்டின் துவக்கத்திலேயே கேட்புப் பட்டயல் படி வசூல் நடவடிக்கையை ஆரம்பிப்பதால் இந்நிலை அவ்வளவாக வருவதில்லை. மேலும், நிர்பந்தம் ஏதும் இருப்பதில்லை. சில விவசாயிகள் இரண்டு மூன்று பசலி ஆண்டுகளுக்கு சேர்த்து கட்டுவதுண்டு

**வருவாய்க் குறைவாக இருக்கும் பகுதிகளில் எப்படி வரியை வசூல் செய்வீர்கள்?**

வருவாய் தீர்வாயம் என்பது ஒவ்வொரு வருடமும் நடக்கும். ஜமாபந்தி எனச் சொல்வார்கள். நிலவரி முடிவு செய்வது இந்த ஜமாபந்தியில் தான். அடங்கலின் படி விளைச்சல் அறுவடை ஆகியவை கணக்கில் கொண்டு துணை ஆட்சியர் தலைமையில் நிலவரி நியாயமான முறையில் இறுதி செய்யப்படுவதால் வரி வசூல் செயதலில் அவ்வளவாக பிரச்சனைகள் வருவதில்லை.

'**Adjustment** எனும் ஒன்றைக் கடந்து வராத மனிதர்களே இருக்க முடியாது. மேலும் **Adjustment** ஆகாத எவரும் இருக்க முடியாது என்பது நிதர்சனமான உண்மை.

**கொஞ்சம் எனக்காக அட்ஜஸ் பண்ணுங்க சார்.... என்ற வார்த்தையை எத்தனை முறை கேட்டுள்ளீர்கள்?**

ஒரு செயலை செய்வதால் பாதிப்பு என்ன என்பதையும் அதனால் ஏற்படும் விளைவுகள் யாது என்பதையும் ஆரய்ந்து செயல்படல் வேண்டும். எடுத்துக் காட்டாக ஆக்கிரமிப்பு அகற்ற நோட்டிஸ் கொடுத்த நிலையில் சிறது கால அவகாசம் கேட்பாங்க. அழுத்தமும் வரும். இந்த மாதிரியான சூழல்களில் கெடு பிடியாக இல்லாமல் **Adjust** பண்ணிதான் ஆகனும்.

**நிலவரி வசூல் செய்யும் பகுதிகளில் ஏதோ ஒரு பகுதி கல்வியில் சிறந்தும், வருவாயில் குறைந்தும் இருந்தால் அப்பகுதியைப் பார்த்து வருத்தம் அடைவீர்களா? அல்லது மகிழ்ச்சி அடைவீர்களா?**

கல்வியும் பொருளாதாரமும் சேர்ந்தே முன்னேறுவது சிறப்பு! இருப்பினும் கல்வியில் சிறந்திருத்தல் மகிழ்ச்சியே. அதே நேரத்தில் வருவாயைப் பெருக்குவதற்கான முயற்சிகளையும் எடுப்போம்.

**தமிழில் உங்களுக்குப் பிடித்த பா வகை எது? ஏன்?**

கட்டளை கலித்துறையில் எழுத எனக்கு மிகவும் பிடிக்கும். வெண்டளையில் எழுத்து எண்ணிக்கை கட்டுப்பாட்டுடன் எழுதி முடித்து அதை வாசித்துப் பார்க்கையில் இனிமை தரும் மனத்திற்கு.



*இலங்கை தமிழர் அகதிகள் முகாம்களுக்கிடையேயான மாநில அளவிலான கிரிக்கெட் போட்டி - சிவகாசி*

**முகநூல் குழுமங்களைப் பற்றி தங்களின் கருத்து என்ன?**

போட்டிகள் நடத்தி சான்றிதழ்கள் தருகின்றனர். என்ன எழுதினாலும் சான்றிதழ் வழங்கி தங்களது உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொண்டு தங்களது குழுமங்களை வளர்க்கிறார்கள்.. ஆனால் நல்ல படியாக செயல்படும் சில குழுமங்களும் உள்ளது.

**தாங்கள் எழுதிய நூல்கள் மற்றும் விருதுகள் பற்றி சொல்லவும்?**

நூல்கள் இன்னும் வெளியிட.வில்லை

**ஒரு கவிஞனுக்குத் தேவை சொல்வளமா? கற்பனையா?**

இரண்டுமே வேண்டும்! கற்பனை இல்லமல் கவிதை எழுதினால் அறிவுரையாகவோ உரைநடை போலவோ மட்டுமே இருக்கும்.. கற்பனையோடு சொல்ல வேண்டிய கருத்தை சொல் நயத்தோடு வைத்தல் கவிதையின் தன்மை படிப்போரைக் கவரும்.



*விருதுநகர் மாவட்ட நிர்வாகம் சார்பாக நடத்தப்பட்ட சிறுவர் இலக்கிய விழா..*

**என்ன வருத்தி நீகவிசெய்யினும் முன்னோர்கள் செய்ததன்றி நூதனம் ஒன்றுமில்லை என்பார்கள். அப்படி என்றால் நம்மால் முன்னோர்களை மிஞ்ச முடியாதா? அல்லது மிஞ்சக் கூடாதா?**

மிஞ்ச வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு கவிஞனின் படைப்பாளியின் ஆசையாக உள்ளது. மிஞ்ச முயல்வோம்.



*சிவகாசி.வட்டாட்சியர் அலுவலகம்.. பணிமாறுதல் வழியனுப்பு விழா*



பெங்களூரில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை பயிற்சியில் கலந்து கொண்டு திரும்பிய விருதுநகர் மாவடட்த்தைச் சேர்ந்த தன்னார்வலர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சான்றுகளுடன் வந்திருந்து சந்தித்தனர்.

---

**புதுக்கவிதை மற்றும் புதுக் கவிஞர்களைப் பற்றி தங்கள் கருத்து என்ன?**

புரியாமல் குழப்பிப் புரிய வைப்பது என நினைக்கிறேன். வடசொற்கள் பயன் படுத்தப்பட்டு எழுதப்படுகிறது அதிகமாய்.

**மரபுக் கவிதை மற்றும் புதுக்கவிதை இவை இரண்டில் எது உயர்ந்தது? ஏன்?**

மரபுக்கவிதை தான். கருத்தை ஓசை நயத்தோடு சொல்லுதல் மற்றும் பயிலப்படும் ஒழுங்கு

**வளரும் பாவலர்களுக்குத் தாங்கள் சொல்ல விரும்பும் அறிவுரை?**

சங்க இலக்கிய சிறப்பைப் படித்துணர்ந்து நவீன தமிழ் மக்களை அறிய வையுங்கள். நம் தொன்மையை புரிய வையுங்கள்

**தமிழ்நெஞ்சம் மாத இதழைப் பற்றி தங்களின் மேலான கருத்து என்ன?**

உலகளவில் தமிழை வளர்க்கும் சிறப்பான தமிழ்த் தொண்டை தமிழ்நெஞ்சம் ஆற்றி வருவதை அறியும் பொழுது மனம் மகிழ்கிறது; குறிப்பாக மரபுக் கவிதைகளுக்கு அங்கீகாரம் தருகிற ஒரு சில உயர்ந்த இதழ்களில் தமிழ்நெஞ்சம் மீச்சிறப்பு கொண்டது. தலை வணங்குகின்றேன்

**(ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லவும்)**

**தமிழின் சிறப்பு ஓரிரு சொற்களில்**

அழகு.

**காதல் என்பது**

அவசியம்

**ஏமாற்றம் என்பது**

மாற்றம் தரும்

**மத மாற்றம் என்பது**

தனிநபர் சுதந்திரம்

**எது உண்மையான படைப்பு**

நல்ல சமூக வளர்ச்சியை நோக்கியது

**எவன் உண்மையான படைப்பாளி**

எழுத்தால் மக்கள் மனங்களில் நல்ல மாற்றம் செய்பவன்

**திருமணம் என்பது**

குடும்பம் சார்ந்தது

**தாயைப் பற்றி ஒரே சொல்லில்**

உண்மையான அன்பு

**எது அழகு**

தனிமனித மற்றும் சமூக ஒழுக்கம்

**விமர்சனம் என்பது**

சரியானதாய் இருந்தால் ஏற்றுக் கொண்டு சரி செய்!

**வெற்றி என்பது**

மகிழ்ச்சி மற்றும் வளர்ச்சி தருவது

---



*2024 சுதந்திர தின விழா.. வட்டாட்சியர் சிறப்புப் பணிக்கான சான்றிதழ்*



*நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம். மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு முகாம்*

---

**கடவுள் என்பது**

ஒருவனே தேவன்

**எதைக் கண்டு அஞ்ச வேண்டும்**

தீவினை அச்சம்

**எதைக் கண்டால் அஞ்சக் கூடாது**

அதிகார வர்க்கம்

**ஆசை என்பது**

அளவாக வேண்டும்

**சாதி என்பது**

மன நோய்

**பணம் என்பது**

அவசியம்

**நட்பு என்பது**

ஆராய்ந்து கொள்..

**எது உண்மையான பக்தி**

சக உயிர்கள் மீது அன்பு செலுத்தல்

**யார் உண்மையான நாத்திகன்**

சக உயிர்கள் மேல் இரக்கம் இல்லாதவன்.



நௌஷாத் கான். லி

# காதலொன்று கண்டேன்

டே ஆரிப் நான் சொன்னேன்லே இப்படி பைத்தியக்காரப் புண்ணாக்கு மாதிரி இருக்காதடா, தப்போ ,ரைட்டோ மனசுல பட்டதை சொல்லிடணும்னு ...

இப்ப பாரு காலேஜ் வாழ்க்கையும் முடிய போகுது, உன் காதல் வாழ்க்கையும் முடிய போகுது?

என்னடா சொல்லுற சேட்டு, எனக்கு ஒண்ணுமே புரியலை

உன்கிட்ட என்ன வெங்காயத்த சொல்லுறது அதான் இதயம் முரளி மாதிரி இருந்து, இருந்து உன் வாழ்க்கையை, காதலை, ஆசையை எல்லாத்தையும் தான் அஸ்தமனம் ஆக்கிட்டியே

என்னடா சொல்லுற,கொஞ்சம் புரியிற மாதிரி சொல்லு

பர்வீன் வீட்ல மாப்பிள்ளை பார்த்துட்டாங்கடா, இன்னும் ஒரு மாசத்துல எக்ஸாம் முடிஞ்சு அவளுக்கு கல்யாணம் .

இப்படியே மனசுக்குள்ளேயே பொத்தி, பொத்தி காதல்ல வச்சிருந்தா அவளுக்கு எப்படி உன் காதல் தெரியும்?

டே ஆரிப் அவ கல்யாணத்துக்கு அப்புறம் உன் பொக்கிஷமான ஒரு தலைக் காதலை உன் மனசுக்குள்ளேயே வச்சுக்கிட்டு வாழ்க்கை முழுதும் அழுது கிட்டே சாவுடா

சேட்டு அப்படி சொல்லவும் அவனையும் அறியாமல் கண்ணீர் விழிகளில் வழிந்தோடியது

அழுத கண்களோடு அவன் பேக்கை தூக்கி கொண்டு பர்வீனை நோக்கி சென்றான் .

பர்வீன் அந்த காலேஜ்ஜில் உள்ள தூங்கு

*மூஞ்சி மரத்தின் நிழலில் தனியாக உட்கார்ந்து படித்து கொண்டிருந்தாள் .*

*இங்க பாரு பர்வீன் என் பேரு ஆரிப் உன் கூட உன் கிளாஸ்ல தான் படிக்கிறேன் முன்ன, பின்னே இதற்கு முன்னாடி உன் கூட பேசுனது கிடையாது. ஆனா உன்னை எனக்கு சின்ன வயசுல இருந்தே பிடிக்கும். நான் டவுன் ஹை ஸ்கூல்ல படிச்சப்ப நீ சரஸ்வதி பாடசாலையில படிச்ச.*

*ரெண்டு பேருக்கும் பொதுவா இருந்தது அந்த கும்பகோணத்து மடத்துதெரு பஸ் ஸ்டாண்ட் தான். நீ படிச்ச டியூசன், இங்கிலீஷ் ஸ்போக்கன் கிளாஸ் என்று உனக்காகவே தான் சேர்ந்தேன். அப்ப அது காதல்ன்னு எனக்கு தெரியாது. என்னை பொறுத்தவரைக்கும் உன்னை டிஸ்டர்ப் பண்ணாம என் வாழ்க்கை முழுதும் பார்த்துக்கிட்டே இருக்கணும்.*

*கும்பகோணத்துல பிறந்த நான் அதுவும் எங்க ஊர்ல டசன் கணக்குல அம்புட்டு காலேஜ் இருந்தும் நீ திருப்பனந்தாள் குமரகுருபரர் காலேஜ்ல சேர்ந்த ஒரு காரணத்துக்காக நானும் சேர்ந்தேன். உன் மேல என் உசுரையே வச்சு இருக்கேன் ஆனா இப்ப இருக்கிற என் சூழ்நிலையில உங்க வீட்ல வந்து உன்னை பொண்ணு கேட்கவோ, பரிசம் போடவோ எனக்கு தகுதி இல்லை. ஏன்னா என் வாழ்க்கைல ஒரு நல்ல வேலைவாய்ப்பை தேடி என்னை நிலைநிறுத்திக்க இன்னும் மூணு வருஷம் தேவைப்படுது எனக்காக, என் காதலுக்காக நீ காத்திருப்பியா ??*

*எப்படி லவ்வை சொல்லணும்னு கூட எனக்கு தெரியாது இப்ப கூட உனக்கு நிச்சயதார்த்தம் பண்ண போறாங்கன்னு என் நண்பன் சேட்டு சொன்ன ஒரே காரணத்துக்காக தான் பதறி அடிச்சு உன்கிட்ட என் காதலை சொல்ல வந்தேன் .*

*எங்க அம்மா சத்தியமா ஒண்ணே ஒண்ணு சொல்லுறேன் என் வாழ்க்கைல நீ வந்தா உன்னை வாழ்க்கை முழுதும் சந்தோசமா பார்த்திப்பேன் பர்வீன்.*

DO YOU LOVE ME ?

*(பர்வீன் சிறு புன்னகைக்கு பிறகு )*

*ஒரு ஆம்பளை பத்தடி தூரத்துல இருந்து பார்த்தாலும் ஒரு பொண்ணுக்கு தெரிஞ்சிடும் நீ இத்தனை வருஷமா பார்க்குற எனக்கு தெரியாம இருக்குமா என்ன ?*

*உன்னை எனக்கு பிடிச்சதால தான் எனக்கு படிக்க பிடிக்கலைன்னாலும் மேற்படிப்புக்கு இப்பவே அப்ளிகேஷன் போட்டு இருக்கேன் ,*

*எம் .பி .ஏ பண்ண போறேண்டா அதுக்குள்ள உன் படிப்பை பூர்த்தி செஞ்சிட்டு நல்ல வேலையில சேர பாரு அதுக்கப்புறம் உங்க வாப்பா , அம்மாவை கூட்டிக்கிட்டு வந்து முறைப்படி பொண்ணு கேளு*

*அப்ப உனக்கு நிச்சயதார்த்தம், கல்யாணம்ன்னு சேட்டு சொன்னது*

*அவன் உன்கிட்ட டூப்பு விட்டிருப்பான் அவன் பொய் சொன்னதிலும் ஒரு நல்லது நடந்து இருக்கு இப்பவாச்சும் உன் மனசுல இருந்த காதலை சொன்னியே .*

*சரி, சரி நான் ஓகே சொல்லிட்டேன்னு அங்கே, இங்கேன்னு சுத்தாதே ஒழுங்கா மரியாதையா அரியர் வைக்காம பாஸ் பண்ணுற வழிய பாரு என்று ஆரிப்பை அதட்டி அனுப்பினாள் பர்வீன் .*

*போவதற்கு முன் அவள் முகத்தை ஒருமுறை திரும்பி பார்த்தான். அவள் விழிகளில் இவனுக்குள் பூத்த அதே காதலொன்றை கண்டான் !!*

# பண்டிகைகளின் சாரம்



நம் பாரத திருநாட்டை மற்ற நாடுகள் எல்லாம் ஆச்சரியத்துடன் பார்க்கும் பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கிய அங்கம் வகிப்பதாக இருப்பதே நம் நாட்டில் இந்தியர்களாகிய நாம் கொண்டாடும் பண்டிகைகள் தான்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற தாரக மந்திரத்தை முழுமையாய் நம்பும் நம் மக்கள் அவரவர்கள் இருக்கும் மாநில பண்டிகைகளையும், பல்வேறு காரணங்களுக்காக வேறு இடங்களில் குடிபெயர்ந்தவர்களும் தங்கள் சொந்த மண்ணின் பண்டிகைகளையும் கொண்டாடி வருகின்றனர். ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு தாத்பரியமான காரணம் நம் பெரியவர்களால் நமக்கு சொல்லப்பட்டு வருகிறது. அறிவியல் பூர்வமாகவும் பல சமயங்களில் நமக்கு எடுத்துக் கூறப்படுகிறது.

உறவினர்களின் வருகை, ஒன்றாக மகிழ்ந்து நேரம் செலவிடுதல், நண்பர்களை நம் இல்லங்களுக்கு அழைத்து விருந்தளிப்பது என்பன போன்ற ஆரோக்கியமான விஷயங்களே பண்டிகைகளின் அடிநாதமாய் கருதப் படுகிறது.

இன்றைய சூழலில் பண்டிகைகளின் இந்தச் சாரத்திற்கு, அடிநாதத்திற்கு சமுதாயத்தில் கொஞ்சம் தொய்வு வந்து விட்டதோ என்ற உணர்வு ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை. பல்வேறு காரணங்களும் அதற்காக கூறப்படுகின்றன. நம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக நம் பண்பாடான அனைவரும் கூடி, உரையாடி, மகிழ்ந்து பண்டிகைகளை கொண்டாடும் நம் பழக்கத்தை புதுப்பிப்போம்.

அதே சமயத்தில் நம் பூமித்தாய்க்கும் சேதம் ஏற்படாமலும், சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்காமலும் பண்டிகைகளை கொண்டாடுவதும் நம் கடமை என்பதையும் நினைவில் கொள்வோம்.

சம்பந்தப்பட்ட அரசு துறைகளும் பண் டிகைகள் வரும் காலத்திலேயே பருவமழை காலமும் வருவதால் இரண்டையும் சமாளிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துவோம்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதனால் பண்டிகை கால பலகாரங்களை அளவோடு உண்டு ஆரோக்கியமும் காப்போம்.

வரவுக்கேற்ற செலவும் செய்து பண்டி கைகளுக்கு பிறகு வரும் மாதங்களிலும் பொருளாதார தட்டுப்பாடின்றி வாழ வழிகள் செய்வோம்.

உறவையும், நட்பையும் புதுப்பிக்கும் பாலமாக நம் பண்டிகைகள் இனி இருக்கட்டும். ஆனந்தமாய் கொண்டாடி மகிழ்வோம். மனிதநேயமும் காப்போம்.

வாழிய பாரத மணித்திருநாடு.

**ஜெயஸ்ரீ எம். சாரி,** ஆதம்பாக்கம்.

# துளிப்பாக்கள்

*1*
*தண்டையிட அத்தை இங்கில்லை*
*சண்டையிட்டுப் போனவள்*
*போகட்டும்*
*வேலியின் ஓணான் மடிக்குள்*
*எதற்கு?*

*2*
*வெட்டுக்கு தலை கொடுத்தது*
*ஆடு அல்ல; புலியே ஆனாலும்*
*சொக்கட்டான் விளையாட்டில்*
*சோழிதானே*

*3*
*கூத்தாடிக்கு கொண்டாட்டம்*
*ஊரு ரெண்டு பட*
*காத்திருக்கும் அவலம்*

*4*
*அண்ணன் சாகக்*
*காத்திருக்கும் ஆடுகள்*
*இலவு காத்த கிளிகள்*
*சாகா வரம் பெற்ற புண்ணியர்*

*5*
*ஆனதெல்லாம் ஆணாய் நின்ற*
*பெண்ணாலே போனதெல்லாம்*
*பேராசை பேயான பெண்ணாலே*

*6*
*'நான் வருகிறேன் என்று*
*கொக்கரித்து வருவது*
*புலித்தோல் போர்த்தின பசுவா?*
*பசுத்தோல் போர்த்தின புலியா?*

*7*
*அலமந்து நிற்கும் பொதுமக்கள்*
*ஏமிலாந்தியான தலைவர்கள்*
*கலங்கிய குட்டையில்*
*மீனுக்கு வலை வீசும் சமர்த்தர்*

*8*
*வருகிற கூட்டம்*
*மாறுமா ஓட்டாய்*
*எட்டா பழத்துக்கு*
*கொட்டாவி விட்டது போலாகுமா?*

*9*
*அங்கும் இங்கும் கலவரம்*
*தென்காசி வியாபாரம்*
*தலைவர்களின் வாயால் வடை சுடும்*
*திருநெல்வேலி உபசாரம்*

*10*
*ராமன் ஆண்டாலும்*
*ராவணனே ஆண்டாலும்*
*தேர்தல் கால பண மழை*
*வற்றாத நீர் கிணறு*
*வெள்ளம் கொண்டு போகாது*

**சசிகலா விஸ்வநாதன்**



# பெருகும் அறிவு குறையும் ஞானம்



இன்றைய மனிதன் வானளாவிய அறிவைப் பெற்றிருக்கிறான். ஒரே நொடியில் உலகம் முழுவதிலிருந்தும் தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. புத்தகங்கள், இணையம், தொழில்நுட்பம் – இவை அனைத்தும் அறிவின் கதவுகளை நமக்காகத் திறந்து வைத்திருக்கின்றன. ஆனால் ஒரு கேள்வி நம் உள்ளத்தில் எழுகிறது: இந்த அளவுக்கு அறிவு பெருகியிருக்கையில், ஏன் மனிதனின் ஞானம் தினம் தினம் குறைந்து கொண்டே செல்கிறது?

அறிவு என்பது கற்றல் மூலம் நமக்குள் நுழையும் தகவல். ஆனால் ஞானம் என்பது அந்த அறிவைப் பயன்படுத்தி எது சரி, எது தவறு என்பதை உணர்ந்து வாழும் திறன். அறிவு நமக்கு வழிகளை காட்டுகிறது; ஆனால் அவற்றில் எது சிறந்தது என்பதைத் தீர்மானிக்கிறது ஞானமே. இன்றைய காலத்தில் அறிவு ஒரு வெள்ளம் போல பெருகி வருகிறது. ஆனால் அந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு உண்மையை அடையாளம் காணும் ஞானம் மறைந்து கொண்டிருக்கிறது.

சமூக வலைத்தளங்களில் தினமும் ஆயிரக்கணக்கான செய்திகள், வீடியோக்கள், கருத்துக்கள் நம் கண் முன்னே ஓடிக் கொண்டிருக்கின்றன. மக்கள் அவற்றை சிந்திக்காமல் பகிர்ந்து கொள்கிறார்கள். பொய்யையும் உண்மையையும் வேறுபடுத்தும் சக்தி குறைந்து வருகிறது. அதனால் அறிவு பெருகினாலும், உண்மையைத் தேர்ந்தெடுக்கும் ஞானம் குறைகிறது.

இன்றைய கல்வி உலகில் மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுத்து முன்னேறுகிறார்கள். பலரும் மருத்துவம், பொறியியல், வணிகம் போன்ற துறைகளில் வல்லவர்களாகிறார்கள். ஆனால் வாழ்க்கையில் நல்ல மனிதராக வாழும் வழிகள் அவர்களிடம் மங்கிக் கொண்டிருக்கின்றன. அறிவு அளவில் உயர்ந்தாலும், மனிதநேயம், பொறுமை, கருணை போன்றவற்றில் குறைபாடு தென்படுகிறது. நல்ல வேலை பெறுவது முக்கியமாகிறது; ஆனால் நல்ல வாழ்வு நடத்துவது பின்தள்ளப்படுகிறது.

தொழில்நுட்பம் மனிதனின் வாழ்க்கையை எளிதாக்கியிருக்கிறது. உலகின் எந்த மூலையிலும் இருக்கும் ஒருவரை சில நொடிகளில் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனாலும் அதே நேரத்தில் ஒரே வீட்டில் வாழ்பவர்களுக்குள்ளும் தூரம் அதிகரித்திருக்கிறது. குடும்பத்தினர் கூட ஒருவருடன் ஒருவர் பேசாமல், தங்கள் மொபைல் திரைகளில் மூழ்கி இருக்கிறார்கள். இதனால் அறிவு வளர்ந்தாலும், உறவுகளை பேணும் ஞானம் குறைந்து கொண்டே செல்கிறது.

அறிவு மட்டும் இருந்தால் அது போதாது. ஞானம் இல்லாவிட்டால் அந்த அறிவு பயனற்றது. அறிவு ஒரு

விளக்கு என்றால், ஞானம் அதன் எண்ணெய். எண்ணெய் இல்லாத விளக்கு எரியாது. அதுபோல ஞானம் இல்லாத அறிவு வெளிச்சம் தராது. பழையோர் சொல்வதுபோல், அறிவு என்பது ஒரு ஆயுதம்; ஞானம் அதன் கைப்பிடி. கைப்பிடி இல்லாத ஆயுதம் கையில் விழுந்து காயப்படுத்தும். அதுபோல ஞானம் இல்லாத அறிவு மனிதனையே பாதிக்கும்.

ஆகையால் நாம் செய்ய வேண்டியது, அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு ஞானத்தையும் வளர்க்க வேண்டும் என்பதுதான். புத்தகங்கள் மற்றும் இணையம் வழியாக அறிவைப் பெற வேண்டும், ஆனால் அனுபவம், சிந்தனை, ஒழுக்கம் ஆகியவற்றின் மூலம் ஞானத்தை வளர்க்க வேண்டும். மூத்தோர்களின் அனுபவத்தை மதிக்க வேண்டும். மதமும் ஒழுக்கமும் காட்டும் நல்ல வழிகளை பின்பற்ற வேண்டும். சிந்தித்து முடிவெடுக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும்.

முடிவாகச் சொல்ல வேண்டுமெனில், அறிவு மனிதனை உயர்த்தும் சிறகுகள். ஆனால் அந்த உயரத்தில் நிலை நிறுத்துவது ஞானமே. சிறகுகள் இருந்தும் இருக்கைகள் இல்லாத பறவை தரையில் விழுந்துவிடும். அதுபோல அறிவு இருந்தும் ஞானம் இல்லாத மனிதன் வீழ்ந்துவிடுவான். உண்மையான முன்னேற்றம் என்பது அறிவும் ஞானமும் ஒன்றாக வளர்வதில் தான் உள்ளது. அறிவு உன்னை உயர்த்தும்; ஆனால் ஞானமே உன்னை நிலைநிறுத்தும்.

**அஸ்மியா நிஸாம்** - அக்குறணை, இலங்கை



# வாடகை வீடு

வீட்டின்
உரிமையாளருக்கு மட்டுமல்ல
அவர்களின் உறவினர்களுக்கு
நம்மை பிடிக்கவில்லை
என்றால் கூட
அடுத்த வீட்டிற்கு
குடி புகுதல் வேண்டும்.......!!!!

உண்மையில்
அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை
வாடகை வீட்டில் இருப்பவர்கள்
அவர்கள் எல்லோரையும் போல
வாழ்தலுக்கு பதில்
வசிக்கிறார்கள்.......



# பாவேந்தரும் சுரதாவும்

## பாவேந்தர் பாரதிதாசன்

### தொடக்க வாழ்க்கை

தென்னிந்தியாவிலுள்ள புதுவையில் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி 1891 ஆம் ஆண்டு கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

இவரது தந்தை கனகசபை அவ்வூரின் மிகப்பெரிய வணிகர் ஆவார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்புரத்தினம். இவரது தந்தையின் பெயரின் முதல் பாதியை தன்னுடைய பெயரில் இணைத்து கனகசுப்புரத்தினம் என்று அழைக்கப்பட்டார்.

### கல்வி

இவர் சிறு வயதி லிருந்தே தமிழ் மொழி மீது மிகுந்த பற்று கொண் டவராக இருந்தார். இருப்பினும் அக்காலப்பகுதியில் புதுவையில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் காணப் பட்டதால் அவர் ஒரு பிரெஞ்சுப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார்.



### இல்லற வாழ்க்கை

பாரதிதாசன் அவர்கள் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய அடுத்த ஆண்டிலேயே அதாவது 1920 ஆம் ஆண்டு பழநி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இத்தம்பதியினரின் இல்லற வாழ்க்கைப் பயனாக இருவருக்கும் நவம்பர் மாதம் 3 ஆம் தேதி 1928ஆம் ஆண்டில் மன்னர்மன்னன் என்ற மகன் பிறந்தார். அதன் பின்னர் சரஸ்வதி, வசந்தா மற்றும் ரமணி என்ற மகள்களும் பிறந்தனர்

## சுரதா

### வாழ்க்கைக் குறிப்பு

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தஞ்சை மாவட்டம் பழையனூர் (சிக்கல்) என்னும் ஊரில் பிறந்தவர். பெற்றோர் திருவேங்கடம்-செண்பகம் அம்மையார் ஆவர். பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றார். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார்

### திரைப்படத் துறையில்......

சுரதாவின் கலையுணர்வினைக் கண்ட கு.ச.கிருட்டிணமூர்த்தி என்பவர் இவரைத் திரை யுலகத்திற்கு அறிமுகப்படுத் தினார். 1944 ஆம் ஆண்டு மங்கையர்க்கரசி என்னும் திரைப்படத்திற்கு முதன்முதல் உரையாடல் எழுதினார். மிகக் குறைந்த அளவுக்கான பாடல்களையே அவர் எழுதியுள்ளார். சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அவரது இரண்டு பாடல்கள், ‘அமுதும் தேனும் எதற்கு, நீ

அருகினில் இருக்கையிலே எனக்கு', மற்றும் 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா' ஆகியவை. 100 இற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார்.

**எழுத்துப்பணி.....**

சுரதாவின் முதல் நூல் சாவின் முத்தம். இதனை வி.ஆர்.எம்.செட்டியார் என்பவர் 1946 மார்ச்சு மாதம் வெளியிட்டார். 1956 இல் பட்டத்தரசி என்ற சிறு காவிய நூலை வெளியிட்டார். 1954 இல் கலைஞர் கருணாநிதியின் முரசொலி இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார்.

1955 இல் காவியம் என்ற வார இதழைத் தொடங்கினார். இவ்விதழைத் தொடர்ந்து இலக்கியம் (1958), ஊர்வலம் (1963), விண்மீன் (1964), சுரதா (1988) எனக் கவிதை வளர்ச்சிக்குப் பல இதழ்களை வெளியிட்டார்.

1971 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் இதழில் சுரதா திரைப்பட நடிகைகளின் அகவாழ்க்கையைப் பற்றி எழுதிய கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. பின்னாளில் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டு சுவரும் சுண்ணாம்பும் என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது (1974).

"ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உடையப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ" என்பவை பாரதிதாசனின் புகழ்பெற்ற வரிகளைக் கேட்ட இராசகோபாலன் அவர் மீது கொண்ட பற்றின் காரணமாக 'சுப்புரத்தினதாசன்' ஆனார்

பாரதிதாசனின் தலை மாணாக்கராகக் கருதத் தகும் கவிஞர் சுரதா, பல நூல்களாக இருந்த பாவேந்தர் கவிதைகளை ஒரே தொகுப்பாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுத் திருவாசகன், கல்லாடன் பெயரில் அந்த நூல் வெளிவரக் காரணமானார். உலகின் அரிய செய்திகளைப் பட்டியலிட்டுக் காட்டும் சுரதா இல்லத்தில் அரிய நூல்கள் கொண்ட நூலகத்தை உருவாக்கினார்.

தமிழ், கவிதை, புகழ் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட புரவலர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை இணைத்துச் சில வினோதக் கவியரங்கங்களை நடத்துபவராக இருந்தார் சுரதா. படகுக் கவியரங்கம், கப்பல் கவியரங்கம், விமானக் கவியரங்கம் முதலியவை அவை. கவியரங்குகளைக் கொண்டாட்ட நிகழ்வாக மாற்றியதில் அவருக்கு மிகுந்த பங்குண்டு.

பாவேந்தர் தலைமையில் இயங்கிய தமிழ்க்கவிஞர் பெருமன்றத்திற்கு 1966 இல் தலைவராகத் திகழ்ந்தார்.

சுரதா -இயற்பெயர் இராசகோபாலன் தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால்பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்னம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத் னதாசன் என்று மாற்றிக் கொண்டார். தன் மாற்றுப் பெயரின் சுருக்கமாக சுரதா என்னும் பெயரில் பல மரபுக் கவிதைத் தொகுப் புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துக் கூறுவர்.



## பாரதிதாசனுடன் தொடர்பு

1941 சனவரி 14 இல் பாவேந்தர் பாரதி தாசனை முதன்முதல் கண்டு பழகிய சுரதா அவருடன் சிலகாலம் தங்கியிருந்து அவரது கவிதைப் பணிக்குத் துணை நின்றுள்ளார். பாவேந்தர் பாடல்களைப் படியெடுத்தல், அச்சுப் பணிகளைக் கவனித்தல், பாவேந்தரின் நூல் வெளியீட்டிற்குத் துணை நிற்றல் எனப் பல நிலைகளில் பாவேந்தருடன் சுரதாவுக்குத் தொடர்பு இருந்துள்ளது

## பாரதிதாசனிடம் பணி

பாரதிதாசனின் இருப்பிடம், தமிழ், கவிதை, இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுடைய இளைஞர்களின் வேடந் தாங்கலாக விளங்கியது. புதிது புதிதாக இளைஞர்கள் வருவதும் தங்குவதும் போவதுமாக இருப்பார்கள். சுப்புரத்தின தாசனாகிய இராசகோபாலனும் பாரதி தாசனிடம் உதவியாளராகச் சேர்ந்து கொண்டார். இருபது ரூபாய் திங்களூதியம் பெற்றுக்கொண்டு பாவேந்தரிடம் இரண் டாண்டுகள் பணியாற்றினார்.

பெரும்பாலும் கவிஞர்கள் பிறரைப் பின்பற்றி எழுதும் வழக்கமுடையவர்கள். அதை சுரதா விரும்பாதவர். தனக்கு அதில் உடன்பாடில்லை, 'அந்த நிழல் வழி வாசலை' விட்டு நீங்கி எழுதும் கவிஞன் நான். இவரையோ, அவரையோ பின்பற்றி எழுதப் பிரியப்படாதவன்" என்று மார்தட்டிக் கொள்வதில் தவறில்லை என்பதை நிரூபித்தவர்.

அரசியலில் பெரியாரையும், கவிதையில் பாரதிதாசனையுமே சுரதா வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டார். ஆனாலும், தனது எழுத்தியக்கத்தில் உள்ளடக்கம், வடிவம் என எதிலும் அந்தத் தாக்கம் வந்துவிடாதவாறு கவனமாகவும் இருந்தார்.

சுரதாவின் முதலாவது கவிதைத் தொகுப்பிற்கு 'சாவின் முத்தம்' என்று பெயரிட்டார். முதல் தொகுப்பிற்கே இப்படிப் பெயர் வைக்கலாமா என்று நண்பர்கள் வினவியுள்ளனர். இளமையிலேயே பகுத்தறிவுக் கொள்கைப் பற்றாளர் என்பதால் அது குறித்து அஞ்சியதேயில்லை. ''கவிதை என்பது வரப்பிரசாதமில்லை. கற்றுக் கொண்டு உழைத்தால் வருவது" என்பதில் உறுதியான கருத்துடையவர். தம்மை 'மொழிப்பற்றாளர்' என்று கூறுவதையும் அவர் ஏற்கவில்லை.

"இது மொழிப்பொறுப்பு. பற்று வைத்தல் இன்னொன்றைச் சிறப்பாகக் கண்டவுடன் மாறிவிடக்கூடியது" என்றார்.

## சொந்தப் பதிப்பகம்

தனது பெயரிலேயே பதிப்பகம் ஒன்றையும் தொடங்கி நடத்தினார் சுரதா. 'அமுதும் தேனும்', 'தேன்மழை' உள்ளிட்ட அவரது கவிதைத் தொகுப்புகள் மட்டுமின்றி, முக்கியமான சொற்பொழிவுகளையும் மேற்கோள்களையும் தொகுத்து வெளியிட்டார்.

'வெட்டவெளிச்சம்' என்ற தலைப்பில் அவர் தொகுத்து வெளியிட்ட தகவல்கள், முகிலின் 'அகம் புறம் அந்தப்புரம்' புத்தகத்துக் கெல்லாம் முன்னோடி முயற்சி. தமிழ்ச் சொல்லாக்கம் குறித்த அவரது குறிப்புகளின் தொகுப்பு அகராதியியலாளர்களுக்கும் மொழியியலாளர்களுக்கும் நல்லதொரு ஆவணம். அவர் தொகுத்து வெளியிட்ட குறிப்புகளின் வழியே, அவருடைய பல்துறை ஆர்வத்தையும் பரந்துபட்ட வாசிப்பையும் புரிந்துகொள்ள முடியும்

## பாவேந்தரும் தமிழும்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

எனும் முழக்கம், தமிழக மேடைகளிலும், தமிழ் உணர்வு கொண்ட ஏடுகளிலும், தமிழர்களிடையேயும் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஓர் எழுச்சிக்குரல்; தமிழ் உணர்ச்சியின் வெளிப்பாடு. இந்த உணர்ச்சியின் பிறப்பிடம் பாவேந்தர் பாரதிதாசனின் உள்ளம். பாரதிதாசனின் இந்த உள்ள உணர்ச்சியை அவரது பாடல்களில் பெரும் அளவில் பார்க்கலாம்.

தமிழ் மீதுகொண்ட பற்றால், அதைத் தன் உயிரினும் மேலாக நேசித்தமையால், தமிழை என் உயிரே என்று அழைத்து மகிழ்ந்தார். அதன் இனிமையின் சிறப்பினையும் பல பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். விருப்பத்துக்குரிய பொருளை, தேன், பால், என்றும் கண், உயிர் என்றும் கூறும் மரபைக் கவிஞர்களிடம் காணலாம். அடியார் பலர் இறைவனை இவ்வாறு பாடியுள்ளனர். பாரதிதாசன் தமிழ் மொழியைத் தேன், பால், கண், உயிர் என்று கருதிப் பாடியுள்ளார். மொழியை இவ்வாறு வருணித்துப் பாடும் மரபும் புதியது. இம்மரபுக்கு முன்னோடியாய்த் திகழ்ந்தவர் பாரதிதாசன்.

**தமிழ் உயிர் போன்றது**

தமிழ் மொழி மீது பாரதிதாசனுக்கு அளவு கடந்த பற்று உண்டு. இதனை அவரது பாடல்களில் பரவலாகக் காணலாம். வாய்ப்புக் கிடைக்கும் இடங்களிலெல்லாம், அவர் தமது தமிழ்ப் பற்றை வெளியிடுவார். தமிழைத் தன் உயிரினும் மேலாக மதித்தார், போற்றினார். எனவே,

**செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே !**
**செயலினை மூச்சினை உனக்களித்தேன்**

என்று பறை சாற்றுகின்றார். இனிய தேன்போன்ற தமிழ்மொழிக்குத் தன் வாழ்வையே, வாழ்க்கையின் செயல்பாடுகள் முழுவதையுமே அர்ப்பணித்தார். எனவே தான், 'செயலினை மூச்சினை உனக்களித்தேன்' என்று கூறுகிறார்.

**தமிழெனும் அமிழ்தம்**

பொதுவாக, அமிழ்தம் (அமுதம்) என்றால் உணவு என்று பொருள். வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவிற்கும் அமிழ்தம் என்று பெயர். அது மிகவும் சுவை உடையது என்றும், அதை உண்பதினால் தான், தேவர்கள் சாகா வரத்துடன் வாழ்கிறார்கள் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. நல்ல சுவையான உணவை உண்ணும் போதுகூட, ல்ஆகா! என்ன சுவை! என்ன சுவை! 'அமிழ்தம்' போன்றல்லவா இருக்கிறதுஊ என, தேவர்கள் உண்ணும் உணவை மனத்திற்கொண்டு, கூறுகிற மரபு உண்டு. பாரதிதாசனுக்கோ தமிழே அமிழ்தமாகின்றது. எனவே

**தமிழுக்கும் அமுதென்று பேர் ! – அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**

என்று பாடுகிறார். பாரதிதாசன் இன்றும் நம்மிடையே உயிர்ப்புடன் உலவவும், நம் உணர்வினைத் தூண்டவும் அவர் படைப்புகள் தானே காரணம்! எனவே தமிழை அமிழ்தம் என்றும் உயிர் என்றும் சொன்ன சொற்கள் மிகை அல்லவே!

**' தமிழெனும் உயிர்**

இயற்கையில் பல்வேறு வகையான சுவைகள் இருக்கின்றன. நன்கு பழுத்த பழத்தின் சுளையில் இனிமை இருக்கிறது. கரும்புச் சாற்றிலும் இனிமை உண்டு. தேனிலும் இனிமை உண்டு. காய்ச்சிய வெல்லப் பாகிலும் இனிமை இருக்கிறது. பசுவின் பாலிலும் இனிமை இருக்கிறது. தென்னையின் இளநீரிலும் இனிமை இருக்கிறது. அவ்வாறு ஆயின் தமிழில் என்ன இருக்கிறது? இதோ பாரதிதாசன் கூறுவதைக் கவனியுங்கள்:

**காட்சி**

**கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்,**
**பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்,**
**நனிபசு பொழியும் பாலும் – தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்,**
**இனியன என்பேன் எனினும் – தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர் !**

*( பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி 19 )*

*(கழை = கரும்பு)*

என்ன நண்பர்களே! 'எனினும்', 'இருந்தாலும்' என்று பாரதிதாசன் கூறுவதின் பொருள் என்ன? தமிழில் இனிமையைக் காண்கிறேன் என்று சொல்ல அவர் தயங்குகிறாரா? சற்று எண்ணிப் பாருங்கள். 'இனிப்புடையதாயிருத்தல்'. 'உயிர்ப்பு உடையதாயிருத்தல்' - இவற்றுள்

எது மிகுதியும் விரும்பத்தக்கது? உயிர் இல்லையேல் சுவைப்போருக்கு இனிப்பு ஏது, நுகர்ச்சி ஏது? கனி, கரும்பு, தேன், பாகு, பால், இளநீர் - அனைத்தின் சுவையும் உயிர் என்ற ஒன்று இருந்தால் தானே நுகரமுடியும். தமிழ் மொழியின்பால் கவிஞர் கொண்ட ஆழ்ந்த பற்று இதில் தெரிகிறதல்லவா!

வடலூர் இராமலிங்க வள்ளலார் 'தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாய்க் கூட்டி சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் பருப்பும் தேனும் கலந்த கலவையை விடச் சுவையானவன் இறைவன்' என்றார். பாரதி தாசனுக்கு அந்த உணர்வை, இனிமையைத் தமிழ் தந்திருக்கிறது.

'சோலையினுள் மலர்களின் தேன் அருந்தவரும் வண்டின் ஒலியையும், புல்லாங்குழல் ஒலியையும், வீணையின் இசையையும், குழந்தைகளின் மழலைப் பேச்சினையும் கேட்டு மகிழ்ந்து, அவற்றோடு மெய்மறந்து ஒன்றி இருக்கிறேன். ஆனால் அவற்றிடமிருந்து என்னை நான் விடுவித்துக் கொள்ள இயலும். தமிழை விட்டு என்னால் பிரிய முடியாது. ஏன் என்றால், தமிழும் நானும் உடலும் உயிரும் போன்றவர்கள், இதனைத், தமிழும் நானும் மெய்யாய் உடல் உயிர்கண்டீர் என்று குறிப்பிடுகிறார். மேலும், தமிழ் மொழி தமிழ்மக்களின் உயிராக இருப்பதால், உலகிலுள்ள அனைத்தையும் வெல்லும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்று பறைசாற்றுகின்றார்.

**தமிழ் எங்கள் உயிர் என்பதாலே – வெல்லும்**
**தரமுண்டு தமிழருக்குப் புவிமேலே**

ஒவ்வொரு மனிதனும், தன் உயிரைப் பேணிப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும், மேம்பாடு அடையச் செய்வதற்கும், எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வான். அதைப்போல நம் உயிர் போன்ற தமிழைப் பாதுகாப்பதற்கும் வளர்ச்சியடையச் செய்வதற்கும் நாம் எல்லாவித முயற்சி களையும் தியாகங்களையும் செய்வதற்குத் தயார் ஆக வேண்டும் என்று கூறுகிறார் பாரதிதாசன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஒவ்வொரு வகையான இன்பம் கிடைக்கும். சிலருக்குப் பொருள் ஈட்டுதல் இன்பம் தரும். ஒரு சிலருக்கு அவர்கள் வகிக்கும் பதவி இன்பம் நல்கும். புகழ் இன்பம் வழங்கும். ஆனால் பாரதிதாசனுக்கு எது இன்பம் தருகிறது தெரியுமா? தாய்மொழியாம் தமிழ் இன்பம் தருகிறது. தமிழ் தரும் இன்பத்தைத் தம் பாடல்களின் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்.

தமிழுக்கு இன்னொரு பெயர் உண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? என்று வினவும் பாரதிதாசன்,

**இன்பம் எனப்படுதல் – தமிழ்**
**இன்பம் எனத் தமிழ்நாட்டினர் எண்ணுக.**

என்று குறிப்பிடுகிறார். எனவே, தமிழுக்கு இன்பம் என்று இன்னொரு பெயருண்டு. தமிழ் நாட்டினரே அதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

தமிழ் என்ற உடனே, இன்பம் தானாக வந்து கிட்ட வேண்டும். அந்த இன்பத்தை நீங்கள் நுகர வேண்டும் என்று

இயற்கையில் அமைந்துள்ள பல பொருள்களை நாம் நுகரும் போது அவை நமக்கு இன்பம் தருகின்றன. அவற்றை மனத்தில் நினைத்த உடனே, இன்ப உணர்வு ஏற்படும். அதைப்போல் தமிழைப் பற்றி நினைத்த உடனேயே இன்ப உணர்வு வரும்.

தமிழ் இன்பம் தருவதால், அது அமுதம் போன்றது என்று குறிப்பிடுகிறார். அமுதத்தை உண்ணும் போது கிடைக்கும் மகிழ்ச்சி, அல்லது இன்பம், தமிழைப் படிக்கும் போது கிடைக்கும். எனவே,

**இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு**
**இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது !**

என்று இனிமையின் எல்லை எனக் கருதப்படும் அமுதத்தையே தமிழ் இன்பத்திற்கு இணையாகக் கூறுகிறார் பாரதிதாசன்.

**கவிமணி இரஜகை நிலவன்**

**தமிழின் இனிமை**

# ஓர் ஊடலின் போது

நீ இலையுதிர்காலத்தின்
வனத்தை கண்டு விசனப்படுகிறாய்.
நானோ வசந்த காலம் வரை
காத்திருக்க சொல்கிறேன்.

நீ உன் விழிகளை மூடிக்கொண்டு
அறிதுயில் சென்று
விடிந்தாய் சோம்பல்முறிக்கிறாய்.
நானோ விடியும்வரை
பொறுத்திரு என்கிறேன்.

நீ கனவின் கடைசிதுளியை
ருசிப்பார்க்க ஆசைப்படுகிறாய்.
நான் அகரத்தையே
இப்போது தான் தாண்டுகிறேன்.

அவரவர் மனதிற்கேற்ப
அவரவர் தராசி இயந்திரம்.

காலம் நம் கையில்
ஐம்பது ரூபாய் நோட்டை
தந்திருக்கிறது.
அதை பத்திரபடுத்துவதும்
கிழித்தெறிவதும் நம் விருப்பமே.

# காதலும் ‘டலும்

ஒவ்வொரு ஊடலின் போதும்
காதல் தொட்டாற்சிணுங்கியைப் போல்
சுருங்கிறது
ஒவ்வொரு ஊடலுக்கு பிறகும்
காதல் ஆக்டோபஸைப் போல
மறுஉருவம் எடுக்கிறது.

**மனோஜ் டேவிட்நாதன்**





# யாரைக் குறைக்கலாம்?

எல்லா திசைகளிலும் குறைக்கிறது நாய்கள்
நான் எந்த திசை நோக்கி ஓட
மனித நேயம் தொலைத்து
மிருக நேசத்தில் மிதக்கும் மனிதனே
தெரு நாய் கடித்ததுண்டா

நீ
உன் மனைவி
மகன் மகள்
பேருந்து இல்லாத ஊருக்குள்
நள்ளிரவில் நடந்து போகையில்
நான்கு நாய்கள் துரத்தியது உண்டா?
கால் கீழ் வைக்காமல்
காருக்குள் போகும் திமிரு
உன் பேச்சில் தெரிகிறது
வீட்டுக்குள் இருந்தால் வளர்ப்பு நாய்
தெருவில் திரிந்தால் தெரு நாய்
துரத்தி கடித்தால் வெறி நாய்
நோய்வாய்ப்பட்டால் சொறி நாய்
ஆக மொத்தத்தில் அது நாய்தான்
அது நாய் தான் என நாய்க்கு தெரியாது
உனக்குமா தெரியாது

இந்த நாய்கள்
மாவட்ட ஆட்சித் தலைவரின்
மகளையோ
எம் எல் ஏ வின் மகனையோ
நீதிபதியின் மனைவியையோ
கடிக்காத வரை
நாய்கள் சுதந்திரமாக செல்லலாம்
நாய்களுக்கு நன்றாகவே தெரியும்
யாரைக் குறைக்கலாம்
யாரைக் கடிக்கலாம்.

**ஆயுதா கவி அன்பு மதி**

# மெய்யப்பன்

**முனைவர் நா. அமுதா தேவி**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்**
**இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி**
**கோவை**

அதிகாலைப் பயணம் மிகவும் இனிமையாகத் தான் இருக்கிறது. அமைதியான சாலையும் குருவிகளின் சத்தமும் மிகவும் இனிமையாக இருக்கிறது என்று சில்லென்று முகத்தை வருடிய காற்றில் பறக்கும் தன் கூந்தலை சீர் செய்தபடி வேகமாக நடக்கத் துவங்கினான் மெய்யப்பன். மெய்யப்பன் ஆறு முப்பது மணிக்கு கொண்டலாம்பட்டி பஸ் வந்து விடும். அதைப் பிடித்தால்தான் நகரத்தில் உள்ள கல்லூரிக்கு எட்டு மணிக்கு முன் சென்று சேர முடியும். நடந்து வருகின்ற பொழுது கீரை கட்டினை எடுத்து வந்த எத்திராஜ் அண்ணா தம்பி வாடா உன்னைப் பேருந்து நிலையத்தில் விட்டுவிடுகிறேன் என்றார். ஒருவழியாக அவர் உதவியுடன் உரிய நேரத்திற்கு முன்பாக பேருந்து நிறுத்தம் அடைந்தான். இல்லையென்றால் மூச்சு இரைக்க ஓடி வந்து பேருந்தைப் பிடிக்க வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு எத்திராஜ் அண்ணாவுக்கு நன்றி சொல்லிவிட்டு பேருந்து நிலையத்தில் நின்றான்.

பனிக்கூட்டம் மேகக் கூட்டத்தோடு போருக்குச் செல்வது போல இருந்தது காலை நேரம். இயற்கையை ரசித்தபடி பேருந்தின் வருகைக்காகக் காத்துக் கொண்டு



நின்றிருந்தான். ஒரு வழியாக ஆடி அசைந்த படி எஸ்2 பேருந்து வந்தது. உன்னை சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா... என்ற டி.எம்.எஸ் குரலில் பாடல் ஒலிக்கப் பேருந்து நிறுத்தத்தில் வந்து நின்றது. காலை நேரம் என்பதால் பயணிகளின் கூட்ட நெரிசல் இல்லாமல் பேருந்தின் படிக்கட்டுகளின் வழியாக நிதானமாக ஏறி ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கொண்டு வேடிக்கை பார்க்கத் துவங்கினான் .

சிறிது நேரம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தன் புத்தகப் பையில் இருந்த புத்தகக் குறிப்பினை எடுத்து படித்துக் கொண்டு வந்தான். மணி 7:30 நெருங்க நெருங்க கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக வரத் துவங்கியது. தான் படித்த பாடக் குறிப்புகள் தன் நினைவில் உள்ளதா என்று தன்னைத்தானே சுய சோதனை செய்து கொண்டு தன் நிறுத்தம் வருவதற்காக காத்துக் கொண்டிருந்தான். தன்னைப் போல அக்கல்லூரியில் படிக்கும் சக மாணவர்கள் பலர் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பேருந்தில் ஏறியபடி இருந்தார்கள் .

அரசு கல்லூரி நிறுத்தம் வரப்போகுது இறங்குங்க... பயணச்சீட்டு கையில வச்சுக் கோங்க பாஸ் வச்சிருந்தா கையெழுத்து வாங்கிக்கோங்க என்று நடத்துனர் தன்னுடைய பணியை தொடர்ந்த படியே நகர்ந்தார். ஒரு வழியாகக் கல்லூரியின் அருகில் பேருந்து நின்றது. ஒரு சில மாணவர்கள் இறங்கி நேராக கல்லூரிக்குள் சென்றனர். சிலர் அருகில் இருந்த தேநீர் கடை நோக்கி செல்லத் துவங்கினர்.

மெய்யப்பன் நடந்து தனது துறையை நோக்கி சென்றான். தனது வகுப்பின் சாவி சுவரில் மாட்டி இருந்தது. அதனை எடுத்துக்கொண்டு தனது வகுப்பில் முதல் மாணவனாகத் தன்னுடைய வகுப்பிற்குச் சென்றான். வழக்கம்போல மின்விளக்குகளை ஒளிரவிட்டான். ஜன்னல்களை எல்லாம் திறந்து விட்டான். கரும்பலகையில் இன்றைய தின சிந்தனைக்கான கருத்தினை எழுதத் துவங்கினான். அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம் என்ற அண்ணாவின் கருத்துரையை கரும்பலகையில் எழுதி வைத்தான். அன்றைய தேதியையும் கரும் பலகையில் குறித்து வைத்தான். எப்பொழுதும் வகுப்பில் முதல் மாணவனாக வரும் மெய்யப்பனை பல நாட்கள் கவனித்து வந்த பேராசிரியர் சுந்தரம் அவனிடம் ஒருநாள் எப்படியாவது பேசிவிட வேண்டும் என்று எண்ணியபடி அவன் வகுப்பினை கடந்து சென்றார். மெய்யப்பன் எல்லா ஆசிரியர்களிடமும் கனிவும் மரியாதையும் காட்டுவான். எனவே அனைத்து ஆசிரியருக்கும் அவனைப் பிடிக்கும்.

படிப்பிலும் நிர்வாகத் திறனிலும் அவன் கெட்டிக்காரனாக விளங்கினான். சுந்தரம் ஒரு முறை மெய்யப்பனிடம் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மெய்யப்பனின் தாய், தந்தை இருவரும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எனவும் அவனுக்கு ஒரு சகோதரி இருக்கிறார் எனவும் கூறினார். தினமும் காலை அம்மா மூன்று மணிக்கு கண்விழித்து எங்களுக்கான சமையல் செய்து தருவார். பின்பு அம்மாவும் அப்பாவும் வயல் வேலைக்கு போய்விடுவார்கள் அதிகாலையே நானும் என் சகோதரியும் காலை உணவை அருந்திவிட்டு பேருந்து பிடித்து அவரவர் கல்லூரிக்குச் சென்று விடுவோம். மதியம் வகுப்பு முடிந்ததும் மீண்டும் வீடு செல்ல மாலை 6 மணி ஆகும் என்று கூறினார்.


மதியநேர உணவிற்கும் சேர்த்து அம்மா எங்களுக்கு காலையில் மதிய உணவை டிபன் பாக்ஸில் கொடுப்பார் என்று தன்னுடைய டிபன் பாக்ஸையும் காட்டினான். தனது ஓய்வு நேரத்திலும் விடுமுறைக் காலத்திலும் தனது அம்மா அப்பாவிற்கு உறுதுணையாக

வயல் வேலைகளைச் செய்வதாகவும் தன் நிலையை விளக்கினான். இப்படி அதிகாலையில் எழுந்து இங்கு கல்லூரி வர உனக்கு சிரமமாக இல்லையா என்று அவனிடம் கேட்டார் கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்படி தினமும் அதிகாலையில் வந்து பழகி விட்டது இது கல்லூரியின் மூன்றாம் வருடம் கல்வி முக்கியம் சார். படிச்சா நல்ல நிலைமைக்கு வந்துட்டா இப்ப படுற கஷ்டம் எல்லாம் பறந்து போகும். கல்வி ஒன்று தான் ஏழைகளின் சொத்து என்று கல்வியின் முக்கியத்துவத்தை ஆசிரியருக்கு எடுத்துரைத்தான் .

மெய்யப்பன் இந்த டு கே கிட்ஸ் என்று சொல்லிக்கிட்டு அட்வைஸ் பண்ணா அவங்கள கிரிஞ்சு., பூமர் னு சொல்லிக்கிட்டு இருக்கிறவங்களுக்கு மத்தியில ரீல்ஸ் செல்போன் மோகம், செல்பி புகைப்படம் என்ற எந்த தாக்கமும் இல்லாமல் ஒரு மாணவனை இந்த காலத்தில் பார்ப்பது அரிதாக இருக்கிறது என்று அவனை என்னிப் பெருமை அடைந்தார் ஆசிரியர். அதுமட்டுமல்லாமல் பெற்றோர் படும் கஷ்டத்தையும் கல்வியின் அவசியத்தையும் ஒரு மாணவன் உணர்ந்து செயல்படும் அந்த விதம் மெய்யப்பன் மீது இன்னும் கூடுதலான மரியாதையை ஆசிரியருக்கு கொடுத்தது.

அவனை எண்ணி கண்ணில் நீர்ப் பெருக்கெடுத்து. வந்த நீர்ப் பெருக்கைக் கட்டுப்படுத்திக் கொண்டு நீ நிச்சயம் வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வருவாய் பல வெற்றிகள் பெறுவாய் நல்ல முன்னுதாரணமாகத் திகழ்வாய் என்று அவனை மனதார வாழ்த்தி தன் கண்களைத் துடைத்தபடி நகர்ந்தார். எங்கோ காற்றில் ஒலித்தது வெற்றி நிச்சயம்... இது வேத சத்தியம்... கொள்கை வெல்வதே... நான் கொண்ட லட்சியம்... என்ற பாடல். மனக்கண்ணில் மெய்யப்பன் வெற்றியாளராக வலம் வந்தான்.

# வல்லமை தாராயோ



முத்தமிழும் நான் கற்று
முடிசூட வேண்டும்
முழு உலகிற்கும் எம் தமிழே
ஆட்சி படியேற வேண்டும்

கத்தும் கடல் மொழியை நான்
கவியாக்க வேண்டும்
கடவுளும் எம் கவி கேட்டு
கைதட்ட வேண்டும்

இரத்தம் வற்றினாலும் தமிழ் வாசம்
சுவாசிக்க வேண்டும்
சித்தம் சிதைந்தாலும் செந்தமிழாய்
சிதறிட வேண்டும்

வேற்று கிரகத்திலும் தமிழ்
வேர் பிடிக்க வேண்டும்
விவசாயி மட்டுமே உலகில்
விருது பெற வேண்டும்

ஐம்பூதங்களாய் என் ஆற்றல்
அணிவகுக்க வேண்டும்
அத்தனை ஆற்றுலும் ஆதிசக்தியே
தமிழுக்கு
அடிமை செய்ய வேண்டும்

வேண்டுவன எல்லாம் பெற்றிடும்
வல்லமை தாராயோ
வேறாக எண்ணாமல் என்னுள்
வேராக வந்து சேராயோ....

**இராம.சு.சிவகுமரன்**
சென்னை

# சிறுவர்கள் சங்கமம்



## பொறாமைப்பட்ட புலி

எப்போதும் காட்டுக்கு ராஜாவாக சிங்கமே இருக்கிறதே! எப்படியாவது நாம் ராஜாவாக மாற வேண்டும் என்ற எண்ணம் ஒரு விலங்கின் மனதில் தோன்றியது. அது யார் என்று பார்க்கலாமா?

சோமகிரி என்ற ஊரில் ஒரு மிகப்பெரிய காடு இருந்தது. அது சாதாரண காடு கிடையாது. அது ஒரு அபூர்வமான காடு. ஆனால் இந்த விசயம் அந்த ஊர் மக்களுக்குத் தெரியாது. அவர்களின் முன்னோர்கள் அந்தக் காட்டுக்குச்செல்ல தடை விதித்து இருந்தார்கள். அதனால் அந்த ஊரில் வாழும் மக்களுக்கு அந்தக் காட்டைப் பற்றிய எந்த விவரமும் தெரியாது.

அந்த அபூர்வமானக் காட்டில் விலங்குகள் பேசுவது மட்டுமல்லாமல் மனிதர்களைப் போல நடந்து கொள்ளவும் செய்யும். எல்லா காட்டிலும் ஒரு மோசமான விலங்காகத் திரிவது நரியாகத்தான் இருக்கும். ஆனால் இந்த காட்டில் வில்லன் நரி அல்ல.

காட்டில் எங்கோ ஒரு இடத்தில் ஒரு குரல்! அது என்னவென்றால் எப்பவும் இந்த காட்டுக்கு ராஜாவாக இருப்பது சிங்கம்தானே. ஏன்? நான் ராஜாவாக இருக்க கூடாது... என அந்தக் குரல் மனதிற்குள் சிரித்துக் கொண்டே இருந்தது.

ஒருநாள் புலி மந்திரி, சிங்கத்திடம் ராஜா அவர்களே நீங்கள் உங்கள் பலத்தால் ராஜாவாக உள்ளீர்கள். இது பிடிக்காத பலரும், உங்கள் ஆட்சி பிடிக்காமல் அதைக் கலைக்க பலரும் சதி செய்து கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு போராட்டமாக மாற கூட வாய்ப்பு அதிகம்.

இதைக் கேட்ட சிங்கராஜா பதட்டத்துடன் "இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

அதற்கு புலி "வருத்தப்படாதீர்கள் ராஜா, ஒரு வழியுண்டு. நான்

கேள்விப்பட்டது என்னவென்றால் ஊரில் ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க தேர்தல் ஒன்று நடத்துவார்கள்".

"அப்படி என்றால் என்ன?" எனச் சிங்கம் கேட்டது.

இது நம் மக்கள் கடைப்பிடிக்கும் ஒரு முறை. இதில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போட்டி போடுவார்கள். அதில் மக்களுக்குப் பிடித்தவரை ஓட்டு போட்டு வெற்றி பெற வைப்பார்கள். அவரே நாட்டின் தலைவராக அறிவிக்கப்படுவார். அதைப்போல நாமும் தேர்தல் நடத்தலாம். போட்டி போடுபவர்கள் பெயர்களை ஒரு பெட்டியில் எழுதி வைப்போம். அதில் அவர்களுக்குப் பிடித்தவரை அவர்களே தேர்ந்தெடுக்கட்டும். அதில் அதிக ஓட்டு யாருக்கு விழுகிறதோ அவரையே தலைவராக நியமிக்கலாம்".

"அது சரி! இதற்கு நடுவராக யாரை நியமிக்கலாம்" என்று கேட்டது சிங்கம்

"நீ சொன்ன இந்த யோசனை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. கண்டிப்பாக தேர்தல் நடத்தலாம். அதற்கு நடுவராக நம் யானை ஐயாவை நியமிக்கலாம்".

"நீ காட்டில் உள்ள எல்லா விலங்குகளுக்கும் தெரியும் மாதிரி இந்த விசயத்தைத் தண்டோரா போட்டுச் சொல்லி விட்டு வா"

ராஜா சொன்ன மாதிரி செய்தது மந்திரி புலி, தேர்தலுக்கு6 போட்டி போட நிறைய விலங்குகள் வந்தன. அதில் சிங்கம், கரடி, புலி, குரங்கு, குதிரை முக்கிய பங்கு வகித்தன. தேர்தலுக்குக்கான நாளும் வந்தது. போட்டியிடும் இடத்தில் அனைத்து விலங்குகளும் கூடின. போட்டியிடும்



நபர்கள் பெயர் எழுதிய பெட்டி அங்கே வைக்கப்பட்டது. யானை ஐயா சொன்னதும் எல்லாரும் ஓட்டுப் போட ஆரம்பித்தார்கள்.

எல்லா விலங்குகளும் ஓட்டுப் போட்டு முடித்ததும் யானை "தேர்தல் முடிவு நாளை அறிவிக்கப்படும். அதுவரை அனைவரும் பொறுமையாக காத்திருக்கவும்" என்று சொன்னதும் எல்லா விலங்குகளும் கலைந்து சென்றன.

ஆனால் அன்று இரவு என்ன நடந்தது தெரியுமா? அந்த வில்லன் விலங்கு அங்கே வந்தது. எல்லா பெட்டியையும் திறந்து பார்த்தது அதில் சிங்கத்திற்கு தான் அதிக ஓட்டுகள் விழுந்து இருந்தது. அதைப் பார்த்து கோவப்பட்ட வில்லன் விலங்கு சிங்கத்தின் பெட்டியில் ஒட்டி இருந்த பெயரை எடுத்து விட்டு தன் பெயரை ஓட்ட நினைத்தது.

அந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக பலத்த காற்று வீசியது. அதில் ஒட்டியிருந்த எல்லாப் பெயரும் பறந்து சென்று விட என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தது வில்லன் விலங்கு.

உடனே யோசித்து தான் கொண்டு வந்த பேப்பரில் பெயர் எழுதி, அதிக ஓட்டுகள் உள்ள பெட்டியில் தன் பெயரை எழுதி ஒட்டிவிட்டு அங்கு இருந்து கிளம்பியது.

அடுத்த நாள் யானை ஐயா வெற்றியாளரின் பெயரை அறிவிக்க மைக்கை எடுத்ததும் வில்லன் விலங்கு மிக குஷியானது. மைக்கை எடுத்த யானை ஐயா "நம் வெற்றியாளர் எலி" என்று சொன்னது.

எல்லா விலங்குகளும் அதிர்ச்சியாக ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டார்கள். போட்டியில் கலந்து கொள்ளாத எலி எப்படி வெற்றியாளர் ஆக முடியும்? என யோசித்தன.

அப்பொழுது யாரும் எதிர்பாராதவிதமாக ஒவென்று கூச்சலிட்டது ஒரு விலங்கு. எல்லோரும் சத்தம் வந்த திசையை பார்த்தனர். அங்கே எல்லோரும் திரும்பி பார்க்கும்பொழுது அங்கு புலி நின்று கொண்டு இருந்தது. "நான் தான் வெற்றியாளர்... எலி இல்லை" என்றது.

"அது உனக்கு எப்படி தெரியும்?"

" நான் தான் எல்லாத்துக்கும் காரணம்"

'அது எப்படி சொல்லு" என்றது சிங்கம்.

"நான் பண்ணது தப்புதான். சிங்கமான உங்களுத்தான் அதிக ஓட்டு விழுந்து இருந்தது. அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் பெயரை மாற்றி எழுதி ஒட்டினேன்"

"காண்டாமிருகங்களே இவனைப் பிடியுங்கள்" என்றது சிங்க ராஜா.

"ஆனால் எனக்கு ஒரு கேள்வி? யானை ஐயா வெற்றியாளர் எலி" என்று தானே கூறினார்கள்.

"ஆம் ராஜா, எனக்குத் தமிழில் எழுத்துப்பிழை அதிகம் வரும். அதில் தான் நானே வந்து மாட்டிக்கொண்டேன். அதனால் புலி என்று எழுதுவற்கு பதில் எலி என்று எழுதி விட்டேன்" என்று சொன்னதும் காடே அதிரும்படி அனைத்து விலங்குகளும் விழுந்து விழுந்து சிரித்தன.

**செ. ப.கமல்சங்கர்**

சென்னை

# அப்பா

அம்மா கருவில் சுமந்த என்னை தோளில்
சுமந்தவர் நீ
என் முதல் நண்பன் நீ
என் முதல் நாயகன் நீ
என் முதல் ஆசிரியர் நீ'





**தி. செ. திருநிலா**
காஞ்சிபுரம் மாவட்டம்.



**தி.செ. திருமுகலன்**
வகுப்பு - *VI* ஆ



**ஜீ.தேஜேஷ்**











**ஜீ. நறுமுகை**

# செவ்வாழை மரத்தின் பயன்பாடுகள்

ஜி.மைத்ரேயி

நமது ஊர்களில் ஒவ்வொரு வீட்டு விழாக்களிலும் கட்டாயமாக வீட்டின் வெளியே வாழைமரம் கட்டப்பட்டிருக்கும். வாழை மரத்திற்கு விதைகள் கிடையாது கன்றுகள் வேரிலிருந்து பக்கவாட்டில் முளைத்து விடும்.



வாழை மரத்தின் தண்டு, இலைகள், காய்கள், பழங்கள் போன்றவை பயன்படும். வாழை மரத்தில் பழங்கள் பல வகை உண்டு. வாழைத்தண்டு தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சிறுநீரகப் பிரச்சனை தீர்ந்துவிடும்.

வாழை மரத்தில் பழவகையான பழங்கள் செவ்வாழை, பச்சை வாழை, பூவன் வாழை என இன்னும் பல வகையான வாழையுண்டு அவற்றில் இப்போது செவ்வாழையைப் பற்றி பார்ப்போம்.

செவ்வாழை பழத்தில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. தொடர்ந்து செவ்வாழை சாப்பிட்டு வந்தால் கண்களுக்கு நல்லது. செவ்வாழையின் தாயகம் அமெரிக்க நாடான கோஷ்டிக்கா மற்றும் கியூபா என கூறப்படுகிறது.

அதிக அளவில் பீட்டா கரோட்டின் கண் நோய்களை குணமாக்கும். செவ்வாழை உயர்ந்த தர பொட்டாசியம் உள்ளது. சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதை தடுக்கிறது. வைட்டமின் சி அதிகமாக உள்ளது. 50 சதவிகிதத்திற்கு மேல் நார்சத்தை காணப் படுகிறது.



மாலைக் கண் நோயால் பாதி க்கப் பட்டவர்கள் இரவு செவ்வாலையை கட்டாயமாக சாப்பிட வேண்டும். கண்மணி பல்லசைவு போன்ற பல வகையான பல வியாதிகளை செவ்வாழை குணமாக்கும். பல் தொடர்பு உடைய நோய்கள் தொடர்ந்து செவ்வாழை சாப்பிட்டால் குணமாகும் ஆடிய கல் கூட கெட்டிப் படும்.

இவ்வாறு தொடர்ந்து செய்வோரை பற்றி கூறிக்கொண்டே சொல்லலாம் இது போலவே ஒவ்வொரு வாழை மரத்திற்கும் தனி பலன் உண்டு..

# தாலாட்டுப் பாடல்



தங்கமடி நீ எனக்கு
வைரமடி நீ எனக்கு

என் கண்மணியே
கண்ணுறங்கு கண்ணம்மா...
என் பொன்மணியே
கண்ணுறங்கு கண்ணம்மா...

தாயுமடி நான் உனக்கு
ஆரிராரோ நான் பாட
தொட்டிலிலே நீ உறங்கு கண்ணம்மா

என் கண்மணியே
கண்ணுறங்கு கண்ணம்மா...
என் பொன்மணியே
கண்ணுறங்கு கண்ணம்மா...

தந்தை அவர் வந்திடுவார்
வாஞ்சையுடன் உன்னை நோக்கிட
துயிலெழுந்து விளையாடு கண்ணம்மா
(என் கண்மணியே...)

தேவதையாய் நீ உறங்க
தாயும் அவள் உன்னை ரசிக்க
ஆசை முத்தம் இட்டிடுவேன்
கண்ணம்மா
(என் கண்மணியே...)

பள்ளிக்கூடம் போகையில
நல்லாத்தான் படிச்சிடணும்
படிப்பு மட்டுமில்லாம
ஆடிப்பாடி ஒடணும்
திறமையாவும் இருக்கணும் கண்ணம்மா
(என் கண்மணியே...)

பெரியவங்கள பார்க்கையில
பண்பாத்தான் நடந்திடணும்
சிறியவங்கள பார்க்கையில நட்போடு
இருந்துக்கணும்
அன்பத்தான் காட்டிடணும் கண்ணம்மா
(என் கண்மணியே...)
அழகு மட்டும் இல்லாம
அறிவாவும் இருக்கணும்
பரிசுகளும் பட்டங்களும்
பல நூறு வாங்கணும் கண்ணம்மா

(என் கண்மணியே...)
பயமேதும் இல்லாம
துணிவோடு வாழணும்
வீரமங்கை போலவே
நீ வாழ வேணுமடி கண்ணம்மா

(என் கண்மணியே...)

என்ன வந்த போதிலும்
எதுவான போதிலும்
நானிருக்கேன் உன்னோடு
நிம்மதியாய் நீ உறங்கு கண்ணம்மா
(என் கண்மணியே...)

*பி. ஹேமா – முசிறி*



# கேட்காமலேயே உதவு



ஒரு ஊருல பாப்பா இருந்தாளாம். அந்தப் பாப்பாவை ஒண்ணாவது சேர்க்கறதுக்காக, அவங்க அப்பா அம்மா ஒரு பெரிய ஸ்கூலுக்கு, கூட்டிட்டுப் போனாங்களாம். அப்போ அந்த ஸ்கூல்ல நெறைய பொம்மையெல்லாம் இருந்துச்சாம், அதை விளையாடக் குடுக்கவும், அந்த ஸ்கூல் அந்தப் பாப்பாவுக்கு ரொம்ப பிடிச்சிடுச்சாம்.

"அப்பா! அப்பா! நான் இங்கேயே படிக்கறேன்னு" சொல்லிக் கேட்டாளாம்.

அப்புறம் அந்த புது ஸ்கூல்லயே பாப்பாவை சேர்த்து விட்டாங்களாம்.

கொஞ்ச நாள் கழிச்சு ஸ்கூல் திறந்ததும், முதல் நாள் ஸ்கூல் வேன்ல ஜாலியா ஸ்கூலுக்குப் போனாளாம். கதை சொல்லச் சொல்லி அவங்க மிஸ் கேட்டாங்களாம். அந்தப் பாப்பா சூப்பரா கதை சொன்னதுக்காக, அவளோட கையில் மிஸ் ஸ்டார் போட்டதை சந்தோசமா அம்மாக்கிட்ட வந்து காட்டுனாளாம்.

அப்புறம் பாடமெல்லாம் எடுக்க ஆரம்பிச்சு, பேக்ல நிறைய புக் குடுத்து விட்டாங்களாம். அந்த பாப்பா பேக் தூக்கிட்டு வேன்ல இருந்து இறங்கி நடக்கும் போது, பேக் வெயிட்டா இருந்ததுனாலா கஷ்டமா இருந்துச்சாம்.

அப்போ அதே வேன்ல பாப்பா கூட வர்ற எட்டாவது படிக்கிற அண்ணா வந்து, அவங்களாவே பாப்பாவோட பையை வாங்கி, நான் தூக்கிக்கறேன்னு கொண்டு வந்து பாப்பாவோட கிளாஸ்ல விட்டுட்டு போவாங்களாம். அந்தப் பாப்பா சிரிச்சுக்கிட்டே தேங்க்யூ சொன்னாளாம்.

ஸ்கூல் விட்டு வந்தப்புறம் பாப்பா வந்து அவங்கம்மாக்கிட்ட அழுது கிட்டே இருந்தாளாம். அன்னிக்கு மாதிரி பொம்மைலாம் குடுக்கவே மாட்டேங்குறாங்கன்னு. அப்புறமா ஸ்கூல்னா படிக்கிறதுக்கும், நாம நல்ல பண்புகளை கத்துக்குறதுக்கான இடம் பாப்பு, நாம வீட்ல பொம்மைகளை வச்சு விளையாடலாம்னு சொல்லி அம்மா பாப்பாவை சமாதானப்படுத்தினாங்களாம்.

அப்புறம் ஒரு நாள் பாப்பாவோட ப்ரெண்டு பென்சிலை தெரியாம கீழப் போட்டுட்டு தேடிக்கிட்டே இருந்தாளாம், ஆனா கெடைக்கவே இல்லையாம். அப்புறம் அந்தப் பாப்பா போய், நான் தேடி தரேன்னு கண்டுபிடிச்சு எடுத்துத் தந்தளாம்.

நீதி

ஒருத்தவங்க கஷ்டப்படும் பொழுது அவங்க கேட்காமலேயே நாம போய் உதவி செய்யணும். அந்த அண்ணா நான் கேட்காமலேயே எனக்கு உதவி செஞ்ச நல்ல பழக்கத்தை அண்ணாக்கிட்ட இருந்து நானும் செய்யணும்னு கத்துக்கிட்டேன்.

**பி. ரிதன்யா**
ஒன்றாம் வகுப்பு
முசிறி






# ஆராய்ச்சியாளர் சிவா

## -நூல் அறிமுகம்-

**இமயச் சிகரமாய்...**
**பாவலர் கல்லை மலராடியான்**
**தமிழ்நாடு அரசு விருதாளர்**

மண்ணுலகில் தம்மை விட தம் மக்கள் அறிவுடையாராய் இருத்தல் என்பது பெற்றோருக்கு இன்பந் தரும் என்பார் வள்ளுவர் பேராசான். அதனினும் இன்பம் பயக்கக் கூடியது ஒன்று உண்டு என்றால் பெயரனோ, பெயர்த்தியோ என்பார்கள். கொண்டாடி மகிழக்கூடியது தாத்தா பாட்டியின் மனங்கள்.

அந்த வகையில் பெயர்த்தி பிரவந்திகா அவர்கள் கதைகள் எழுதியுள்ளார், தொடர்ந்து எழுதுகிறார் என்பது இன்னும் இன்னும் மகிழ்ச்சியை அள்ளி அள்ளி அருவி போல வழங்கக் கூடியது என்பேன்.

இளைய வயதிலேயே படைப்பூக்கத்தை வளர்த்தல் என்பது பரவசமான ஒன்று. 'படைப்பதினால் என் பெயர் இறைவன்' என்பார் கவிஞர் கண்ணதாசன். படைப்பு என்பது புதுமை செய்தல். அந்தப் புதுமை யாரிடத்தும், எங்கிருந்தும் வரலாம். அத்தகைய சிறப்பின் சீர்மை பிரவந்திகாவிடம் வந்திருப்பது இயற்கை தந்த வரமே என்பேன்.

படிப்பது, விளையாடுவது, தன் வீட்டாரோடு சேர்ந்து ஏதேனும் வீட்டு வேலைகள் செய்வது என்பது இயல்பான ஒன்று. ஆனால் அதனோடு நான் கதை எழுதுவேன் என்ற சவாலோடு, இளைய வயதிலேயே இங்கு 'ஆராய்ச்சியாளர் சிவா' என்னும் சிறுகதை நூலையே தருகிறார் என்பதில் பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இந்த நூலிலே ஆறு சிறுகதைகள் இருக்கின்றன. ஆறும் அறுசுவை விருந்துதான். முதல் கதையில் யாரும் உழைத்துதான் வாழ வேண்டும், உண்ண வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் அற்புதமான கதை. விலங்காக இருந்தாலும், தன் நிலையில் தனது அடையாளத்தை விட்டு விடக்கூடாது என்னும் மிகச்சிறந்த கருத்தை வலியுறுத்துதல் பாராட்டத்தக்கது.

அடுத்து செல்போன் ஏற்படுத்தும் தீங்கை மிக அழகாக பேசுகிறது 'விவான்' கதை.

பூமி, நட்சத்திரங்கள், வானியல் போன்றவைகளை அறிந்து கொள்ளத் துடிக்கும் சிறுவனின் எதிர்கால ஆசையைப் பற்றிப் பேசுகிறது அடுத்த கதை.

இயற்கையின் மீது ஆர்வம். பறவைகள், விலங்குகள் மீதும் ஆர்வம் உண்டாக்கும் கதையும் மனதை ஈர்க்கிறது. காரணம் சுற்றுச்சூழல் எத்தனை அவசியமானது, நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியது என்பதை இந்த கதைகளின் ஊடே சிறப்பாக பதிவு செய்து இருக்கிறார் பிரவந்திகா.

' மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்' நமது வாழ்க்கைக்கு எத்தனை அவசியமானது என்பதைக் கூறும் அழகான முத்து முத்தான வார்த்தைகளால், சொற்சரங்களால் சொக்க வைத்துள்ளார்.

இவரின் இந்த ஆர்வம், எதிர்கால சமுதாயத்தில் இலக்கிய உலகில் ஓர் அற்புதமான இடத்தைப் பிடிப்பார் என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இந்தக் கதை சொல்லும் பாங்கு, கற்பனைத் திறன் மேன்மேலும் வளர்ந்து இமயச் சிகரமாய் ஏற்றம் காண வாழ்த்துகிறேன்.



# கவிதைகள்

## ஆமோதித்தல்
****************

நான் பேசுகிற
வார்த்தைகளை
அவளது காதுகள்
கேட்டுக் கொண்டதற்கு
ஜிமிக்கிகளை
ஆட வைத்து
ஆமோதிக்கிறது.

## தோள்
*********

உயிரோடு
இருக்கும் பொழுதே
அடி வாங்கிக்
கண்டு கொள்ளாததால்
மாட்டின் தோளை
அது இறந்த பிறகு
தப்பில் கட்டி
அடிக்கிறார்கள்.

## வார்த்தைகள்
****************

இவ்வளவு ரூபாய்
லஞ்சம் கொடு
என்கிற வார்த்தைகளை விட
அம்மா பிச்சை
போடுங்கம்மா
என்கிற வார்த்தைகள்
எவ்வளவோ மேலானது.

## அடியின் உதவி
******************

அதிகாலைத் தூக்கத்தை
கெடுக்கிற
டைம் பீஸின்
தலையில் ஒரு
அடி வைத்தேன்
அமைதியாகிவிட்டது .

## கைச் சிறகுகள்
******************

மனிதர்களுக்கும்
பறக்கும் சக்தி
இருந்திருந்தால்
கைகள் இரண்டிற்கும்
பெயர்
சிறகுகள்.

**கவிஞர் எம்.சோலை**
அம்பத்தூர்.







# உங்களை நீங்களே மீட்டெடுங்கள்

# கவலை

கவலை இல்லாத மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா, இந்த கவலைக்கு மட்டும் காலாவதியாகும் தேதி இல்லை, இதை நீங்கள் நினைத்தால் தூக்கி எறியவும் முடியும், இல்லையென்றால் உங்களின் இறுதிவரை சுமக்கவும் முடியும்,

யாருக்கேனும் சுமை பிடிக்குமா, யாரேனும் ஒரு புண்ணை நேசிப்பார்களா, ஒரு வலியை விரும்புவார்களா, உடலில் ஒரு புண் ஒரு வலி வந்தால் என்ன செய்கிறோம் அதனை போக்க வலியை நீக்க நிவாரணம் எதுவோ அதையே தேர்ந்தெடுக்கிறோம், அப்படித்தானே கவலையும், கவலை வரும் போகும், இதை இழுத்துச் செல்வது நீங்கள் தான்,

மனிதனின் மனம் அப்படித்தான் இயங்கும், நீங்கள் நினைத்தால் அதை நொடியில் மாற்றி அமைக்க முடியும் கவலைப்படும் போது நமது மூச்சு சீர் குலையும், ரத்த ஓட்டம் தடுமாறும், செல்கள் சிதறும், எப்பொழுதும் கலை இழந்து காணப்படுவீர், கவலை வந்தால் ஆமாம் இது நிகழ்ந்து விட்டது,

இதை ஏற்றுக் கொள்ளத்தான்வேண்டும் என முழுமையாக அனுபவித்து, தேவைப்பட்டால் சத்தமிட்டு அழுது, இல்லை எங்கு செல்லத் தோன்றுகிறதோ அங்கு சென்று, அல்லது யாரையெல்லாம் சந்திக்க தோன்றுகிறதோ அவர்களை எல்லாம் சந்தித்து, இல்லை என்றால் அந்த கவலையை. போக்க எதனால் முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதை செய்து, அதை விட்டு வெளிவருவது உத்தமம்.,

கவலைகள் நோயின் விதைகள், அதனை நீங்களே உங்களுக்குள் விதைத்து, நீரூற்றி, உரமிட்டு, வளர்த்து விடாதீர்கள் பிறகு அறுவடை செய்வது கடினம், எல்லாவற்றிற்கும் ஒரு காலம் நிர்ணயித்து டாடா பாய் பாய் சொல்லி வெளியேறுங்கள், கவலைக்கு நீங்கள் சேவை செய்ய தொடங்கினால் அது உங்களை விட்டுப் விலகாது, நீங்கள் எப்பொழுதெல்லாம் கவலைப் படுகிறீர்களோ அப்பொழுதெல்லாம் கவலையான விடயங்கள் உங்களை நோக்கி ஓடி வரும், எப்பொழுதெல்லாம் அதை விட்டு வெளி வருகிறீர்களோ அப்பொழுது மகிழ்ச்சியான விடயங்கள் உங்களை நோக்கி ஓடி வரும்,

கவலை ஒரு கந்தல், கந்தலை யார் விரும்புவார்கள்., மகிழ்வை உடுத்துங்கள் காலை எழுந்தவுடன் கண்ணாடி கண்டு புன்னகையுங்கள் நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றீர் என்பதை கண்டு பெருமிதம் கொள்ளுங்கள் உங்களுக்கு நீங்களே முத்தமிட்டுக். கொள்ளுங்கள் அளவுக்கு அதிகமாக உங்களை நீங்கள் மட்டும் தான் நேசிக்க முடியும் உங்களை நீங்கள் நேசிக்க தொடங்கிய நொடி முதல் எதிர்மறையான எதுவும் உங்களை நெருங்காது வாழ்க்கை யென்றால் எல்லாமும் இருக்கும்

இனிப்பு மட்டும் இருந்தால் எப்படி இருக்கும் எல்லா சுவைகளும் தேவையான ஒன்றுதான் நாம் சமைக்கும் போது சில சுவைகளை சேர்த்தால் தான் எல்லாம் கலந்த பின்னொரு சுவையான உணவு கிடைக்கும் அதுபோல்தான் இதுவும் எது வந்தாலும் இது எனக்கு எதோ ஒன்றை சொல்லி தர வந்துள்ளது என நினைத்தாலே போதும், எவ்வளவு பெரிய துயரமானலும் சரி அதை விட்டு வெளியேறுங்கள்வாழ்வு சிறியது ஆரோக்கியம்பெரியது உயிரும் உடலும் முக்கியம்



மகிழ்ச்சி இல்லையென்றால் கூட பரவாயில்லை கவலையை விட்டு மட்டும் வெளிவந்து விடுங்கள்,

இல்லையென்றால் இறைவன் நினைத்தாலும் உங்களை காப்பாற்ற இயலாது. நீங்கள் இந்த பூமிக்கு வந்தது உங்களுக்காக உங்களை நீங்களே கைப்பற்றி காப்பாற்றிக் கொள்ளுங்கள். மீண்டும் ஒரு பதிவில் வருகின்றேன்

நன்றியும் மகிழ்ச்சியும்

நாகேஸ்வரி (கருவாச்சி) திரைத்துறை,
சென்னை தமிழ்நாடு

# வெண்பா போட்டி 45

**காலம் : செப்டெம்பர் 2025**

மசக்கை வரும்போது வாந்தி வரலாம்
அசைவு உணரும் வரையில் - அசைவம்
உட்கொள் இடுப்பு சுருக்கால் சுருளாதே
சட்டிவெந்நீர் ஊற்றியே வா.

**சக்தி.க.மகராசி**

.

நாள்தள்ளிப் போனதெலாம் நன்றுதான் ஆனாலும்
ஆளுக்காள் சொல்லும் அறிவுரைகள் - கேளாதே
நல்லுணவு நன்னூல்கள் நல்ல நடவடிக்கை
எல்லாமும் கொண்டே இயங்கு.

**அன்புவல்லி தங்கவேலன்**

.

நிம்மதியாய் தூங்கவேண்டும் நீண்டநேரம் கண்விழித்துச்
சும்மா இருக்கவேண்டாம் சூழ்திடவே - பம்பரமாய்ச்
சுற்றியோடக் கூடாது தித்திக்கச் சாப்பிடு
பற்றுடன் பிள்ளைவளர்ப் பாய்.

**பா.இந்திரன்**

.

பப்பாளி அன்னாசி பால்கோவா சீனிவகை
தப்பாமல் நீக்கனும் தாய்மார்கள் - எப்போதும்
காய்கனிகள் குங்குமப்பூ காராம் பசுவின்பால்
சேய்க்கது நல்லதாம் சேர்!

**பாவலர் கோவதன், மலேசியா**

.

கருவுற்றப் பெண்மணியே காத்திடுவாய் காயம்
திருவுற்றச் செல்வம் சிறக்க - விருப்புடனே
சத்துணவும் சாலக் கனிவகையும் சாப்பிட்டுப்
பத்திரமாய்ப் பிள்ளையைத் தா.

**ப முருகன் யோகீஸ்வரர்**



.

ஓய்வெடுத்து நல்லவற்றை உள்ளத்தில் ஏற்றிவா!
காய்கறிகள் நன்குண்! கடினமின்றித் தாய்மையின(து)
அன்பொழுகும் புன்னகையால் ஐயிரெண்டு திங்களில்
இன்மகவைத் தன்னாலே ஈந்து.

**மாலதி திரு**

.

ஊட்டம் நிறைந்த உணவும் கனிவகையும்
வாட்டத்தைப் போக்க விரும்பியுண் - சட்டமாய்ப்
பாட்டியிடம் பத்தியம் பற்றித் தெரிந்துகொள்
வீட்டுவேலை செய்தால் வியப்பு!

**கீதா அருண்ராஜ்**

.

இனிமை தருகின்ற இன்னிசைப் பாடல்
கனிவாய் கசிந்துருக பக்தி - நனிமிகு
நல்லதொரு புத்தகம் நாள்தோறும் வாசிப்பும்
எல்லாம் பழக சிறப்பு

**பாவலர் ஞால ரவிச்சந்திரன்.**

.

முடிந்திடும் வேலைகள் முற்றாகச் செய்க
கடிந்திடும் சொற்கள் களைக - படிந்த
நிலத்தில் பயிற்சி நடத்தல் சிறப்பே
நலத்தில் கவனமே நாடு.

**பொ.முத்துராக்கு.**

.

கருவளர நல்லுணவு கச்சிதத்தைப் பேணி
மருந்தென உண்ணுதல் மாண்பு - பொருந்தும்
பயிற்சியைச் செய்திடும் பண்பும் நலமாம்
வயிற்றினில் பிள்ளை வளர்ச்சி !

**எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.**

.

கண்மணி கேளாய் ! கருவளர்ந்து காலமொன்றில்
தண்ணிலவாய்ப் பிள்ளை தரைதவழும்! - மண்ணிலே
சத்துணவு நாளும் சலிக்காமல் நீயெடுத்துப்
பத்தியம் பார்த்திருப் பாய் .

**இரா சம்பந்தன், யேர்மனி**



வளர்ந்துவரும் நின்சிசு வாகாய்ப் பிறக்க,
உளம்நிறை அன்புன்னுள் ஊற்றாய் - மிளிர,அம்மே!
ஊட்டத்தை நல்கும் உணவுகள் உட்கொண்டு,
நாட்டமுடன் நல்வினைகள் நாட்டு.

**வானதி சந்திரசேகரன்**

.

மாங்காய்ப் பிடிக்கும் மசக்கையின் காலத்தில்
பாங்காய் எடுப்பாய் பலகாரம் - தீங்காகும்
சூட்டைத் தணிக்கச் சுகமே பிரசவம்
வாட்டிடும் வலியும் விடும்.

**பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை**

.

கண்போல் கருவினைக் காத்து வளர்த்திடு!
எண்ணமதில் வாய்மையை ஏற்றிடு!-மண்ணிலே
கண்ணன் வருவான் கவலைவிடு! பிள்ளைகளே
பெண்மையிங்கே பெற்றபெரும் பேறு !

**பாஸ்கரன் ராம்**

.

அன்பு மகளேநீ ஆகிறாய் அன்னையாக,
துன்பக் கவலை துறந்திட - என்றுமே
உண்டி டளவாய் உறக்கமும் கொண்டிடு,
கண்ணன் பிறந்திடுவான் காண்...!

**செண்பக ஜெகதீசன்.**

.

அப்பத்தா லேகியம் அன்றாடம் சேர்த்துக்க
அப்பாப்போல் கோபந்தான் ஆகாதே - எப்போதும்
தப்பாது தாய்ப்பாலு தந்தாகக் காய்கறியும்
எப்பாடு பட்டாலும் ஏல்

**மன்னை மணிமாறன்**

.

உடலும் உனக்குள்ள உள்ளமும் நன்றாய்த்
திடமாக வைத்து திருநா - படவே
நலமாகக் கொண்டு நயமாய்ப் பெறுக
கலக்கம் தவிர்த்துடன் கா.

**கு. கதிரேசன்**

.



நல்லதோர் செய்தியினை நானறியத் தந்தவளே
செல்வதனைக் கேட்டறிவாய் செல்லமே! - நல்லுணவு
நாளும் உடற்பயிற்சி  நன்மைதரும் தாய்சேய்க்கு
கேளு சிறக்கும் பிறப்பு!

**அ.வள்ளிபாபு, நெய்வேலி.**

.

மெல்லிசை கேட்டுநட மேனி நலம்போற்று
சொல்லில் கனிவு சுகங்கூட்டு - வெல்லும்
கதைப்படித்து வேகக் கணிதமிடு பிள்ளைப்
புதையலெனக் காண்பாய்ப் பிறப்பு.

**கவிஞர் இரா.ச.பத்மநாபன் தஞ்சாவூர்**

.

கருவுற்ற செய்தி கரும்பா யினிக்க
விருந்து தருவேன் விரைந்தாய் - அருமை
மகளே தினமும் மறவாமல் உண்பாய்
திகட்டும் கனிகளைத்தேர்ந்து.

**தன்ராஜ் பாப்பணன்**

.

நாட்டமும் கொண்டிடுவாய் நல்ல உணகளில்
பாட்டுடன் நூல்கள் படித்திடுவாய் - வீட்டினில்
வாட்டமு மில்லா வகையறிந்து வேலைகளில்
கூட்டிப் பெருக்கும் குனிந்து.

**பாவலர்மணி நிறைமதி நீலமேகம்,  பெண்ணாடம்.**

.

சத்தான காய்கறிகள் சந்தையிலே வாங்கிவந்து
நித்தமும் நன்றுண்க நீயிங்கே - முத்தழகே
மாடிப் படியேறி மாகுடத்தைத் தூக்காதே
பாடிடுக செந்தமிழ்ப் பண்.

**பாவலர் தாழை ந. இளவழகன்,  மணப்பாறை.**

.

மனத்தில் நிறைவும் மகிழ்வும் சிறக்க
உணவினில் சத்தினைச் சேர்த்து  - முனைந்து
காய்கனி கீரை கவனமாய் உண்டிடுவாய்
ஒய்வெடுப்பாய்   நன்றே உணர்

**ஒசூர் மணிமேகலை**

.



திருவருள் செய்த திருவான காலம்
கருவுற்ற பெண்ணேயென் கண்ணே - கருத்தாய்
தினமும் நிறையுணவு! தேவையான ஓய்வு
மனமகிழ்வாய்க் கொள்வாய் மகள்.

**ரூபா அன்ரன், சுவிற்சர்லாந்து**

.

நல்லநல்ல நூல்களையே நாளும் படிதேடி!
எல்லையில்லா இன்னிசையை என்றுங்கேள்! - வல்லாரை
சேர்த்துண்ண ஊட்டந்தான் சீராகும் பாலருந்து!
நீர்குடிப்பாய்! நன்றாகும் நீந்து!

**பிரியங்கா மோகன், பிரித்தானியா**

.

இடைகுனிந்து பாரம் எடுக்காமல் நன்றாய்
நடைபயிற்சி செய்திடுவாய் நாளும் - கடைபண்டம்
தின்னாமல் நற்கனிகள் தின்றுடலைப் பேணிடுவாய்
என்மகளே கர்பத்தின் போது.

**பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்**

.

முத்தான பிள்ளை முழுமையாய்ப் பெற்றிட
சத்தான காய்கறி சாப்பிடு - கெத்தே
சுகமான பிள்ளை சுருக்க வெளியில்
அகத்தில் பரவும் சுகம்

**சோ சுந்தரேசுவரி.**

.

தொல்லை தருமே தொலைபேசி பாரிலே
சொல்லிடக் கேளு சொடுக்காதே - நல்லவை
கொண்டன நூல்களே! கொஞ்ச முலாவிட
அண்டும் மகவும் அறிவு.

**எஸ். நேசன்.**

.

பெண்ணென்றும் ஆணென்றும் பேதங்கள் வேண்டாவே
கண்ணென்றே சேய்தனைக் காண்பாயே - மண்போல்
மருத்துவச் சொல்லை மதித்தே, மகளே!
கருத்தாய்க் கருவினைக் காண்.

**செல்லமுத்து, மேல்மங்கலம்.**

.



வாயும் வயிருமாய் வந்த மகளுக்குச்
சேயும் பிறந்திடச் செல்லமாய்த் - தாயுமே
காயும் கனியும் கனிவாய்க் கொடுத்திட
பாயும் புலிபிறக்கும் பார்.

**பாவலர் க.சண்முக சிதம்பரம்**

.

அருமை மகளே அறிவுரை கேட்பாய்
கருவுற்ற போது கனிவாய் இருப்பாய்
திருவின் அருளால் திருப்பம் நிகழும்
வருங்காலம் வாழ்த்தும் வணங்கு.

**கவிஞர் க.தங்கவேலு, கிருட்டிணகிரி**

.

சத்தாய் உணவுகளைச் சாப்பிட்டால் நன்றாகும்
சித்த மருத்துவத்தைச் சிந்திப்பாய் - சொத்தாக
நல்லதொருப் பிள்ளை நலமுடன் வந்துதிக்கும்
மெல்ல நடைபயிலல் மேல்.

**பாவலர்மணி வா.சண்முகம்.**

.

நாளும் நடைப்பயிற்சி நல்ல உணவுவகை
ஆளும் திறன்வளர்க்கும் ஆன்றோர்நூல் - வாள்நுதலோய்..!
ஓய்வும் மகிழ்வும் உடனடி செக்கப்பும்
தாய்சேய்க்குத் தக்கத் தகவு..!

**வள்ளி முத்து**

.

மசக்கை படுத்திடும் மாபாடுக் காலை
கசக்கும் நாவால் கடிப்பாய்க் கசக்காத
பண்டமதைப் பின்னர் பருகுவதால் மீண்டும்
திண்ணமாக வாந்திவரா தே.

**குயில்.மு.இரசியா பேகம்.**

.

நெல்லிக் கனிதனை நித்தமும் உண்டிட
நல்லனவாய்ச் சத்துக்கள் நாளத்தில் - செல்லுமே
மல்லி மிளகு மசாலா வொதுக்கியே
நல்லதை உண்டால் நலம்.

**கே.கல்பனா, திருவனந்தபுரம்**

.



அப்பாநான் உன்னிடத்தில் அன்புடனே சொல்வதெல்லாம்
தப்பாமல் நன்னூல்கள் தான்படிப்பாய் - எப்போதும்
சும்மா உறங்கும் சுகம்வேண்டாம், மேற்கொண்டு
அம்மாவின் சொற்படிகேள் ஆம்!

**முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.**

.

காய்கள் பழங்கள் நிறையவே உண்ணடி
வாயிக்கு என்ன விருப்பமென்று சொல்லடி
தாய்க்கு தெரிந்தாலும் நான்கூடச் சொல்கிறேன்
தாய்மை சிறப்பு இனி.

**மருத்துவர் தேவி**

.

சத்தான ஊட்டம் சமமாய் எடுத்திடு
புத்தகம் வாசிப்பாய் பூஞ்சோலை - சுத்துவாய்
தெண்ணீர் குடித்துநீ தேகத்தைத் காத்திடுவாய்
எண்ணத்தில் நல்லதையே ஏற்று.

**குலா கிருஷ்ணா, ரொறொன்ரோ - கனடா**

பத்துமாதப் பந்தம் புதுவரவை ஏற்றிட
நித்தம் உடற்பயிற்சி நன்றாகும் - சத்தியமே
பத்தியமாய்ச் சாப்பிட்டு பாங்காய் இருந்திட
முத்தாய் மழலையைக் காண்.

இரும்பும் பிறசத்தும் ஈர்க்குமந்த உடம்பு
விரும்பிநீ உண்டிடவே வேண்டும் - மருந்தும்
உருவாய் வளர உணர்ந்த கணமும்
கருவினைக் கண்ணெனப் பேண் .

**கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.**

காலங் கடந்து கருவுற்ற தோழியே
காலந் தவறாது காய்கனியும்- மாலம்பூ
பாலில் கலந்து பருகி வருவதோடு
வேலிறை பாதுகாப்பு வேண்டு



நாளும் நடைப்பயிற்சி நல்வளம் சேர்க்குமே
தாளும் தடையின்றி தாங்குமே  - நீளும்
தளர்வெல்லாம் வீழ்ந்து துணிவு பிறக்கும்
பளபளக் கும்சருமம் பார்

**ம.பழனிச்சாமி,  திருப்பூர்**

மாங்காய்ப் பிடிக்கும் மசக்கைப் பொழுதினில்
ஏங்கும் மனத்தினில் எப்போதும் - தாங்கிடத்
தூங்கிடும் சாம்பல் துளிகளைத் தேடியும்
வாங்கும் வரமாகி வந்து .

வந்துவந்து சீராட்டும் வாடா மலரென
உந்துகின்ற சக்தி உடற்பயிற்சி - தந்தேகும்
நொந்த மனமின்றி நோய்களுந் தொற்றிடா
முந்துங் கருவால்  முனைந்து .

நல்லான் மகளே நினைவுகொள் கர்ப்பத்தில்
பொல்லா உணவைப் புறந்தள்ளு - மெல்லநட
முன்னோர்தான் சொன்ன முறையைக் கடைப்பிடி
நன்நீர் அருந்தல் நலம்.

**சரஸ்வதி பாஸ்கரன்**



# வெண்பாப் போட்டி (பயணம்) 46

**போட்டியின் கால அளவு :** அக்டோபர் **01** முதல் **12** வரை **2025**

இம்மாதப் போட்டி....

.

## அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்

.

**தீபாவளிப் பட்டாசுகள் கொளுத்தும் போது குழந்தைகள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகளில் ஏதேனும் உங்களுக்குத் தெரிந்த ஒன்றை வெண்பாவாகச் சொல்வதே இம்மாதப் போட்டி ஆகும்.**

(எ-கா) பாடல் : --

.

*வெடிக்காமல் போன வெடிதன்னை மீண்டும்*
*துடிப்போடு கையால் தொடாதே - அடியெடுத்(து)*
*அப்போதே தூரம் அகன்றுவிட்டால் அந்நாளில்*
*எப்போதும் ஆபத்(து) இலை..*

நன்றி🙏

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

.

பொதுவான விதிகள் :- ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.
வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....
வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகி ருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டா' வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு



# பெரியார் அண்ணா கலைஞர்

இராவென இருந்த மண்ணை
எழாமலே வாழ்ந்த மண்ணை
பராடமாய் இருந்த மண்ணைத்
பலாவென ஆட்சி செய்தே
தராதரம் ஆக்கி இங்கே
தராசினில் வைத்த இந்தத்
திராவிட மாடல் தான்னைத்
திசாலமே போற்று தையா
.
மூடநம் பிக்கை தன்னை
முற்றிலும் ஒழித்து நாளும்
ஈடறு சிறப்பைத் தந்த
ஈரோட்டார் இல்லை என்றால்
வாடலும் வறுமை உற்றும்
வாழ்க்கையே இல்லா தாகி
மூடரால் நாடெல் லாமும்
முற்றுமே அழிந்தி ருக்கும்
.

முன்முதல் திராவி டத்தின்
மூத்தநல் தலைவ ராகி
இன்தமிழ் நாட்டின் ஒன்றாம்
ஈடில்லா முதல்வ ராகிப்
பன்முகம் கொண்ட அண்ணா
பைந்தமிழ் இனத்தா ருக்கு
இன்னமும் வழியைக் காட்டும்
இனியநல் மனிதர் ஆவார்
.
இவ்விரு மாந்தர் இங்கே
இயற்றிய பாதை மேலே
செவ்வனே சென்று சென்று
செழிப்புடன் இதுநாள் மட்டும்
நவ்வார்கள் தீண்டா வண்ணம்
நாட்டினை ஆக்கி வைத்து
மவ்வமாய்க் கலைஞர் இங்கே
மானுடத் தலைவர் ஆவார்

தமிழ்நெஞ்சம் அமின்




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்